(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ஆனந்தஹு சித்திரைமீ—APRIL 1914. | ஸஞ்சிகை 4. No. 4.

பொருளடக்கம்.

வியாஸங்கள்—	பக்கம்.
உரங்கள்	... 170
சாஸ்த்ரமும் விவஸாயமும்	... 172
நெல்வயலில் காய்கறி சாகுபடி	... 173
பால்பண்ணைச்சாலைகள் ஏற்படுத்துதல்	... 174
வெங்காயத்தை பத்ரப்படுத்தி வைத்தல்	... 176
விவஸாயத்திற்கு ஸர்க்கார் உதவி	... 177
தென்னாப்ரிக்காவில் இந்திய விவஸாயி	... 178
குள்ளவாத்து வளர்த்தல்	... 179
காய்கறிகளை விற்பனை செய்தல்	... 181
கோவாபரேஷனுக்கு அவச்யமான ஸாதனங்கள்	... 183
வ்யாபார விளம்பரம் —எம். கோபாலன், நாகபட்டணம்	... 185
போதனா சாஸ்த்ரத்தில் ஆராய்ச்சிகள்	... 189
பள்ளிக்கூடங்களில் வெளிச்சம்	... 191
வாய்ப் பேச்சான ஒப்பந்தமும் குத்தகைக்கு விடுதலும்	... 193
தூக்கமின்மைக்கு சிகித்ஸைகள்	... 197
ம்ருகங்களின் ஸன்மார்க்க விதிகள்	... 201
ருதுவானபின் கல்யாணம்	... 205
டின்ஷா எடல்ஜி வாச்சா	... 209
கடவுள் உண்டென்பது	... 211
விவஸாயப் பகுதி	... 170
கோவாபரேஷன் பகுதி	... 181
வியாபாரப் பகுதி	... 185
வித்யாவிஷயப் பகுதி	... 189
வ்யவஹாரப் பகுதி	... 193
ஸுகாதாரப் பகுதி	... 197
பையன்கள் பகுதி	... 201
ஸ்த்ரீகள் பகுதி	... 205
ஜீவ்ய சரித்ரம்	... 209
சிறு கதைகள்	... 211
பகுதிக்குறிப்புகள்	... 213
மாஸ வர்த்தமானம்	... 217
காலஸ்திதி	... 223
பஞ்சாங்கம்	... 224

CONTENTS.

Articles—	PAGES.
FERTILIZERS	... 170
SCIENCE AND AGRICULTURE	... 172
CULTIVATION OF VEGETABLES ON PADDY SOILS	... 173
DAIRY FARMING	... 174
KEEPING ONIONS	... 176
STATE AID FOR AGRICULTURE	... 177
THE INDIAN AGRICULTURIST IN SOUTH AFRICA	178
DUCK FARMING	... 179
MARKETING VEGETABLE PRODUCTS	... 181
ISSENTRALS OF CO-OPERATIVE WORK	... 183
TRADE ADVERTISEMENT —M. Gopalan, Negapatam	... 185
EXPERIMENTS IN THE SCIENCE OF EDUCATION	... 189
THE TIGHTINGL OF SCHOOLS	... 191
ORAL AGREEMENT AND LEASE	... 193
CURES FOR SLEEPLESSNESS	... 197
THE MORAL CODE OF ANIMALS	... 201
MARRIAGE AFTER PUBERTY	... 205
DINSHAW EDULJI WACHA	... 209
EXISTENCE OF GOD	... 211
The Agricultural World	... 170
The Co-operative World	... 181
The Commercial World	... 185
The Educational World	... 189
The Legal World	... 193
The Sanitary World	... 197
The Boys' World	... 201
The Ladies' World	... 205
Biography	... 209
Short Stories	... 211
Departmental Notes	... 213
Diary of the Month	... 217
Season Report	... [illegible]
Calendar	... [illegible]

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

NATESAN & Co.'s NATIONAL LITERATURE.

PRICE ANNAS 4.

Every one of the volumes, big and small, Messrs. Natesan have of recent years published contains views of India and Indian current history and forms most reliable references of the great social and mental movements now pulsating throughout India. We would suggest that all their publications of the sort of the volumes now before us be classed as The Indian National Library Series, for beyond question their publication is forming a library of national literature for India—Moulmein Advertiser, Burma.

The "Friends of India" Series.

This is a new Series of short biographical sketches of eminent men who have laboured for the good of India, which the Publishers venture to think will be a welcome addition to the political and historical literature of the country. These biographies are so written as to form a gallery of portraits of permanent interest to the student as well as to the politician. Copious extracts from the speeches and writings of the "Friends of India" on Indian Affairs are given in the sketches. Each volume has a frontispiece and is priced at As. 4 a copy.

Lord Morley
Lord Ripon
Sir William Wedderburn
Mrs. Annie Besant
Lord Minto
Edmund Burke
Sister Nivedita
Charles Bradlaugh
John Bright
Henry Fawcett
Mr. A O. Hume
Sir Henry Cotton
Lord Macaulay
Rev. Dr. Miller, C.I E.

Price As. 4 each.

One dozen at a time As. 3 each.

SELECT PRESS OPINIONS.

The Harvest Field—The little books are written in a pleasant style, and contain extracts from the important speeches of these men.

The Empire.—Admirable little biographies.

The Guzrati Mitra.—The value of these publications lies in the accuracy of the matter presented therein, and a modest and faithful portrayal of the men about whom they relate

The New Monthly.—The narrative is clear and concise.

INDIAN TALES.

AMUSING READING.

Tales of Raja Birbal
New Indian Tales
Tales of Komati Wit and Wisdom
Tales of Tennali Raman
Tales of Raya and Appaji
Folklore of the Telugus
Tales of Mariada Raman
The Son-in-Law Abroad

4 As each.

POLITICAL.

The Reform Proposals
Sedition or no Sedition
Indian Railway Finance
Near Future of Imperial Finance
Indian Military Expenditure.

4 As. each.

RELIGIOUS.

Hindu Psalms and Hymns
Aggressive Hinduism
Maitreyi, A Vedic Story
Hindu Social Ideals
Recent Indian Finance
Arya Bhatta

4 As. each.

Dozen at a time 3 As. each.

India's Annual Congress and Conferences.

Containing the Inaugural and Presidential Addresses delivered at the Sessions of the Congresses and the Industrial, Social, Thiestic and Temperance Conferences held at Calcutta, Surat, Madras, Lahore & Allahabad. 5 Uniform Vol. As 6 each.

All together Rs. 1-14.

MISCELLANEOUS.

Nation Building
Bagavad-Gita
Rudyard Kipling
Freedom and Casuality

At 2 As. each.

BIOGRAPHIES OF EMINENT INDIANS.

Each Volume besides giving a succinct biographical sketch contains copious extracts from the speeches and writings of the personages described The Series has been pronounced by the Press to be "the most welcome addition to Indian biographical and critical literature." Each volume has a frontispiece.

Dadabhai Naoroji
Sir P M. Mehta
Dinsha Edulji Wacha
Mahadev Govind Ranade
Sri Ramakrishna Paramahamsa
Swami Vivekananda
Hon. Mr. G K. Gokhale
Dr. Rash Behari Ghose
Lala Lajpat Rai
Ravi Varma
Toru Dutt
K. T. Telang
Surendranath Banerjee
Romesh Chunder Dutt
Ananda Mohan Bose
W C. Bonnerjee
Budrudin Tyabji
Sir Syed Ahmed
Lal Mohun Ghose
M. K. Gandhi
Madan Mohun Malviya
Babu Kristo Das Pal
R. N. Mudholkar
Swami Ram Tirath
V. Krishnaswami Aiyar, C.S.I.
Dewan C. Rangacharlu
Rahimtulla Monhmed Sayani
Iswara Chandra Vidyasagar
Rt. Hon. Sir Syed Amir Ali
H H. The Gaekwar of Baroda
Mrs. Sarojini Naidu
Rabindranath Tagore
Behramji M. Malabari

Price As. 4 each.

One dozen at a time 3 As. each.

G. A. NATESAN & CO., Booksellers, 4, Sunkurama Chetty Street, Madras.

SUPPLEMENT TO THE "PRACTICAL LIFE."
'பிழைக்கும் வழி' க்கு அனுபந்தம்.

DINSHAW EDULJI WACHA.
டின்ஷா இடல்ஜி வாச்சா.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ஆநந்த ஞு சித்திரைமீ, APRIL 1914. | ஸஞ்சிகை 4. No. 4.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of *general information and instruction* devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for *use in the agricultural stations* and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
Single copy ...	0 6 0	... ...	0 8 0
Sample copy ...	0 4 0	... ...	0 6 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	... 5 0 0	per month.
½ do	... 2 8 0	do
¼ do	... 1 4 0	do
1/10 do	... 1 0 0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்ய நாடு.
வருஷம் 1 க்கு ...	4 0 0	...	6 0 0
தனிப்ரதி ...	0 6 0	...	0 8 0
மாதிரி காபி ...	0 4 0	...	0 6 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு		5 0 0
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0
1/10 பக்கத்திற்கு	,,	,,	1 0 0

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

FERTILIZERS.

உரங்கள்.

விவஸாய இலாகாவைச் சேர்ந்த ஸி. எம். கானர் என்பவர் "பிலிப்பைன் அக்ரிகல்சுரல் ரிவியூ" என்ற ஓர்விவஸாய பத்ரிகையில் உரங்களைப்பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:—

செடிகளுக்கும் செழிப்பாய் வளர்வதற்கு ப்ராணிகளைப்போல் உணவு வேண்டியது அவசியம். ஆனால் பயிர்செடிகளின் உணவு ப்ராணிகளின் உணவுகளைப் போலல்லாமல் பூமி, காற்று இவைகளிலிருந்து க்ரகிக்கப்படுகிறது. செடிகள் போதுமான அளவு பயிருணவும் உஷ்ணமும் கிடைக்கும்பக்ஷத்தில் செழிப்பாய் வளர்ந்து நல்ல பலனைத் தருகின்றன. தக்கபடி உணவும் உஷ்ணமும் கிடைக்காவிட்டால் ஸ்வல்ப பலனை தருகின்றன. ஒரு நிலம் ரொம்ப செழிப்பானதாயிருந்து அதில் ஏராளமான பயிர் முளைத்தாலாவது அல்லது பயிருடன் களைமுதலிய புல் பூண்டுகள் அதிகமாய் முளைத்தாலாவது அந்தபயிருக்குவேண்டிய வெயிலும் காற்றும் கிட்டாதாகையால் விளைச்சல் குன்றிப்போகும். விவஸாய சீர்திருத்தமாவது— பயிருக்கு வேண்டியளவு உணவைக் கொடுத்து களையெடுத்து சுத்தமாய் வைத்துக் கொள்வது தான். இம்முறையை அடிக்கடி கவனிக்காவிட்டால், பயிர் செடிகளானாலும் ப்ராணிகளானாலும் நாளடைவில் பூர்வ ஸ்திதிக்கு வந்துவிடும். ஆகையால் ஒரு நல்ல மாஸூல்கிடைக்க பயிரை களையெடுப்பதுடன் அந்தப் பயிருக்குத்தக்க உணவு வேண்டியளவு கொடுக்கவேண்டும். சிலபூமியில் பயிருக்கு வேண்டியளவு உணவு இருக்கலாம். அப்படிப்பட்ட நிலங்களில் உரங்களை விசேஷமாய் உபயோகிக்க வேண்டியதில்லை. ஆகிலும் ஒரு பயிருக்கு வேண்டிய ஸத்துக்கு ஒருஅளவு உண்டு. அந்த அளவுக்கு மேற்பட்டு உரம் பூமியிலிருந்தாலும், அல்லது நாம் போட்டாலும, அந்தப் பயிரிலிருந்து எவ்வளவு பூராமாஸூல் கிட்டுமோ அதைவிட ஜாஸ்தியாய் கிடைக்காது. அதே மாதிரி ஒரு ப்ராணிக்கு எவ்வளவு தீனி போட்ட போதிலும், அந்த ஜாதி எவ்வளவு புஷ்டியாய் ஆகக்கூடுமோ அவ்வளவுதான் ஆகுமே யொழிய, அதைக் காட்டிலும் புஷ்டியாய் ஆகமுடியாது. தானாகவே முளைக்கும் அநேக செடிகள் பூராவும் வளர்கிறதில்லை. ஏனென்றால் பக்கத்தில் விசேஷமாய் களை முளைத்திருப்பதோடுகூட வேண்டிய உஷ்ணம், காற்று ஆகிய இவைகள் கிட்டுவதில்லை.

பயிர்கள் நிலத்தின் மூலமாயாவது, அல்லது விவஸாயிகள் போடும் எரு, உரங்கள் மூலமாயாவது எடுத்துக்கொள்ளும் ஸத்துக்களில் முக்யமானவை நைட்ரஜன் (Nitrogen,) பாஸ்பாரிக் ஆஸிட், (Phosphoric acid) பொடாஷ், (Potash,) சுண்ணாம்பு (lime) ஆகிய இவைகளே. இவைகளைத் தவிர இன்னும் இதர ஸத்துக்களும் தேவை. அவைகள் வேண்டியளவு அநேகமாய் எல்லா பூமிகளிலும் இருக்கின்றன. நிலங்களிலிருக்கும் பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ், சுண்ணாம்பு ஆகிய இவைகள் ஆதியில் பாறைகளிலிருந்து உண்டாயின. பாறைகளின்மேல் வலுத்த காற்றடிக்கும்போது அவைகள் பொடியாகி அந்தப் பொடியை மழை கீழே அடித்து வருகிறது. இம்மாதிரி பாறைப்பொடிகள் விசேஷமாய் கீழேவர அவைகளிலிருக்கும் ஸத்துக்கள் நாளடைவில் பயிருணவாகக்கூடிய தன்மைக்கு வருகின்றன.

இம்மாதிரி மண் அதிகமாய் சேரச்சேர செடிகள் முளைக்க ஆரம்பிக்கின்றன. இச்செடியில் இருக்கும் ஆஸிட்டானது (acid) பாறைப் பொடிகளில் படுவதினால் அவைகள் மணல்களாக ஆகின்றன. செடிகளின் இலைகள் அழுகியாவது காய்ந்து சருகாகவாவது பூமியில் விழும்போது அவைகள் நாளடைவில் மக்கி பூமியை செழுப்பிக்கின்றன. இதற்குத்தான ஹ்யூமஸ் (humus) அல்லது மக்கின இந்திரிய வஸ்துவென்று பெயர். இந்த ஹ்யூமஸ் பூமியில் விசேஷமாய்ச் சேருவதால் பயிருக்கு வேண்டிய தண்ணீரை கடற்பஞ்சைப்போல் பிடித்துக் கொள்ளுகிறது. இதனால்தான் ஹ்யூமஸ் உள்ள பூமியில் எப்போதும் ஈரம் இருக்கிறது. மணற்பாங்கான பூமியில்போடும் பயிரைவிட ஹ்யூமஸ் விசேஷமாயுள்ள இருமண்பாடு பூமியில் போடும் பயிர் கொஞ்சம் காய்ச்சல் பொறுக்கும். இந்த இந்த்ரிய வஸ்து பூராவும் மக்கினபிறகு அதிலுள்ள ஸத்து அதன்பின் போடும் பயிருக்கு உணவாகிறது.

ஒரு பூமியிலிருக்கும் பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ், சுண்ணாம்பு, இவைகளின் அளவு அந்த பூமி எந்தப்பாறையிலிருந்துண்டானதோ அதைப் பொருத்தது. அதாவது விசேஷ சுண்ணாம்புள்ள பாறையின்கீழ் இருக்கும் பூமியில் வேண்டிய சுண்ணாம்பு இருக்கும். சுண்ணாம்பில்லாத பாறைப் பக்கத்திலுள்ள பூமியில் சுண்ணாம்பு இராது. அந்த பூமி கொஞ்சம் ஆஸிட் (acid) தன்மையாயிருக்கும். பொடாஷ் உள்ள பாறையின்கீழ் இருக்கும் பூமியில் பொடாஷ் வேண்டியளவு இருக்கும். களிப்பு நிலங்களில் ஸாதாரணமாய் பொடாஷ் இருக்கும். பூமியிலிருக்கும் நைட்ரஜன் ஆதியில் காற்றிலிருந்து உண்டானது. இந்த நைட்ரஜன் நிலங்களில் அநேக வழியில் முக்யமாய் மொச்சை, பட்டாணி, காராமணி, கொள்ளு முதலிய பயறுவர்க்கங்களின் வழியாய் சேருகிறது. இச்செடிகள் அவைகளின் வேர்களிலுள்ள சிறுயிர்கள் மூலமாய் காற்றிலுள்ள நைட்ரஜனை க்ரஹிக்கின்றன. இந்த நைட்ரஜனால் இலை, தண்டு, தாள், நரம்பு, முதலியன அமைகின்றன. பிறகு செடிகள் அழுகி அல்லது மக்கி பூமியில் சேர்ந்தபோது இதிலிருக்கும் நைட்ரஜன் இதற்குப் பிறகு போடப்படும் பயிருக்கு உணவாகிறது. மழை ஸமயங்களில் இடிக்கும் இடியின் மின ஸாரத்தினால் காற்றிலுள்ள நைட்ரஜன் நைட்ரேட் (Nitrate) ஆக மாறி இந்த நைட்ரேட் மழையினால் அடிபட்டு மண்ணோடு சேர்கிறது. இவைகளைத்தவிர விசேஷ மக்கின இந்த்ரிய வஸதுள்ள பூமியில் நைட்ரஜன விசேஷமாய் இருக்கும். இந்த நைட்ரஜன் இந்த்ரியவஸ்துக்கள் மக்கி நைட்ரேட்டாக மாறிய பிறகுதான் உணவாகும். இப்படி மக்குவதற்கு பூமியை அடிக்கடி உழுது மண்ணைப் புரட்டுவதால் காற்றிலும் வெயிலிலும் பட்டு உணவாகும் தன்மைக்கு வருகிறது. பூமியின்செழுமையை அதாவது ஒரு பூமிக்கு ஏராளமான மகசூல் உண்டாக்கும் சக்தியை ரஸாயன சோதனையினால் முற்றிலும் நிர்ணயிக்க முடியாது. ஆனால், ரஸாயனசோதனையால் நைட்ரஜன், பாஸ் பாரிக் ஆஸிட், பொடாஷ், சுண்ணாம்பு ஆகிய இவைகள் எவ்வளவு இருக்கின்றன வென்பதை கண்டுபிடிக்க முடியும். இந்த நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ், சுண்ணாம்பு இவைகளில் எவ்வளவு பாகம் உணவாகுமென்பதை கண்டு பிடிப்பதற்கு விவஸாயசோதனையே முக்கியம். வாகர் துரை அவர்கள் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி நீக்ரோ தீவில் தான் செய்த கரும்பு ஸாகுபடியில் தன் அனுபவத்தை பின்வருமாறு எழுதுகிறார்:—

முதலில் ஒரு பூமியை ரஸாயன சோதனை செய்து பார்த்து பிறகு அந்த பூமியில் சேர்ந்தாற்போல் 10-வர்ஷம் கரும்பு ஸாகுபடியே

செய்து வந்து அதன்பிறகு ஸரியானபடி ரஸாயன சோதனைசெய்ததில் யாதொரு வித்யாஸமும் புலப்படவில்லையாம். இது கரும்பு ஸாகுபடிக்கு மாத்ரமல்ல. மற்றெல்லா ஸாகுபடிக்கும் அப்படியே. அப்போதைக்கப்போது உபயோகிக்கும் எருக்களினலும், உரங்களினலும் பயிர்கள் வளர்ந்தபோதிலும் நிலத்தில் ஸ்வபாவமாயுள்ள ஸத்துக்கள் விசேஷமாய் குறைவுபடுகிறதில்லை. இதனல் தான் உரங்கள் உபயோகிக்காவிட்டாலும் செடிகள் ஸ்வல்பமாகவாவது வளர்கின்றன.

பயிர்களுக்கு நாம் கொடுக்கும் உணவு, ஸத்துக்களாகிய நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ், சுண்ணும்பு ஆகிய இவைகள் அந்தந்தப் பயிர்களுக்கு தக்கஅளவு சேர்க்கப்படவேண்டும். ஏதாவது ஒரு ஸத்து விசேஷமாயுள்ள் நிலம் மற்றொருஸத்து குறைவினல் இளப்பமாகத்தான் இருக்கும். அதாவது ஒரு பயிருக்கு வேண்டிய பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் ஆகிய இவைகள் வேண்டியளவு இருந்து நைட்ரஜன் மட்டும் இல்லாவிட்டால், நைட்ரஜனும் வேண்டியளவு இருந்தால் எவ்வளவு மாஸூல் கிடைக்குமோ அவ்வளவு கிடைக்காது. இதேமாதிரி வேறு ஸத்துக்களெல்லாம் இருந்து ஏதாவது ஒரு ஸத்து இல்லாவிட்டாலும் குறைவாயிருக்கும் ஸத்தைப் பொருத்துத் தான் மாஸூல் கிடைக்கும். இதை விவசாய சோதனையால் கண்டுபிடிக்கலாம். அதாவது நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ், இந்த ஸத்துக்களுடைய அநேக சரக்குகளை பல அளவுகளில் ஒன்ருய்சேர்த்தும் பல அளவுகளில் தனித்தனியாயும் வயல்களில் உபயோகித்து ஸாகுபடி செய்துபார்த்தால் இன்னின்ன ஸத்துக்கள் எவ்வளவுவேண்டுமென்பதும் அவைகளில்லாமையால் பயிர்கள் எவ்வளவு குறைகின்றனவென்பதும் நன்ருய் விளங்கும்.

ஸாதாரணமாய் தழை பயிர்களாகிய அவுரி, தேயிலை போன்றவைகளுக்கு நைட்ரஜன் அதிகமாகவும், நெல் முதலிய தான்யப்பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாகவும், தாள்பயிராகிய கரும்புபோன்ற பயிர்களுக்கு பொடாஷ் அதிகமாகவும் வேண்டும். எல்லாப் பயிர்களுக்கும் ஸ்வல்ப அளவு சுண்ணும்பும் அவச்யம்.—சாஸ்த்ரீய உரம்.

SCIENCE AND AGRICULTURE.

சாஸ்த்ரமும் விவஸாயமும்.

கொஞ்சகாலமாய்த் தான் விவஸாயத்தில் சாஸ்த்ர ரீதியான ஆராய்ச்சிகள் செய்ய ஆரம்பித்திருக்கிருர்கள். விவஸாயம் ஸம்பந்தப்பட்ட மட்டில் சாஸ்த்ர ஆராய்ச்சியின் நோக்கம் என்னவென்ருல், விவஸாயத்தில் எப்படி அதிகமாக லாபம் எடுக்கலாமென்று கண்டுபிடிப்பதே. விவஸாயத்தில் சாஸ்த்ர அறிவை உபயோகித்துப் பலனடைய வேண்டுமென்ருல் அநேக பரீக்ஷைகள் செய்து பார்க்கவேண்டும். இந்தப்பரீக்ஷைகளை சாஸ்த்ர ஆராய்ச்சி சாலைகளிலும் வயல்களிலும் செய்து வரவேண்டும். விவஸாயத்தின் எல்லா பிரிவுகளிலும் சாஸ்த்ரிகள் ஆராய்ச்சிகள் செய்து வந்திருக்கிருர்கள். அந்த ஆராய்ச்சிகளால் என்ன பலன் கிடைத்திருக்கிறதென்பதைப் பார்ப்போம்.

முதலாவது நிலத்தைப் பற்றிய பரீக்ஷைகளால் மாஸூல் கிடைப்பதற்கு நிலத்தில் இன்னின்ன பொருள்கள் இருக்க வேண்டுமென்பதை நிர்த்தாரணம் செய்திருக்கிருர்கள். நிலத்தின் ஸ்தூலமான நிலைமையும். அதாவது நிலம் மணல் பாங்கானதா, களியானதா, ஜலம் தங்கியிருக்கக் கூடியதா, என்றிப்படிப்பட்ட நிலைமையும் நிலத்தில் செடிக்கு உதவக்கூடிய ரஸாயன வஸ்துக்கள் இன்னின்ன இருக்கின்றன என்பதாகிய ரஸாயன நிலைமையும் பயிருக்கு ஸாதகமாகவோ பாதகமாகவோ இருந்தால்

விளைச்சலும் நல்லதாகவோ கேவலமாகவோ இருக்கும் என்பதை யறிந்ததன்மேல் ஜனங்கள் நிலத்தின் ஸ்தூலமான நிலைமையைச் சீர்திருத்தத் தகுந்தபடி நிலத்தை உழுது பண்படுத்தியும் எந்தப் பயிருணவாவது குறைந்திருந்தால் அதைச் சரிப்படுத்த அதை வேண்டிய அளவு நிலத்துக்கு இட்டும் தக்கபடி ஸாகுபடி செய்து வருகிறார்கள். மாடு சாணம்போட்டவுடன் அதைக்காப்பாற்றிவைக்கும் முறைக்குத் தகுந்தபடி அதன் உபயோகமும் தன்மையும் மாறிப் போகிறதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிலுள்ள நைட்ராஜன் சதமாய்ப் போகாதபடி அதைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய முறைகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மாட்டின் மூத்ரமும் நல்ல எருவாகும் என்பதை யறிந்து அதை பத்ரப்படுத்துவதைப் பற்றி ரொம்ப ஜாக்ரதை எடுத்து வருகிறார்கள். பற்பல செயற்கை உரங்களை உபயோகிப்பதால் நல்ல மாஸுல் கிடைக்கிறதென்பது அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறது. மேலும் செயற்கை உரங்களை மலிவாகத் தயார் செய்ய முறைகள் கண்டுபிடிக்கவே செயற்கை உரங்களை விவஸாயிகள் அதிகமாக உபயோகித்து வருகிறார்கள்.

கோதுப்பயிர்கள் ஸாகுபடி செய்வதால் அவைகள்ள ஆகாயத்திலுள்ள நைட்ரொஜனை நிலத்தில் சேர்க்கின்றன என்னும் விஷயம் கண்டறியப்பட்டிருக்கிறது. இன்னும் நிலத்தில் பாக்டீரியாக்கள் என்னும் ஸூக்ஷ்ம ஜீவராசிகள் இருந்து பயிர்களுக்கு உதவியாயிருப்பதை யறிந்து அந்த ஜீவராசிகளை சாஸ்த்ர சோதனைச்சாலைகளில் வ்ருத்திசெய்து நிலத்தில் சேர்க்க முயற்சி செய்து வருகிறார்கள்.

நிலத்தில் நைட்ராஜன் தங்காமல் வெளிப்பட்டுப் போவதற்கு என்ன காரணமென்பதை யறிந்து அக்காரணத்தைப் போக்கி காய்கறி ஸாகுபடிக்கு ரொம்ப அனுகூலம் செய்திருக்கிறார்கள்.

சாக்கடைத் தண்ணீரைக்கூட எருவாக உபயோகிக்க ஒரு நூதன முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பயிர்களைப்பற்றிய ஆராய்ச்சிகளால் ஒவ்வொருபயிருக்கும் உள்ள தன்மைகள் இன்னவென்பது தெரியவந்திருக்கிறது. இவைகளைக்கொண்டு அந்தந்தப் பயிர்களிலிருந்து கிடைக்கும் மாஸுலின் அளவையும் தன்மையையும் வ்ருத்தி செய்யவும், அந்தப் பயிர்களுக்கு யாதொரு நோயும் உண்டாகாதபடியும் அந்தப்பயிர்கள் தங்களைத்தாங்களே காத்துக் கொள்ளும்படியும் செய்யவும் முயறசிகள் செய்யப்பட்டு வருகின்றன.

ம்ருகங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளால், ஒவ்வொரு ஜாதி ம்ருகத்துக்கும் அவைகளிருக்கும் நிலைமைக்குத் தகுந்தபடி இன்னின்ன ஆகாரம் கொடுக்கவேண்டு மென்பதும், இந்த ஆகாரங்களை எப்படி அதிக செலவில்லாமல் மலிவாகத் தயார்செய்யலாம் என்பதும்தெரிய வந்திருக்கின்றன. மேலும், ம்ருகங்களுக்குப் போடும் தீனியில் இன்னின்ன உணவுஸத்து இவ்வளவு பாகமிருக்கிறதென்பதை தெரிந்து கொள்ள சாஸ்த்ரிகள் ஒரு புது முறை கண்டுபிடித்திருக்கிறார்களாதலால் ஒவ்வொரு ஜாதி ம்ருகங்களுக்கும் ஏற்றதாக தீனி தயாரிப்பது ஸுலபமாக இருக்கிறது.

CULTIVATION OF VEGETABLES ON PADDY SOILS.

நெல்வயலில் காய்கறி சாகுபடி.

பட்டணங்களுக் கருகிலுள்ள ஊர்களில் நெல் வயல்களில் கோடை காலத்தில் நெல் ஸாகுபடிக்குப் பின்னால் காய்கறிகள் பயிர் செய்து வந்தால் அவைகளைப் பட்டணங்களில் விற்று லாபம் அடையலாம். நமது ராஜதானியில் அநேக இடங்களில் இப்படிச் செய்வதுண்டு. பர்மாவில் ரங்கூனுக்கு ஸமீபத்திலுள்ள சில

விடங்களில் நெல்வயல்களில் காய்கறிகள் பயிர் செய்து வருகிறார்கள்.

அங்கே காய்கறி ஸாகுபடியில் எல்லாவேலையும் கையாலேயே செய்கிறார்களாகையால், ஒவ்வொருவரும் ஸ்வல்ப விஸ்தீரணமுள்ள பூமியில்தான் காய்கறிகள் போடுகிறார்கள். அவர்கள் அனுஷ்டிக்கும் ஸாகுபடி முறை நமது ராஜதானி வாஸிகளுக்கும் உபயோகமாயிருக்குமென்றெண்ணி அதை இங்கு விவரிக்கிறோம்.

முதலில் ஒரு கிணறு தோண்டிக் கொள்ள வேண்டும். இதற்கு ஸுமார் 20-ரூபாய் வரையில் பிடிக்கக்கூடும். இதைக்கொண்டு அரை ஏக்கர் அல்லது முக்கால் ஏக்கர் நிலத்துக்கு ஜலம் பாய்ச்சலாம். மார்ச்சுமாஸத்தில் நிலத்தை நன்றாய்க் கொத்தி சிறு மேடைகளாகப் பிரிக்க வேண்டும். மேடைகள் 18 அங்குலம் உயரமாகவும் அடியில் 3½ அடி அகலமும் மேல் பரப்பு 2½ அடி அகலமும் உள்ளனவாயிருக்க வேண்டும். மேடைகளுக்கு நடுவில் இரண்டு முதல் 3 அடி அகலம் இடைவெளி இருக்க வேண்டும். மேடைகளின் மேல் புறத்தில் காய்ந்து உலர்ந்த சாணம் வைக்கோல் அல்லது காய்ந்த சருகுகளைப் போட்டு அதன் மேல் கொஞ்சம் மண்ணைத் தூவவேண்டும்.

பிறகு அதற்கு நெருப்பு வைத்து கனிந்து எரியும்படி விடவேண்டும். முழுவதும் எரிந்து சாம்பலானவுடன் சாம்பலை மண்ணோடு கலந்து நல்ல நாற்றங்கால் போலாக்கி விடவேண்டும்.

இப்படி மேடைகளைப் பண்படுத்தின பிறகு கையால் ஜலம் பாய்ச்சவேண்டும். கெரஸின் தகரங்கள் அல்லது மரத்தொட்டிகளில் ஜலம் எடுத்துக்கொண்டுபோய் ஜலம் வார்க்கலாம். நிலம் ஸமனாயிராமல் கிணறு இருக்கும் பக்கம் சற்று மேடாயிருந்தால் சிறு வாய்க்கால்கள் வெட்டி அவைகளின் வழியாகவும் ஜலம் பாய்ச்சலாம். நிலம் நன்றாய் ஈரமான பிறகு அதைக் காயவிடவேண்டும், காய்ந்தபிறகு மண்ணை ஒரு முறை கொத்தி விட்டுப் பிறகு விதைக்க வேண்டிய காய்கறி விதைகளை விதைக்கவேண்டும். அந்தக் காலத்தில் பனி அதிகமாகையால் ஸாயந்திரம் விதைகளை விதைத்தால் பனியால் ரொம்ப அனுகூலம் ஏற்படக்கூடும். உயர ஏறி படரும் கொடிப் பயிர்கள் படருவதற்கு அனுகூலமாக மூங்கில் பிளாச்சிகளை மேடைகளுக்கு இருபுறத்திலும் 1½ அடி தூரத்துக் கொன்றாக நட்டு அவைகளின் நுனியை வளைத்துச் சேர்த்துக்கட்டி விடவேண்டும. ஏப்ரல் மாஸத்தில் வெயில் அதிகமாதலால் பயிர்களுக்கு தினம் இருமுறை ஜலம் கொட்ட வேண்டும். கோடை மழை பெய்யும் போது ஜலம் அதிகம் விட வேண்டியிராது.

ஜூலை மாஸத்தில் பயிர்கள் எல்லாம் பலன் கொடுப்பது நின்றுபோய் பயிர்கள் அழிக்கத் தகுந்த நிலைமையிலிருக்கும். இவைகளை யழித்துப் பிறகு பண்படுத்தி க்ரமமாக நெல் ஸாகுபடி செய்யலாம். அங்கே (பர்மாவில்) பட்டாணி, காய்கறிகள் முதலிய பயிர்கள் செய்த நிலங்களில் நெல் ஸாகுபடி செய்தால் மாஸூல் அதிகமாகக் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதற்குக்காரணம் என்னவென்றால் காய்கறி ஸாகுபடி செய்வதற்கு நிலத்தை ரொம்ப ஆழமாகவும் நன்றாகவும் கொத்திப் பண்படுத்தினதே. இப்படி ஸாகுபடி செய்வதால் காய்கறிகளால் லாபம் கிடைப்பதோடு நெல் ஸாகுபடியிலும அதிக மாஸூல் கிடைப்பதால் இந்த முறை அதிக லாபமானதே. நமது தேசவாஸிகளும் மேலே விவரித்த முறையை அந்தந்த விடங்களுக்குத் தகுந்தபடி மாற்றிக் கொண்டு ஸாகுபடி செய்தால் இருவிதத்திலும் தக்க லாபம் அடையலாம்.

DAIRY FARMING.

பால்தயிர்ச்சாலைகள் ஏற்படுத்துதல்.

பட்டணங்களின் பால் வஸதியைப்பற்றி சென்ற மாஸத்தில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்

தோம். இவ்விஷயத்தைப்பற்றிப் பலர் வெகு கவனம் செலுத்திவருகிறார்கள். பம்பாயில் பால் ஸப்ளை செய்வதற்காக ஒரு பால் தயிர்ச் சாலைக் கம்பெனி ஏற்பாடாயிருக்கிறது. பம்பாயில் ப்ரபல வ்யாபாரியாகிய மிஸ்டர் ராட்டான் டாட்டா அதற்கு சேர்மனாயிருக்கிறார். இந்தக் கம்பெனியார் பம்பாய்ப் பட்டணத்துக்கு வெளியில் 200 முதல் 300 ஏகர் விஸ்தீரணமுள்ள நிலத்தை குத்தகைக்குவாங்கி அதில் தீனிப்புல் வளர்க்கப்போகிறார்கள். 4-ஏகர் நிலத்தைத் தனியாய் வாங்கி அதில் தற்காலத்து ஸுகாதார முறைகளுக்கு ஏற்றபடி 100 பசுக்கள் இருக்கும படியாக மாட்டுக்கொட்டில்கள் கட்டப்போகிறார்கள். பசுக்களை அவ்விடத்தில் கறக்காமல் சற்று தூரத்திலுள்ள வேறு ஒரு இடத்துக்கு ஓட்டிக்கொண்டு போய் அங்கே வேறு ஆட்களைக் கொண்டு பால்கறப்பார்கள். கறந்தபாலை நன்றாய் வடிகட்டி யந்த்ரத்தால் குப்பிகளில் அடைத்து ஸ்டெரிலைஸிங் என்று சொல்லப்படும் முறையால் அதிலிருக்கக்கூடியக்ருமிகளையெல்லாம் கொன்று சுத்தம் செய்து, குளிர வைத்து மோட்டார் வண்டிகளில் பட்டணத்துக்குக் கொண்டுபோய் வாடிக்கைக் காரர்களுக்கு விற்பார்கள்.

மதராஸ் டவுனிலும் பால்வஸதியை சீர்திருத்துவதற்காக முனிஸிபல் கார்ப்பரேஷனில் சில ப்ரேரணைகள் செய்ய ஆலோசனையிலிருந்து வருகின்றன. இங்கே, நகரத்துக்கு வெளியில் நல்ல மேய்ச்சல் ஸௌகர்யமுள்ள ஓரிடத்தில் 1000 கறவை மாடுகளுள்ளதாக ஒரு பெரிய பால் தயிர்ச்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றும், இந்தச் சாலையிலிருந்து பாலைக் கொண்டுபோய் பட்டணத்தில் விற்பதற்காகப் பட்டணத்தில் பால் விற்பனைக் கடைகள் ஸ்தாபிக்க வேண்டு மென்றும் பட்டணத்தில் மாட்டுக் கொட்டில்கள் ஸ்தாபித்து அவைகளை மாட்டுக்காரர்களுக்கு வாடகைக்கு விட வேண்டுமென்றும், இந்த பால் தயிர்ச்சாலையை முதலில் கார்ப்பரேஷனே ஆரம்பிக்க வேண்டு மென்றும் பிற்பாடு இதை எடுத்துக் கொண்டு வேலைசெய்ய யாராவது முன் வந்தால் அவர்களிடம் விட்டு விடுகிறதென்றும் ப்ரேரணைகள் செய்திருக்கிறார்கள். சென்னையில் மேற சொன்னபடி பால் தயிர்ச்சாலை ஏற்படுத்தினால் மிகவும் ஸௌகர்யமாயிருக்கும். பால் தயிர்சசாலைக் கம்பெனிகள் நன்றாய் நடந்து வருவதற்கு அவைகளின் அமைப்பு எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி பூனா விவஸாயக்காலேஜின் ப்ரின்ஸிபாலாகிய டாக்டர் மான் என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்.

பால்சாலைகள் லாபகரமாய் நடந்துவர வேண்டுமென்றால், அவைகளை விலையதிகமில்லாத நிலத்தில ஏற்படுத்த வேண்டும். ஜல வஸதி நன்றாயிருக்க வேண்டும். எப்போதும் ஜலம் கிடைக்கக்கூடியதாயிருக்க வேண்டும். நல்ல கறவைமாடுகள் இருக்கவேண்டும். ரயில் பாதையாவது ஸாதாரண ரஸ்தாவாவது அவைகளுக்குப் பக்கத்தில் இருக்க வேண்டும்.

பூனாவுக்குப் பக்கத்திலுள்ள கிர்கியில் ஒரு ராணுவ பால் தயிர்ச்சாலை யிருக்கிறது. அந்த பால் தயிர்ச்சாலையை நடத்துபவர்கள் அங்கிருந்து பாலை 116-மைல் தூரமுள்ள பம்பாய்க்கு அனுப்பி ராத்தல் இரண்டணாவீதம் விற்று லாபமடைந்து வருகிறார்கள். அதற்குக் காரணமென்னவென்றால் அது மிக பெரிய கம்பெனி; நல்ல மாடுகள் இருக்கின்றன. அவைகளுக்குத் தீனி போட உயர்ந்த ஏற்பாடுகள் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பால் கெட்டுப்போகாமல் வைத்திருக்கவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்,

KEEPING ONIONS.

வெங்காயத்தை பத்ரப்படுத்தி வைத்தல்.

வெங்காயத்தை பத்ரப்படுத்தி வைப்பதில் முக்ய கஷ்டம் என்னவென்றால் அது முளைத்து விடக்கூடும் என்பதே. வெங்காயத்தில் முளை கண்டு விட்டால் முளை எவ்வளவு பெரியதாக வளர்ந்திருக்கிறதோ அவ்வளவுக்கு வெங்காயம் கெடுதலடைந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். வெங்காயத்தை நிலத்திலிருந்து வெட்டி யெடுத்தபின் உடனே ஒரு மூலையில் கொட்டி பத்ரப்படுத்தி வைத்துவிடக் கூடாது. அவைகளை நிலத்தில் கொட்டி கொஞ்சம் நேரம் உலரவிட வேண்டும். பிறகு அவைகளை குளிர்ச்சியான கொட்டகையில் ஈரம் கொஞ்சங்கூட இல்லாமலிருக்கும்படி கொட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அவைகளை அடிக்கடி வெளியில் எடுத்து கெட்டுப் போன வெங்காயத்தைப் பொறுக்கி விட வேண்டும். அழுகிக் கெட்டுப்போன வெங்காயத்தை அப்போதைக்கப்போது பொறுக்கி எடுக்காவிட்டால் அழுகிக் கெட்டுப் போன அந்த வெங்காயத்தால் அதன் பக்கத்திலுள்ள மற்ற வெங்காயமும் அழுக ஆரம்பிக்கும். ஆகையால் இது விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

வெங்காயத்தைக் கொட்டி பத்ரமாய் வைப்பது விஷயமாய் ஸமீபத்தில் சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. ஆராய்ச்சி செய்தவர்கள் பத்து துண்டு நிலங்களில் ரஸாயன செயற்கை உரங்களையிட்டு வெங்காயம் ஸாகுபடி செய்தார்கள். ஒவ்வொரு துண்டு நிலத்திலும் கிடைத்த வெங்காயத்தை தனித்தனி சாக்குகளில் போட்டுக்கட்டி ஒவ்வொன்றுக்கும் நம்பர் போட்டு பத்ரப்படுத்தி வைத்தாகள். இப்படிப் பத்ரப்படுத்தின கிழங்குகளை அடுத்த பருவத்தில் விதைத்து அவைகளிலிருந்து விதை யெடுப்பதாக உத்தேசித்திருந்தார்கள். இந்த விதை வெங்காய மூட்டைகளை வைத்திருந்த இடங்கள் சீதோஷ்ணஸ்திதி விஷயத்திலும் வெளிச்ச விஷயத்திலும் ஒரே விதமாக இருந்தன. வெங்காயம் விதைக்க வேண்டிய பருவம் வந்தவுடன் பைகளைப் பிரித்துப் பார்த்தார்கள். சில பைகளில் இருந்த கிழங்குகள் முளைத்து அம்முளைகள் கிழங்கிலுள்ள ஸத்தை ரொம்பவும் க்ரஹித்து விட்டன. ஆனால் வேறு பைகளில் இருந்த கிழங்குகள் கெட்டியாயும் முளைவிடாமலும் கெடாமலும் இருந்தன. பைகளுக்கு நம்பர் போட்டிருந்ததால் பொடாஷ் எரு போடாத துண்டு நிலங்களில் விளைந்த வெங்காயம் சீக்ரம் முளைத்து விட்டன வென்றும், பொடாஷ் எரு போட்ட நிலங்களில் விளைந்த வெங்காயம் கொஞ்சங்கூடக் கெடாமல் அப்படியே இருந்தன வென்றும் தெரியவந்தது. ஒரு ஏகர் நிலத்துக்கு 'ஸல்பேட் அப்பொடாஷ்' என்னும் செயற்கை எரு ஒரு அந்தர் விதம் போட்டால் மேலே சொன்னபடி வெங்காயம் கெடாமலிருக்கிறதாம்.

MACHINERY IN FARMS.

விவஸாயப் பண்ணைகளில் யந்த்ரங்கள்.

இந்தியர்கள் தங்களுடைய விவஸாய வேலைகளுக்கு ஸ்டீம் அல்லது ஆயில் இஞ்ஜின்களை உபயோகிக்கவேண்டுமென்று சிலர் வற்புறுத்துகிறார்கள். கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையில் சிலகாலமாக ஒரு இஞ்ஜின் உபயோகத்திலிருந்து வருகிறது. அதை உபயோகப் படுத்துவதில் அவ்வளவு லாபகரமாயில்லையென்று தெரிகிறது. கோயம்புத்தூர் விவஸாயப்பண்ணையின் ரிபோர்ட்டில் அது உபயோகப்பட்டுவந்த வேலைகளைப்பற்றிபின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

“கோயம்புத்தூர்ப் பண்ணையைப் போன்ற விடங்களிலுங்கூட விவஸாயவேலைகளில் இஞ்ஜின்களை உபயோகிப்பதற்கு ஜாஸ்தியாக ஸந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லையென்று இஞ்ஜின்

ரிகார்டுகளால் தெரியவருகிறது. அந்த இஞ்ஜினைக்கொண்டு வைக்கோல் வெட்டும் யந்த்ரம், போரடிக்கும் யந்த்ரம், பருத்தியிலிருந்து கொட்டை யெடுக்கும் யந்த்ரம், எண்ணெயாட்டும் யந்த்ரம், பருத்திக்கொட்டையுடைக்கும் யந்த்ரம், பிண்ணாக்குத் தூளாக்கும் யந்த்ரம், முதலிய யந்த்ரங்கள் ஓட்டப்பட்டு வருகின்றன. தற்போது எண்ணெயாட்டும் யந்த்ரமும், பிண்ணாக்குத் தூளாக்கும் யந்த்ரமும் உபயோகத்திலில்லை. மற்ற யந்த்ரங்களுக்குள் பருத்தியிலிருந்து கொட்டைபிரிக்கும் யந்த்ரந்தான் லாபகரமாக நடந்து வருகிறது. இந்த யந்த்ரத்தால்தான் இந்த வருஷம் லாபம் ஏற்படலாயிற்று.

போரடிப்பதில் மனிதர்களைக் கொண்டாவது மாடுகளைக்கொண்டாவது போரடிப்பதுதான் செலவுமட்டாயிருக்கிறது. இதற்கு ஒரு காரணம் என்ன வென்றால் யந்த்ரத்தால் வேலை செய்து லாபம் வரும்படியாக அவ்வளவுவேலை பண்ணையில் கிடைப்பதில்லை யென்பதே. ஆனால் பரிக்ஷை வேலைக்கு இந்தப் போரடிக்கும் யந்த்ரம் ரொம்ப உபயோகமாயிருந்து வருகிறது. அது இல்லாமல் வேலைநடப்பது முடியாது.

இந்த இஞ்ஜினை உபயோகிப்பதில் கஷ்டம் என்னவென்றால் எத்தனை யந்த்ரங்களை சேர்ந்தாற்போல் ஓட்டலாமோ அத்தனை யந்த்ரங்களும் ஓடும்படிக்கு வேலையை ஒழுங்குபடுத்திக்கொள்வதுதான். இது எப்போதும் முடிவதில்லை. இஞ்ஜினுக்குப் பிடிக்கும் செலவு அதைக் கவனித்துக்கொள்ள ஆள்சம்பளமும், உடைதல் தேய்தல் முதலியவைகளால் ஏற்படும் யந்த்ரத்தின் மதிப்புக் குறைவும் சேர்ந்து வருஷத்துக்கு 500ரூபாயாகிறது. சென்ற வருஷம் அந்த இஞ்ஜின் செய்தவேலையின் மதிப்பு 379 ரூபாயாகும். இந்தவருஷம் கம்போடியாப்பருத்தி அதிகமாக கொட்டை யெடுத்ததால் 620 ரூபாய் மதிப்புள்ள வேலைசெய்தது,

STATE AID FOR AGRICULTURE.

விவஸாயத்திற்கு ஸர்க்கார் உதவி.

ஸமீபத்தில் கோயம்புத்தூரில் நடந்த விவஸாய கான்பரென்ஸில், மிஸ்டர் ஆர்னே ஷ்மீட் என்பவர் இந்தியாவில் கவர்ன்மெண்டார் விவஸாய அபிவ்ருத்தியின் பொருட்டு ஸுமார் 32,00,000ரூபாய்க்கும் குறைவாகச் செலவழித்து வருகிறார்கள் என்று சொன்னார். இந்தப் பணத்தில் பெரும்பாகம் விவஸாயக்காலேஜுகளின் உபாத்யாயர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் செலவழிந்துபோகிறது. இதனால் நில அபிவ்ருத்தி விஷயமாய் யாதொரு ப்ரயோஜனமும் சீக்ரம் ஏற்படுவதாகவும் இல்லை. மேற்சொன்ன செலவு நிலவரும்படியில் நூற்றில் ஒருபாகமே யாகிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் விவஸாய அபிவ்ருத்தி விஷயமாக அதிகப்பணம் செலவழிக்கவேண்டும் என்று சொன்னார்.

கவர்ன்மெண்டார் விவஸாய அபிவ்ருத்திக்காக ஆயிரம் ஜனத்துக்கு 15-ரூபாய் வீதம் செலவழிக்கிறார்கள். மற்றதேசங்களில் கவர்ன்மெண்டார் விவஸாயத்துக்காகச் செலவழித்து வருவதைப் பார்த்தால் இந்தியாவில் கவர்ன்மெண்டார் எவ்வளவு குறைவாகச் செலவழிக்கிறார்கள் என்பது தெரியவரும். யுனைட்டட் கிங்டம், அதாவது, இங்க்லண்ட், வேல்ஸ், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் ஆகிய இந்த நான்கு தேசங்களும் சேர்ந்த பாகத்துக்கு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் விவஸாய அபிவ்ருத்திக்காக 1000 ஜனத்துக்கு 64½ ரூபாய்வீதம் செலவழித்து வருகிறார்கள். ஆஸ்ட்ரேலியாவிலுள்ள க்வீன்ஸ்லண்ட் என்னும் மாகாணத்திலோ ஆயிரம் ஜனத்துக்கு 1378½ ரூபாய் வீதம் செலவழிக்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள ஆஸ்ட்ரியா தேசத்தில் 1297¼ரூபாய் வீதம் செலவழிக்கிறார்கள். ஜெர்மெனி தேசத்திலுள்ள ப்ரஷ்யா என்னும் நாட்டில் 937¾

ரூபாய் வீதம் செலவழிக்கிறார்கள். அமெரிக்கா ஐக்ய மாகாணங்களிலும், கனடா தேசத்திலும் 540 ரூபாய் வீதம் செலவழிக்கிறார்கள். ப்ரான்ஸ்தேசத்திலும் ஹங்கேரி தேசத்திலும் 405 ரூபாய் வீதம் செலவழிக்கப்படுகிறது. இவைகளை யெல்லாம் பார்க்கும் போது நமது தேசத்தில் கவர்ன்மெண்டார் விவஸாயத்துக்காகச் செலவழிக்கிற தென்பது இப்போது தான் ஆரம்பமாயிருக்கிறதென்றும், இன்னம் செலவை அதிகமாக்கலாமென்றும் நன்றாய்த் தெரிகிறது.

THE INDIAN AGTICULTURIST IN SOUTH AFRICA.

தென்னாப்ரிக்காவில் இந்திய விவஸாயி.

இந்தியாவிலிருந்து தென்னாப்ரிக்காவுக்குப் போய்க் குடியேறியிருக்கும் இந்தியர்கள் எப்படித் தங்கள் நிலத்தில் பாடுபடுகிறார்கள் என்பதைப்பற்றி ச்லாகித்து தென்னாப்ரிக்காவிலுள்ள ஒரு விவஸாயப்பத்ரிகை பின்வருமாறு எழுதுகிறது.

இந்தியாவிலிருந்து வந்திருக்கும் விவஸாயிக்கு எருதுகளும் கலப்பைகளும் வேண்டியதில்லை. அவைகளுக்கு பதிலாக அவனுடைய குடும்பத்தார்களே எல்லா வேலைகளையும் செய்து வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய சிறு நிலத்தை மண்வெட்டியால் நன்றாய்க் கொத்திப்பண்படுத்தி விடுகிறார்கள். அவர்கள் தங்கள் நிலத்தை 12-அங்குலம் முதல் 18 அங்குலம் வரையில் ஆழமாகக் கொத்துகிறார்கள். இந்தியவிவஸாயி பரம்பரையாக நிலத்தை ஸாகுபடி செய்து வந்ததின் பலனாக அவனுக்கு எந்த நிலத்துக்கு எந்தப்பயிர் ஏற்றதென்று நன்றாய்த்தெரிகிறது. அவனுக்குத் தெரிந்திருப்பது போல் தென்னாப்ரிக்கா முழுவதிலும் பத்தில் ஒன்பதுபேருக்கு விவஸாயம் நன்றாய்த் தெரியாது. இந்தியர்களுடைய மாற்றுப்பயிர் செய்யும் முறை மிகவும் ச்லாக்யமானது. விற்பனைக்கென்று கறிகாய் ஸாகுபடி செய்யும் தேசத்தில் தான் இந்தியர்களுடைய முறையைப்போல் அவ்வளவு ச்லாக்யமான முறைகள் அனுஷ்டிக்கிறார்கள்.

இந்தியர்கள் தங்களுடைய நிலத்தை நன்றாய் உழுது அதில் பீன்ஸ் என்னும் அவரையைப் பயிரிடுகிறார்கள். பீன்ஸ் பயிர் பாதி வளர்ந்தவுடன் அவைகளுக்கு இடையில் வேர்க்கடலை விதைக்கிறார்கள். வேர்க்கடலை நன்றாய் வளர்ந்து வரும்போது பீன்ஸ் பயிர் போய் அவைகளிருந்த விடத்தில் சோளம் விதைக்கப்படுகிறது. சோளப் பயிர 3-அடி உயரம் வளர்ந்திருக்கும்போது வேர்க்கடலையை வெட்டி யெடுத்துக்கொண்டு முட்டை கோஸ், காலிப்ளவர், டோமடோ என்னும் சீமைத்தக்காளி ஆகிய இவைகளின் நாற்றுக்களை சோளத்துக்கு இடையில் நடுகிறார்கள். சோளப்பயிர் மாஸூல் எடுக்கும்போது முட்டைக்கோஸ் முதலியவைகளும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. இவைகளுக்கு எப்போதும் நல்ல விலை கிடைத்துவருகிறது.

இவைகளெல்லாம் ஒரு வருஷத்திற்குள்ளேயே பயிரிடப்பட்டு அடுத்தவருஷம் பழையபடியே வேலை ஆரம்பமாகிறது. வெள்ளைக்காரர்கள் அதே நிலத்தில் ஸாகுபடி செய்தால் ஒரு பர்வம் முழுவதும் ஒரு பயிர்தான் நிலத்தில் நிற்கும். ஒரு இந்திய கூலிக்கு தனது நிலத்திலிருந்து ஏக்ருக்கு 900-ரூபாய் வீதம் லாபம் கிடைத்து வருகிறது.

FARMYARD MANURE & CAKE FEEDING.

தொழுவத்தெருவும், மாடுகளுக்கு பிண்ணாக்குத் தீனி போடுதலும்.

மாடுகளுக்குத் தீனிபோடுவதில் மாடுகளின் வளர்ச்சிக்கு ஸாதகமேற்படுவதோடு, அவைகளினுடைய சாணத்தின் குணமும் வித்யாஸப்படக்கூடும். சாணத்தை நிலங்களுக்கு எருவாக இட்டால் பயிரின் வளர்ச்சிக்கு உதவியாகு

இருப்பதோடு நிலத்தில் ஹ்யூமஸ் என்னும் மக்கின இந்த்ரிய வஸ்துவைச் சேர்ப்பதால் நிலம் சீர்த்திருந்தக்கூடும். நாம் மாடுகளுக்குப் போடும் தீனியிலுள்ள நைட்ரஜனில் பாதிபாகந்தான் எருவின் மூலமாக நிலத்துக்குப் போய்ச் சேருகிறது. நல்ல எருகிடைக்கட்டுமென்று மாடுகளுக்குப்பிண்ணாக்கைத் தீனியாகப்போட்டு அந்த மாடுகள் போடும் சாணத்தை எருவாக நிலத்துக்கு இட்டால்,நிலத்தில் செழுமை எவ்வளவு அதிகரிக்கிற தென்பதைப்பற்றியும், அந்தச் செழுமை எப்படிப்பட்டதென்பதைப் பற்றியும், இங்கிலண்டில் சில வர்ஷங்களாக பரீக்ஷைகள் செய்துவந்தார்கள்.

சில மாடுகளுக்கு பிண்ணாக்குத் தீனிவைத்தும் சிலவற்றிற்குப் பிண்ணாக்குத்தீனி வைக்காமலும் இருந்து, அவைகள் போடும் சாணியை தனித்தனியே வெவ்வேறு நிலங்களுக்கு எருவாக இட்டு நான்கு வர்ஷகாலம் அந்த நிலங்களில் கிடைக்கும் மாஸூலைக் கணக்கிட்டு ஒப்பிட்டுப் பார்த்தார்கள்.

அப்படிச் செய்ததில் பின்வரும் விஷயங்கள் வெளியாயின. மாட்டுக்கு பிண்ணாக்குத் தீனிபோடுவதால் எருரொம்ப ச்லாக்யமாயிருக்கிறதென்றாலும், அந்த எருவை நிலத்துக்குப் போட்டால் அதிககாலம் பலன் கொடுப்பதில்லை. முதல் வர்ஷத்தில் ஸாதாரண சாணத்தைப்போட்டு ஒரு பங்கு மாஸூல் கிடைத்தால், பிண்ணாக்குத் தீனிபோட்டுக் கிடைக்கும் சாணத்தைஎருவாகப்போட்டால் இரண்டு பங்கு மாஸூல் கிடைக்கிறது.

மறுபோகத்தில் ஸாதாரண சாணம்போட்ட நிலத்தில் ஒன்றே கால் பங்கு கிடைக்கிறது. பிண்ணாக்குத் தீனி போட்டுக் கிடைத்த சாணம் எருவிட்ட நிலத்தில் மாஸூல் $1\frac{1}{3}$ ஆக இருக்கிறது. மூன்றாவது நான்காவது வர்ஷங்களில் இரண்டுக்கும் வித்யாஸமே 'இருப்பதில்லை.

DUCK FARMING.

குள்ளவாத்து வளர்த்தல்.

குள்ளவாத்து வளர்ப்பதில் சில விஷயங்களை கவனிக்க வேண்டியது அவச்யம்.

(1) வாத்துகளை காலைப் பிடித்துத் தூக்கக்கூடாது. அவைகளின் கழுத்தைப் பிடித்துத் தூக்குவது நல்லது.

(2) இரவில் அவைகள் இருக்கும் இடத்தில் விளக்கைக் கொண்டுபோகக் கூடாது. இப்படிச் செய்தால் அவைகளின் நிறைகுறைந்து போகிறதாம்.

(3) வாத்துகள் அடைத்திருக்கும் கூட்டில் உலர்ந்திருக்கும் சுண்ணாம்பைப் போடக்கூடாது. அப்படிச் செய்தால் வாத்துகள் இறந்து போகக்கூடும்.

(4) பெரிய குள்ள வாத்துகளின் முட்டைகள் குஞ்சு பொரிக்க ஏற்றவை யல்ல.

(5) வாத்துகளை இரவில் கூடுகளில் விட்டு வெளியில் வராதபடி மூடிவிட வேண்டும். அவைகள் படுத்துக் கொள்ளும் இடம் உலர்ந்தும் மெதுவாயும இருக்கவேண்டும். அப்படியிருந்தால் வாத்துகள் அதிக முட்டையிடுவதோடு, அவைகளைப் பொறுக்கி எடுப்பதும் ஸுலபம்.

(6) வாத்துகளுக்கு நோய் கண்டால் வெங்காயத்தை சிறு பத்தைகளாக நறுக்கி நெய்யப் பிசைந்து அவைகளுக்குத் தின்னக் கொடுக்க வேண்டும். அவைகளை கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்ந்த மெதுவான இடத்தில் படுத்துக்கொள்ள விடவேண்டும்.

(7) கோழிகளையும் வாத்துகளையும் சேர்ந்து திரிய இடங்கொடுக்கக் கூடாது.

(8) ஒரே பாத்ரத்தில் ஜலம் வைத்து கோழிகளையும் வாத்துகளையும் அந்தப் பாத்ரத்திலிருந்து ஜலம் குடிக்கும்படி செய்தால் அவைகளுக்குள் வ்யாதி நேரிடக்கூடும்.

(9) வளைந்த முதுகும், கோணலான வாலும்

ரூடானும் மற்ற அங்கஹீனங்களுமுள்ள வாத்துகளின் முட்டைகளை குஞ்சு பொரிக்க உபயோகிக்கக்கூடாது.

BONEMEAL FOR RICE.

நெல்பயிருக்கு எலும்புத்தூள் எரு.

வடக்கே ஆஸாம் மாகாணத்திலுள்ள சில மலை ஜில்லாக்களில் விவஸாயிகள் பலவர்ஷங்களாக நன்செய் ஸாகுபடியில் நெல்லுக்கு போன்மீல் என்னும் எலும்புத்தூளை எருவாக உபயோகித்து தக்க லாபம் அடைந்து வருகிறார்கள். அங்கே எலும்புத்தூளின் விலை ரொம்பவும் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் அதை உபயோகிப்பதில் அதிக லாபம் கிடைத்து வருகிறது.

அங்கே ஒரு மணங்கின் விலை 4½ ரூபாய் முதல் 5 ரூபாயாக இருக்கிறது. முதல் வர்ஷத்தில் ஒரு ஏகருக்கு 3 மணங்கு வீதம் போட்டால் அந்த வர்ஷம் எருச்செலவைவிட கொஞ்சம் அதிகமாக லாபம் கிடைக்கிறது. அதற்கு அடுத்த இரண்டாவது மூன்றாவது வர்ஷங்களில் கிடைக்கும் அதிக மாஸூலெல்லாம் லாபந்தான்.

அவ்விடங்களில் எலும்புத்தூள் எருவிடும் வழக்கம் ரொம்ப அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆனால் ஜனங்கள் இன்னம் அதை அதிகமாயுபயோகிப்பதற்கு அதன் விலை ஒரு தடையாயிருப்பதால் விவஸாய டிபார்ட்மெண்டார் சொந்தத்தில் எலும்புத்தூள் தயார் செய்ய ஒருயந்த்ரம் வாங்கி வைத்துக்கொண்டு எலும்புத்தூள் தயாரித்து விவஸாயிகளுக்கு மணங்கு 3-ரூபாவீதம் விற்கப்போகிறார்களாம்.

CANE PLANTING.

விதைக்கரும்பு நடுதல்.

கரும்பு நடுவது ஸம்பந்தமாக ஒரு புதிய விஷயம் ஆஸ்ட்ரேலியாவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஸாதாரணமாய்க் கரும்பு நட்டு கணுவிலிருந்து முதலில் ஒரு கிளை உண்டாகி கொஞ்சம் பெரியதாய் வளர்ந்தவுடன் அதே கணுவிலிருந்து புதிதாய் ஆறேழு கிளைகள் உண்டாகின்றன. இவைகள் முதலில் வளர்ந்து பெரியதாக விருக்கும் கிளையுடன் ஆகாரத்துக்காகப் போட்டி போட வேண்டியிருக்கிறது. இதனால் பின்னால் வளர்ந்த கிளைகள் நன்றாய் வளருவதில்லை. முதலில் வளர்ந்த பெரிய கிளையை வெட்டி விட்டால் கரும்பின் கிளைகளெல்லாம் பெரிய கிளையை வெட்டாமலிருந்தால் எவ்வளவு நன்றாய் வளருமோ அதைவிட அதிகமாக வளருகின்றனவென்று ப்ரத்யக்ஷத்தில் தெரிய வருகிறதாம்.

CATTLE MANURE.

தொழுவத் தெரு.

தொழுவத் தெருவை எப்படிக்காப்பாற்றி வைப்பது லாபமானதென்பதை யறிவதற்காக கோயில்பட்டி விவஸாயப் பண்ணையில் சென்ற 9-வர்ஷங்களாகப் பரீக்ஷைசெய்து வந்தார்கள். பள்ளமான தொழுவத் தெருவில் தான் நைட்ரோஜின், பாஸ்பரஸ், பொடாஷ் ஆகிய மூன்றும் அதிகமாக இருக்கின்றன. மற்றப்படி குழியில்கொட்டிவைத்த எருவிலும் குவியலாகப்போட்டு வைத்த எருவிலும் அவைகள் அதிகமாக இருப்பதில்லை. ஆனால் பள்ளத் தொழுவத்தெரு பொதுவாய் நன்றாக மக்கியிருப்பதில்லை. அதனால் அதை நிலத்திலிட்டால் அது அவ்வளவு நன்றாய் மண்ணுடன் கலந்து கொள்வதில்லை. சோளம், கம்புபோன்ற வேர் குட்டையாயிருக்கும் பயிர்களுக்கு பள்ளமான தொழுவத்தெரு ரொமபச்லாக்யமானது. மற்ற எருக்கள் அடுத்தபடிதான்.

ரொம்ப ஆழமான வேருள்ள பருத்திக்கு குவித்துப் போட்டு வைத்த தொழுவத்தெரு ரொம்பசலாக்கியமானதென்று அந்த பரீக்ஷைகளால் தெரியவருகிறது.

The Co-operative World.
கோவாபரேஷன் பகுதி.

MARKETING VEGETABLE PRODUCTS.
காய்கறிகளை விற்பனை செய்தல்.

காய்கறிகளை சாகுபடி செய்பவர்கள் கிடைக்கும் மாஸூலை ஒவ்வொருவரும் தனித்தனியே விற்க ஏற்பாடு செய்வதை விட ஒரு ப்ரதேசத்திலிருக்கும் எல்லா காய்கறித் தோட்டக்காரர்களும் ஒன்று சேர்ந்து கோவாபரெடிவ் ஸங்க மேற்படுத்திக் கொண்டு விற்பனை செய்தால் அவர்களுக்கு தக்க லாபம் கிடைப்பதோடு காய்கறிகளின் விலையும் குறைந்துபோய் பொது ஜனங்களுக்கும் ஸௌகர்ய மேற்படக் கூடும். காய்கறிகளின் கோவாபரெடிவ் விற்பனையைப் பற்றி அமெரிக்க ஐக்யமாகாணங்களின் விவஸாய டிபார்ட்மெண்டார் வெளியிட்டிருக்கும் ஒரு புஸ்தகத்தில் ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

காய்கறிகள் போன்ற சீக்ரம் கெட்டுப்போகக்கூடிய ஸாமான்களை கடைகளுக்கு அனுப்பி விற்க தற்காலத்தில் அனுஷ்டானத்தில் இருந்து வரும் ஏற்பாடுகளை தக்க விதத்தில் சீர்திருத்தி மாற்றக்கூடும். தற்காலத்தில் விவஸாயிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக காய்கறிகளை விற்க ஏற்பாடு செய்கிறார்களே ஒழிய, பலர் சேர்ந்து விற்க ஏற்பாடு செய்வது கிடையாது. இப்படி விவஸாயிகள் கூட்டாகச் சேராமல் தனித்தனியே வ்யாபாரம் செய்வதில் சில கெடுதிகள் இருக்கின்றன. அவைகளாவன:- ஸாமான்கள் வைத்தனுப்பும் கூடைகள், சிப்பங்கள் முதலியவைகள் ஒரே யளவா யிருப்பதில்லை. அதனால் கூடைகள் அல்லது சிப்பங்களைக் கொண்டே விலை பேசுவது ச்ரமமாகிறது. ஒரு இடத்தில் ஒரு கூடை காய்கறியின் விலை ஒரு குறிப்பிட்ட தொகையா யிருந்தால் இன்னொரு மார்க்கெட்டிலும் அதே விலை யிருக்குமென்று சொல்வதற்கில்லை. காய்கறி கொண்டுவரும் கூடை சிறியதாயோ பெரியதாயோ இருந்தால் விலை அதற்கேற்க குறைவாயோ, அதிகமாயோ, இருக்கும்.

மேலும் காய்கறிகளை கூடைகள் அல்லது சிப்பங்களில் கட்டியனுப்புவதில் ஒவ்வொருவரும் தத்தம் மனஸுக்குத் தோன்றுகிறபடி செய்கிறார்கள். காய்களை எது உயர்ந்தது, எது தாழ்ந்தது, என்று தராதரம் பிரிப்பதில் அவர்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ அதன்படி பிரித்துக்கொள்ளுகிறார்கள். மார்க்கட்டுகளில் எப்படி தராதரம் பிரிக்கிறார்களோ அப்படிப் பிரிப்பதில்லை.

மேலும் மாஸூலைக் கடைகளுக்கு விற்பனைக்கு அனுப்புவதில் யாதொரு ஒழுங்கு மில்லாமல் நினைத்தபடி அனுப்புகிறார்கள். ஒரு வ்யாபாரி தான் விற்பனை செய்யும் காய்கறிகளுக்கு ஒரு பெயரிட்டு விற்பனை செய்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் வ்யாபாரம் செய்யும் காய்கறிகள் சிலகாலம் விற்று வந்து பிறகு அவை போய் அடுத்த வருஷம் வரும் வரையில் அந்த காய்கறிகளின் பெயர்களே கேள்விப்படுவதில்லை. இதனால் ஒரு குறிப்பிட்ட தினுஸு காய்கறிகளுக்கு ஒரு பெயர் ஏற்படுவது முடிவதில்லை. அந்தப் பெயரை வைத்துக்கொண்டு அடுத்த வருஷம் வ்யாபாரம் செய்தால் அதிக லாபம் வருவதற்குமிடமில்லாமல் போகிறது.

இன்னும் காய்கறிகள் பட்டணங்களுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு கடைசியாய் அவைகளை வாங்கி உபயோகிக்கும் ஜனங்கள் வசம்

ரூடா போகும்வரையில் அவை பலர் கை மாற மாம, அதாவது, கமிஷன் வ்யாபாரி, தரகு வ்யாபாரி, சில்லரை போத்தில் விற்பவன், மொத்த போத்தில் வாங்கி விற்பவன், முதலிய பலர் வழியாக அந்த மாஸூலில் மாறக் கூடும. இப்படி மாறுவதில் அவைகளின் விலை ரொம்ப அதிகமாகக் கூடும். காய்கறிகளை தோட்டங்களிலிருந்து பட்டணத்துக்குக் கொண்டு போய் விற்கும் வரையில் பின் வரும் செலவுகள் ஏற்படுகின்றன.

(1) ஸாமானை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக வண்டிச் சத்தம். (2) ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கும் கமிஷன். (3) வ்யாபாரிகள் விற்கும்போது அடையும் லாபம். (4) காய்கறிகளைப் போட்டு வைத்திருக்க வாடகை. (5) சில்லரையாக விற்கும் வ்யாபாரிகள் அடையும் லாபம். (6) இவைகளோடு காய்கறிகள் விளைவதற்கு ஏற்படும் செலவு, மாஸூலைக் கட்டியனுப்புவது முதலிய செலவுகளும் சேர்ந்துதான் ஒரு பொருளின் விலை எவ்வளவு என்று ஏற்படுகிறது. ஆனால் சாகுபடிச் செலவையும் மாஸூலைக் கட்டியனுப்பும் செலவையும் வெகுவாய் ஒருவரும் கணக்கில் சேர்ப்பதில்லை.

ஸாதாரணமாய் விவஸாயிகள் தாங்கள் பயிரிடும் பயிர்களுக்கு சாகுபடிச் செலவு இவ்வளவு ஆகிறது ; இவ்வளவு லாபம் வேண்டுமென்று ஒரு போதும் கவனிப்பதில்லை. உண்மையில் விவஸாயிகளுக்குத் தாங்கள் விற்கும் விளைபொருள்களைப் பயிர் செய்ய இன்ன செலவு ஏற்படுகிற தென்பதே தெரியாது. ஆனால் ஒரு விளைபொருளுக்குப் பயிர்ச் செலவு இன்னவாகிறதென்பதை நிர்ணயிக்க ஒரு வருஷத்தில் ஏற்படும் செலவை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், காலஸ்திதி வேறுபட்டால் மாஸூலின் அளவில் ரொம்ப வித்யாஸம் ஏற்படக் கூடும். ஆகையால் 5 முதல் 10-வருஷம் வரையில் என்ன செலவு ஏற்படுகிற தென்பதைப் பார்த்து ஒரு வருஷத்துக்கு ஸராஸரி பார்க்கவேண்டும்.

வ்யாபார நிலைமைகளை ஆராய்ந்து பார்த்ததில் சீக்ரம் கெட்டுப்போகக் கூடிய காய்கறிகளுக்கு அதை வாங்கி உபயோகிப்பவர்கள் கொடுக்கும் விலையில் நூற்றுக்கு 33-முதல் 36-பாகம் வரையில்தான் அமெரிக்காவில் விவஸாயிக்குப் போய்ச் சேருகிறது. இதைக் கொண்டுதான் பயிர்ச் செலவு, ஸாகுபடியில் ஏற்படக்கூடிய லாபம், நஷ்டம், முதல், முதலியவைகளுக்கு ஈடு செய்யவேண்டும். விளைபொருளை சாகுபடியாகுமிடத்திலிருந்து விற்பனை யாகுமிடத்துக்குக் கொண்டு போவதற்கு நூற்றுக்கு 26-பாகம் பிடிக்கிறது. வ்யாபார ஏஜெண்டுகளுக்குக் கமிஷன் கொடுப்பதில் நூற்றுக்கு 5-முதல் 10-வரையில் செலவழிகிறது. வ்யாபாரிகளின் லாபமோ நூற்றுக்கு 50-முதல் 100-வரையிலு மாகும். வ்யாபாரிகளுக்கு ஏன் இவ்வளவு லாபமென்றால், சீக்ரம் கெட்டுப்போகக் கூடிய விளைபொருள் ஒரு வ்யாபாரிகையை விட்டு மற்றொருவரிடம் மாறும்போதெல்லாம், நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு ஈடு செய்வதற்காக விலையை இரட்டிப்பு மடங்காக உயர்த்தவேண்டுமாம். சில்லரை போ வ்யாபாரி விளைபொருளை மொத்த போ வ்யாபாரியினிடமிருந்து வாங்கின வுடன் விலையை ஸுமார் இரண்டு மடங்காக்கி விற்கிறான். மேலே கூறிய காரணங்களால் காய்கறிகளின் விலையானது ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது.

தற்காலம் அமெரிக்காவின் சில பாகங்களில் கோவாபரேஷன் முறையில் விற்பனை செய்யும் ஏற்பாடு அபிவ்ருத்தியாகிக் கொண்டு வருகிறது.

தோட்டக்காரர்களுக்குள் கோவாபரேஷன்

முறை ஏற்பட்டால் அவர்கள் விளைபொருள்களை ஒரே சீராய்க் கட்டியனுப்பக் கூடும். தகுந்த இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு விளைபொருள்களைச் சரியாய் தாரதரம் பிரிக்கலாம்.

மாஸூல் அறுவடைக் காலத்தில், தோட்டக்காரர்களுக்கு, தங்கள் விளைபொருளுக்கு எவ்வளவு க்ராக்கி யிருக்கு மென்றும், தங்களுடைய விளைபொருள்களோடு போட்டியாய் இன்னும் எங்கிருந்து விளை பொருள்கள் வரப் போகின்றன வென்றும் தெரிவதில்லை. விளை பொருள்கள் ரொம்பக் குறைந்துபோய் ஊரில் அதைப் பற்றி பேச்சு ஏற்பட்டால்தான் அவர்களுக்கு அதைப் பற்றித் தெரிய இடமுண்டாகிறது. தோட்டக்காரர்களுக்கு வ்யாபார நிலைமை நன்றாய்த் தெரிந்திருப்பதற்காக அடிக்கடி சாகுபடி ரிபோர்ட்டு வெளியிடவேண்டியது அவச்யமாகும். இந்த ரிபோர்ட்டுகளைத் தகுந்த நிபுணர்களே தயாரிக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட ப்ரதேசத்தில் சில வர்ஷங்களுக்குத் தயாரிக்கப்பட்ட மாஸூல் கணக்கைக் கொண்டு அவ்விடத்தில் ஒரு ஏகருக்கு எவ்வளவு மாஸூல் கிடைக்கு மென்றும், பயிரிடும் காலமும், அறுவடைக் காலமும் எப்பொழுதென்றும், நிதானித்து விடலாம்.

கோவாபரேஷன் முறையில் விற்பனை செய்வதில் காய்கறிகள் ரொம்ப நல்லவையாக இருக்கவேண்டியதோடு, கோவாபரெடிவ் ஸங்கத்திலிருந்து மெம்பர்கள் நினைத்தபோது அல்ப காரணத்துக்காக விலகிக்கொண்டு ஸங்கத்துக்குக் கெடுதி உண்டாகாம லிருக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். ஸங்கத்தில் தொழில் நடத்துவதற்கு வேண்டிய பணத்தை சந்தாவாக மெம்பர்களிடமிருந்து வஸூல் செய்வதோடு, ஸங்கத்தின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்காக மெம்பர்களிடம் ஜாமின் வாங்கவேண்டும். ஒவ்வொரு மெம்பரும் ஜாமினாக ஸங்கத்து சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நட டால் இவ்வளவு தொகை ஸங்கத் கொடுப்பதாக ஒருப்ராமிஸரிநோட்டு எ கொடுக்கவேண்டும்.

கூட்டுறவாக ஸாகுபடி செய்தல், விற்பனை செய்தல், வாங்குதல் ஆகிய இவைகளால் நன்மை ஏற்படுவதோடு, இந்த ஸங்கங்கள் லேவாதேவித் தொழிலையும் இன்ஷூரென்ஸையும் நடத்திவரலாம். ஸங்கத்துக்கு ஒரு டிரெக்டர் போர்டும் ஒரு மானேஜரும் ஏற்படுத்த வேண்டும். போர்டின் மேம்பார்வையில் மானேஜர் ஸங்கத்தின் கார்யங்களை நிர்வகித்து வரவேண்டும். முக்யமான வேலைகளை போர்டும், மானேஜரும் கலந்து யோசித்துச் செய்ய வேண்டும்.

ESSENTIALS OF CO-OPERATIVE WORK.
கோவாபரேஷனுக்கு அவச்யமான ஸாதனங்கள்.

கோவாபரெடிவ் ஸங்கங்கள் நன்றாய் நடைபெற்றுக் கடைத்தேறுவதற்கு கடன் வாங்குகிறவர்கள் கடனைக் குறிப்பிட்ட தேதியில் தவக்கமில்லாமல் செலுத்தி வரவேண்டியதோடு, ஸங்கங்களை நிர்வாகம் செய்பவர்கள் ஸங்கங்களின் கார்யங்களை ஒழுங்குடனும் பொறுப்புடனும் நடத்தி வரவேண்டியது மிகவும் அவச்யம். ஆனால் ஸங்கங்களில் கடன் வாங்கும் மெம்பர்களில் அநேகம் பேர் முன்னால் ஸாவ்கார்களிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஸாவ்கார்கள், தாங்கள் கொடுக்கும் கடன்களுக்கு ஏற்பட்ட ரொம்ப உயர்ந்த வட்டியை கடன் வாங்கினவர்கள் கொடுத்து வருவார்கள் என்ற நம்பிக்கை யிருக்கும் வரையில் கடன்களைக் குறித்தகாலத்தில் திருப்பிச் செலுத்துவதைப் பற்றி வெகுவாய் கவனிப்பதில்லை. இந்த மெம்பர்கள் ஸாவ்கார்களிடம் கடனை தங்களிஷ்டப்படித் திருப்பிச்செலுத்திவந்த பழக்கத்தால், ஸங்கங்களில் வட்டி குறைவாய் கடன் கிடைக்கிறதென்

பதைக் கூட கவனிக்காமல் ஸங்கங்களுக்கும் தாங்களிஷ்டப்பட்டபோது திருப்பிக் கொடுக்கலாமென்று எண்ணுகிறார்கள். ஸாவ்கார்களைப் போல அவர்களுக்கு ஒரு விஷயம் தெரிவதில்லை. ஸங்கங்கள், முக்யமாய் ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து கடன் வாங்கியோ, பொது ஜனங்கள் போடும் டெபாஸிட் பணத்தைக் கொண்டோதான் லேவாதேவி செய்து வருகின்றன. இந்த ஸங்கங்கள் தாங்கள் வாங்கின கடன்களை காலாகாலத்தில் தவக்கமில்லாமல் செலுத்திவரவேண்டி யிருக்கிறது. ஆகையால் மெம்பர்கள் கடன்களை காலாகாலத்தில் தவக்கமில்லாமல் செலுத்த வேண்டியது அவச்யமாகிறது. ஸாவ்காரைப் போல் அச்ரத்தையா யிருப்பது முடியாது. இவ்விஷயத்தை அந்த மெம்பர்கள் தெரிந்துகொள்வதில்லை.

மேலும் கடன் வாங்குகிறவர் தமது கடனை குறித்த காலத்தில் தவக்கமில்லாமல் செலுத்திவிட்டால் கடன் கொடுத்தவர்கள் அவரிடத்தில் நம்பிக்கையும் மரியாதையும் கொள்ளுகிறார்கள். மறுபடியும் அவர் கடன் கேட்டால் கடன் கொடுப்பவர்கள் ஸந்தோஷமாய்க் கொடுக்கிறார்கள். வட்டி விஷயத்திலும், கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய தவணை விஷயத்திலும், அவருக்கு ரொம்ப ஸௌகர்யங்கள் ஏற்படுகின்றன. கடன் வாங்குகிறவர்கள் செலவு விஷயத்தில் ரொம்ப செட்டாயிருந்தால்தான் கடனைக்குறித்த காலத்தில் திருப்பிக்கொடுப்ப தென்பது ஸாத்யமாகும். கடன் வாங்கும் ஒவ்வொருவரும் செட்டாயிருக்க வேண்டு மென்பதை ரொம்பவும் வற்புறுத்த வேண்டியது அநாவச்யம். கோவாபரேடிவ் ஸங்கங்களின் கார்யங்களை ஒழுங்குடன் நடத்த வேண்டு மென்பதை நமது நாட்டார் இன்னும் நன்றாய் அறிந்து கொள்ளவில்லை. பை-லாக்களில் விவரித்திருக்கும் நடவடிக்கை க்ரமமானது கோவாபரேஷனில் அதிக ஊக்கமும் அனுபவமும் வாய்ந்தவர்கள் ரொம்ப ஆலோசனையின் மேல் ஏற்படுத்தினதாகும். ஆகையால் பைலாக்களில் சொல்லியிருக்கும் விதிகளை கொஞ்சங்கூடப் பிசகாமல் அனுஷ்டித்து வந்தால் ஸங்கத்துக்கு நல்ல பெயர் ஏற்படுவதோடு ஸங்கங்களின் நடவடிக்கைகளில் யாதொரு தவறும ஏற்படுவதற்கு இடம நேராது. ஸங்கங்களுக்கு வேண்டிய அளவு மெம்பர்கள் வராமல் ஸங்கங்களின் மீட்டிங்குகள் கூடாமல் நின்று போய் அதனால் ஸங்கங்களின் கார்யங்கள் நடைபெறாமல் தவக்கப்படுவதனாலும், கார்யங்களை இன்ன விதமாய் நடத்தவேண்டுமென்று விதித்திருப்பதை கவனிக்காமலோ, அல்லது அலக்ஷ்யம் செய்தோ, விடுவதாலும், அநேக கெடுதல்கள் ஏற்பட்டு ஸங்கத்துக்குள்ள கௌரவத்துக்கும் ஹானி ஏற்படக்கூடும். ஸங்கங்களின் மானேஜிங் பாடியிலுள்ள மெம்பர்கள் ஸங்கங்களின் நடவடிக்கைகளில் ரொம்பப் பொறுப்புக் காட்டி வரவேண்டியது அத்யாவச்யமாகும்.

CO-OPERATIVE CONFERENCES.

கோவாபரேடிவ் கான்பரென்ஸுகள்.

நமது தேச முழுவதிலும் கோவாபரேடிவ் கான்பரென்ஸுகள ரொம்ப அடிக்கடி நடந்து வருகின்றனவென்று பலர் எண்ணுகிறார்கள். ஒவ்வொரு வர்ஷமும் கூடும் கோவாபரேடிவ் கான்பரென்ஸுகளில் கோவாபரேஷனைப் பற்றிப் புதிதாக விஷயங்கள் ஒருவரும் சொல்லுவதைக் காணோம். ஒருவர்ஷத்தில் சொன்னவைகளையே அடுத்த வர்ஷங்களில் திருப்பி திருப்பிச் சொல்லுகிறார்கள். மேலும் ஒரு மாகாணம், அல்லது, ஒரு ஜில்லாவில் சொன்னவைகளை மற்ற மாகாணங்களிலும், ஜில்லாக்களிலும் ப்ரஸ்தாபிக்கப்படுகின்றன. இப்படி ஒவ்வொரு வர்ஷமும சொன்னவைகளையே திருப்பித் திருப்பிச்சொல்லிக்கொண்டு கான்பரென்ஸுகள் நடத்துவதைவிட மூன்று வர்ஷங்களுக்கு ஒரு முறை கான்பரென்ஸ் நடத்தினால் போதும். ஒவ்வொருவர்ஷமும் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் அவச்யம் நடத்த வேண்டுமென்றால் நாஷனல் காங்க்ரெஸ், கைத்தொழில் கான்பரென்ஸ், ஸோஷல் கான்பரென்ஸ, ஆகிய, இவைகளைப்போல இந்தக்கான்பரென்ஸையும் ஒவ்வொரு வர்ஷமும் வெவ்வேறு ஊர்களில் நடத்திவரலாமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

The Commercial World.
வ்யாபாரப் பகுதி.

TRADE ADVERTISEMENT

BY

M. GOPALAN, NEGAPATAM.

வ்யாபார விளம்பரம்.

ஒரு வ்யாபாரி தன்னிடத்தில் இருக்கும் சரக்குகளை விற்பனைசெய்து லாபம் அடைய விரும்புவது இயற்கை. என்ன விதமாய் தன் சரக்குகளை ஜனங்கள் வாங்கும்படி செய்ய வேண்டு மென்பதை அவன கவனிப்பான். பொதுவாய் வ்யாபாரிகளுக்கு அந்த அவா மாத்ரம் இருக்கிறதே தவிர அதற்குத் தகுந்த வழிகள் தேடுவதைக்காணோம். ஏன் என்றால், வெளியே பலர் தெரிந்துகொள்ளும்படி செய்வதற்கு பணச்செலவு கொஞ்சம் ஏற்படுவதால் தவக்கமுண்டாய் விடுகிறது. விளம்பரம் செய்யும் செலவை வீண்பணம் என்று பல வ்யாபாரிகள் இத்தேசத்தில் நினைக்கிறார்கள். முப்பதினாயிரம் ரூபாய் முதல் வைத்து ஜவுளி வ்யாபாரம் செய்யும் ஒரு வ்யாபாரி பத்து ரூபாயர்வது விளம்பரத்திற்காகச் செலவிட்டதை தென் இந்தியாவில் காண்பது அரிது. இதே தொகையை வைத்துக்கொண்டு அமெரிக்காவில் ஒருவன் வ்யாபாரம் பண்ணத்தொடங்கினால் அவன் ஒவ்வொரு வர்ஷமும் 500 ரூபாய்க்குக் குறையாமல் விளம்பர விஷயத்தில் போடுவான். அவன் முட்டாளா; அல்ல. எவ்வளவுக்கெவ்வளவு விளம்பரம் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு லாபமென்பதைக் காட்ட மேல்தேசத்து வ்யாபாரிகள் ஸாக்ஷியாக இருக்கிறார்கள். நம்மில் பெரும்பான்மையோர் நஷ்டப்படுவது இந்த ஒரு விஷயத்தினால் தான் என்று சொல்லலாம். ஒரு ஷாப்பில் ஒருவன் நுழைந்தால் அவன் எந்த ஸாமான்களை உத்தேசித்து வந்தானோ அதை மாத்ரந்தான் வாங்குவான், மற்றவைகளை வாங்கமாட்டான் என்று நினைப்பது தப்பு. ஏன் என்றால், அவனுக்கு வேண்டிய மற்ற ஸாமான்கள் அவனுக்கு ஒருவாறு மறைந்திருக்கும். ஸங்கீதத்தில் ஞானமுள்ள ஒரு பெரிய மனிதர் ஒரு கெட்டில் வாங்க ஒரு ஷாப்புக்குள் போனால் வ்யாபாரி ஸாமர்த்யவானாய் இருக்கும் பட்சத்தில் அவருடைய நோக்கத்தை அறிந்து தான் வைத்திருக்கிற க்ராமபோனில் ஒரு நல்ல ரிகார்டு வைத்து அவருக்கு திருப்தி செய்தால் அவர் அந்த மெஷின் விலை என்ன என்று கேட்பார். 'ஸ்வாமி-50 ரூ தான். இதோ காட்டலாக்கை (Catalogue) பாருங்கள்' என்று நன்றாய் அச்சிட்டு பைண்டு செய்யப்பட்ட காட்டலாக்கை அவர் கையில் கொடுத்தால் அவருக்கு ஏதாவது ஒரு மெஷினை வாங்கலாமென்ற எண்ணம் மனவில் படும. கையில் பணம் இல்லையே, இதை எப்படி வாங்குவது என்று அவர் யோசிப்பதை வ்யாபாரி அறிந்து அவர் விலாஸத்தை எழுதி வைத்துக்கொண்டு வி. பி. யில் அனுப்புகிறேன் என்று அட்வான்ஸ் பணம் ஏதாவது வாங்கிக்கொண்டு ஒரு உருப்படியை தள்ளிவிட்டு 5 ரூபாயாவது ஸம்பாதிக்கலாம். கெட்டில் வாங்க வந்தவரிடம் அதற்காக 8 அணாவும் க்ராமபோனுக்காக 5 ரூபாயும வாங்கி லாபம் பெறலாம். இந்த மாதிரி நல்ல ஷர்ட்டுகள் வைத்திருந்து வருபவரிடம் தானாகவே காண்பித்தால் விலைபோகும்.

விளம்பரம் செய்வதற்கு அனேக விதங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் விஸ்தாரமாய்க்கூற ஒரு புஸ்தகமே போதாதாகையால் இந்தச் சிறிய வ்யாஸத்தில் நான் எங்ஙனம் கூறுவது. பேசுவதும் விளம்பரம் தான். வ்யாபாரம் செய்யும் கட்டிடத்தைக் கண்ணைப்பறிக்கும்படி பளபளப்பாய் நல்ல 'லைட்'டுகள் போட்டு வந்தவருக்கு உட்கார நாற்காலிகள் அமர்த்தி உபசரிப்பதும் விளம்பரம் தான். வாசலில் நோட்டிஸ் போர்டுகள் போடுவதும் விளம்பரம்தான். ஏஜெண்டுகள் வைத்து ஊரூராய்ப் போகச்சொல்லி 'காட்டலாக்'கும் ஸாம்பிளும் கொடுத்து அனுப்புவதும் ஒரு வகை விளம்பரந்தான். இன்னும் கைநோட்டிஸுகள் சுவர்நோட்டிஸுகள், பத்திரிகை விளம்பரங்கள், ரெயில்வே விளம்பரங்கள், தபால் விளம்பரங்கள் (Postal Advertising) விளம்பர ப்ரஸங்கங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் ப்ரயோஜனப்படும்.

மேல் நாட்டில் முக்யமாய் க்ரேட் ப்ரிடனை (Great Britain) * பார்ப்போம். அங்கே விளம்பரம் ஜாஸ்தியாயினும் போதுமான அளவு இல்லை யென்று தெரியவருகிறது. தற்காலத்தில் அங்கே 100,000 வ்யாபாரிகள் விளம்பரம் செய்து வருகிறார்கள் என்றும், ஒரு வருஷத்தில் பத்துகோடி பவுன் விளம்பரத்தில் செலவழிகிற தென்றும், விளம்பர ஸங்கத்தின் ப்ரஸிடெண்டாகிய மிஸ்டர் தாமஸ் ரஸ்ஸல் என்பவர் தெரிவிக்கிறார். 100-க்கு கிட்டத்தட்ட ஒருவர் தான் விளம்பரம் செய்கிறார் என்று அவர் அபிப்ராயப்படுகிறார். இதற்கு ஒரு முக்ய காரணம் உள்ளது. என்னவெனில் விளம்பரம் செய்வது அகௌரவமான தென்றும், நிறை குடம் நீர்தளும்பாதது போல நல்ல சாக்குகளுக்கு விளம்பரம் வேண்டியதில்லை யென்றும் பல பழைமையான வ்யாபாரிகள் நினைக்கிறார்கள். இது தப்பான அபிப்ராயம். அத்தேசத்தில் புதிதாய்த் தலைப்பட்ட அனேகம் வர்த்தகர்கள் தங்கள் தேசத்திலும் அயல் நாடுகளிலும் தகுந்த விதமான விளம்பரங்கள் செய்து பெரிய லாபத்தை அடைந்திருக்கிறார்கள் என்று தாமஸ் ரஸ்ஸல் சொல்லுகிறார்.

தென் இந்தியாவில் சில கம்பெனிகள் தான் விளம்பரத்தில் பணம் போடுகிறார்கள்: ஸ்பென்ஸர், ஓக்ஸ், பி. ஆர். அண்ட் ஸன்ஸு அடிஸன், ஸ்மித், ஹிக்கின்பாதம் முதலிய கம்பெனியார்கள் இடைவிடாது இவ்விராஜதானிகளில் உள்ள முக்ய பத்ரிகைகளில் விளம்பரம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நடக்கும் வ்யாபாரம் அபாரம் என்பதை நேரில் பார்த்தால் நன்கு விளங்கும். தமிழர்கள் துணிந்து அதே விதமாய் விளம்பரம் செய்தால் அதே பயனைப் பெறலாம் என்று சொல்லவும்வேண்டுமோ. ஒரு பக்கத்துக்கு 5 ரூ முதல் 40 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கிற நமது ராஜதானி பத்ரிகைகளில் விளம்பரம் செய்ய மயங்குவானேன். இதைவிட நயம் எங்கே யிருக்கிறது மேல்நாட்டில் ஒருவார பத்ரிகையின் ஒரு பக்கத்திற்கு ஒரு தடவைக்கு 300 ரூ. வரையில் கொடுத்து விளம்பரங்கள் போடவில்லையா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழிப்படி பத்ரிகையின் விளம்பர விகிதம் குறைச்சலாயிருக்கும் இந்த ஸமயத்தில் விளம்பரம் செய்ய ஆரம்பித்து விற்பனையை ஜாஸ்தி செய்து கொள்ளவேண்டும். இன்னும் 10 'வரு

* க்ரேட் ப்ரிட்டன் என்பது இக்லண்ட், ஸ்காட்லண்ட், வேல்ஸ் ஆகிய மூன்றும் சேர்ந்த தீவுக்குப் பெயர். இவைகளுடன் ஐயர்லண்ட் தீவும் சேர்ந்தால் எல்லாவற்றிற்கும் 'ப்ரிட்டிஷ் ஐலஸ்' (British Isles.) என்று பெயர்—பr,

ஷம் கழிந்தால் விளம்பர விகிதம் கட்டாயம் ஜாஸ்திப்படும். இது ஜோஸ்யமல்ல. ஏன் என்று கேட்கிறீர்களா? பத்ரிகைகள் இப்போது 2,000 காபிகள் அச்சிடப்பட்டால் பத்து வருஷம்கழித்து 1,000 அல்லது 10,000 ஆகிவிடும். ஜனங்கள் வரவர பத்ரிகைகள் வாசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இங்கிலாந்தைப் போல் இத்தேசத்திலும் பத்ரிகைகள் ஊருக்கு ஊர், தெருவிற்குத் தெரு, விற்கப்பட வெகு காலமாகாது. இன்னும் ஒரு மாமாங்கத்திற்குள் இது உண்மையா பொய்யா என்று அறிந்து கொள்ளலாம்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற டிஸம்பர் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 21 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

		ரூபாய்.
5	பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள்	ரூ. 6,09,781
4	இன்ஷூரென்ஸ் கம்பெனிகள்	... 1,60,000
2	அச்சிட்டு ப்ரசுரம் செய்யுங் கம்பெனிகள்	... 80,000
3	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர	... 5,00,000
1	பருத்திமில் கம்பெனி	... 10,00,000
1	பருத்தி, ஜூட் ஸ்க்ருக்களும ப்ரெஸுகளும்	... 2,00,000
2	மில்லுகளும் ப்ரெஸுகளும் (மேற்சொன்னவை தவிர)...	6,00,000
2	தேயிலைக் கம்பெனிகள்	9,00,000
1	நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி	40,000
21.		40,89,781

GERMAN SILVER.

ஜெர்மன் ஸில்வர்.

ஜெர்மன் ஸில்வர் என்னும் வெள்ளைச்செம்பு செய்ய இன்னின்ன உலோகங்கள் சேர்த்து உருக்கவேண்டுமென்பதையும் ஒவ்வொரு உலோகத்திலும் எவ்வளவு பாகம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதையும் பற்றி 'விச்வகர்ம குலோபகாரி' பின்வருமாறு எழுதுகிறது.

உருக்குகையில் கீழே குறிக்கும் அட்டவணைக்கிணங்க உலோகங்களை ஒன்றின்பின் ஒன்றாகச் சேர்த்துருக்கி, தெளியும்போது கட்டிவிட்டு பின்வேண்டியபடி உபயோகப்படுத்திக்கொள்ளவும்.

நெம்பர்.	இரும்பு.	நிக்கல்	செம்பு	நாகம்	வெள்ளீயம்	ஷரா.
1	2	24	55	16	3	காரண்டிகள் செய்ய.
2	...	2	5	3	...	மெல்லிய, தகடு அடிக்கலாம். ரொம்ப பளபளப்பா யிருக்கும். வெள்ளிக்கு பதிலாக ஆபரணங்களுக் குபயோகப் படுகிறது.
3	...	1	2	1	...	
4	...	2	6	2	...	
5	...	1	5	2	...	
6	$2\frac{1}{2}$	$31\frac{1}{2}$	$40\frac{1}{2}$	$25\frac{1}{2}$	...	முதல்தரம் வைசு வெள்ளைச் செம்பைப்போன்றது.
7	...	26	50	24 அல்லது 40		வெள்ளிக்கு நிகர்.
8	...	6	15	70	...	
9	...	$22\frac{1}{4}$	60	$17\frac{3}{4}$	...	
10	...	$19\frac{1}{4}$	66	$18\frac{3}{4}$	...	
11	...	18	14	41	...	சத்துஉடையும்
12	...	5	12	4	...	தகடும் கம்பியும் செய்யலாம்
13	...	5	5	...	...	நாகஞ் சேர்த்ததை விட உயர்வு.

MECHANICAL ENGINEERING SCHOOL AT COCANADA.

காக்கிநாடாவில் ஒரு மெகானிகல் இஞ்ஜினியரிங் பள்ளிக்கூடம்.

தொழிலாளிகளுக்கு மெகானிகல் இஞ்ஜினியரிங் அதாவது யந்த்ரங்களைப் பூட்டுதல், கழற்றுதல், ரிபேர் செய்தல் முதலிய யந்த்ர வேலைகளைப்பற்றி ஸாதாரண விஷயங்களைக் கற்பிப்பதற்காக காக்கிநாடாவில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

THE DECAY OF INDIAN INDUSTRIES.

இந்திய கைத்தொழில்கள் க்ஷீணிப்பது.

இந்திய கைத்தொழில்களில் பல விருத்தியடையாமல் க்ஷீணித்து வருகின்றன. இதற்குக் காரணம் முக்யமாய் இந்திய தொழிலாளிகள் தங்களுடைய வேலைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளாமலும் வேலைகளை குற்றம் குறையில்லாமல் சீக்ரம் செய்வதற்கு வேண்டிய ஸாதனங்களை உபயோகிக்காமலுமிருப்பதே. அவர்களுக்கு உபயோகப் படக்கூடியதாய் தொழில்களைப்பற்றிச் சொல்லும நூல்கள் தேசபாஷைகளில் ஒன்றும் இல்லை. இங்கிலீஷ் தெரிந்தவர்கள் கூட இங்கிலீஷிலுள்ள தொழில் பத்ரிகைகள் ஒன்றும் தருவிப்பதில்லை.சில இந்தியத்தொழிலாளிகள் தங்களுக்குத் தெரிந்த கைததொழில் முறைகளை ஒருவருக்கும் கற்றுக் கொடுக்காமல் ரகஸ்யமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களிடம் தொழில் கற்றுக்கொள்ள வருபவர்களுக்குக் கூடத் தெரிவிப்பதில்லை. ஏனென்றால் தங்களிடம் கற்றுக்கொள்ள வருபவர்களுக்கு தொழில் ரகஸ்யங்களைக் கற்றுக்கொடுத்து விட்டால் கற்றுக்கொள்பவர்கள் தங்களுடைய நிலைமையைக் கெடுத்து விடுவார்கள் எனறு பயப்படுகிறார்கள். இந்த எண்ணம் இந்திய தொழிலாளிகளிடம் வெகு காலமாக இருந்து வருகிறது.மேலும் கைத்தொழில்கள் கற்பிக்க பள்ளிக்கூடங்களும் கிடையா. இவைகளோடு இன்னொரு முக்ய காரணமும் இருக்கிறது.இந்தியர்கள் ஸாமான்கள் வாங்கும்போதெல்லாம் ஸாமான்களில் ரொம்பக்குற்றம் கண்டுபிடித்து விலையை ரொம்பக் குறைத்துக் கேட்கிறார்கள். இதனால் தொழிலாளிகள் விலைக்குத் தகுந்த சரக்குச் செய்யஆரம்பித்து ஸாமான்கள் செய்வதில் நல்ல பொருளை உபயோகிக்காமல் வேலைபாட்டையும் குறைத்து விடுகிறார்கள்.

TANNING IN INDIA.

இந்தியாவில் தோல் பதனிடுதல்.

பம்பாயிலுள்ள ஒரு காலேஜில் ரஸாயன சாஸ்த்ர போதகரா யிருக்கும் மிஸ்டர் பி. வி. மேட் என்பவர் ஸமீபத்தில் பம்பாயில் தோல் பதனிடும தொழிலைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார். அவர் அந்த ப்ரஸங்கத்தில் சென்னை ராஜதானியில் சென்ற சில வர்ஷங்களாக தோல் ஸாமான் தொழில் விருத்தியாய்க் கொண்டு வருகிற தென்றும, ஆனால் இந்தியா முழுவதிலும் பார்த்தால் தோல் அதிகமாகக் கைத்தொழில்களில் உபயோகப் படவில்லையென்றும் சொன்னார். மேலும் கீழான ஜாதிகள் என்று சொல்லப்படும் சக்கிலியர்கள் வம்ச பரம்பரையாக தோல் பதனிடும் தொழிலைச் செய்து வருபவர்களா யிருப்பதால், அவர்களுக்கு இந்தத் தொழிலில் கொஞ்சம் தேர்ச்சி யிருக்கிற தெனறும், ஆகையால் இந்த ஜாதியார்களுக்கு கீழ்த்தரக் கல்வி கற்பிப்ப தல்லாமல் தோல் பதனிடும் கைத்தொழிலை கற்பித்து வரவேண்டு மென்றும், தோல் வேலைகள் ப்ரபலமாயுள்ள விடங்களில் தோல் வேலைகளை அதிலும் முக்யமாய் தோல் பதனிடும் வேலையை அவர்களுக்கு கற்பிக்க பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தால் அவர்களுடைய தொழிலறிவு மேம்பட்டு தேர்ந்த தொழிலாளிகளாவார்க ளென்றும் சொன்னார். கீழான ஜாதிகளை உயர்த்தமுயலும ஜனசார சீர்திருத்தக்காரர்கள் இவ்விஷயத்தில் அதிக கவலையெடுத்து உழைக்க வேண்டியது அவச்யமாகும்.

The Educational World.
வித்யாவிஷயப் பகுதி.

EXPERIMENTS IN THE SCIENCE OF EDUCATION.

போதனா சாஸ்த்ரத்தில் ஆராய்ச்சிகள்.

அநேக கல்விமான்கள் ப்ரக்ருதி சாஸ்த்ரம், வானசாஸ்த்ரம், ரஸாயனசாஸ்த்ரம், தாவர சாஸ்த்ரம், மனஸ் தத்வ சாஸ்த்ரம் முதலிய பல சாஸ்த்ரங்களைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து அந்தந்த சாஸ்த்ரங்களை மிகவும் விருத்தி செய்திருக்கிறார்கள். ஆனால் கல்வி கற்பிப்பதைப் பற்றிப் பலர் பல நூல்கள் எழுதியிருந்தாலும் கல்விமான்கள், சிலகாலத்துக்கு முன் வரையில், கல்வி கற்பித்தலை ஒரு சாஸ்த்ரமாக பாவித்து அதில் ஆராய்ச்சிகள் செய்ய ஆரம்பிக்கவேயில்லை. கொஞ்சகாலம் முதல்கொண்டு தான் ப்ரொபஸர் எர்ன்ஸ்ட் ம்யூமான் என்னும் ஐரோப்பியர் போதனாசாஸ்த்ரத்தைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்து வருகிறார். அவருடைய ஆராய்ச்சிகளைப்பற்றி அவருடைய சிஷ்யர்களில் ஒருவர் ஒரு இங்க்லீஷ் பத்ரிகைக்கு ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

ப்ரொபஸர் ம்யூமான் அநேக இடங்களில் போதனா சாஸ்த்ர ஆராய்ச்சிச் சாலைகள் ஏற்படுத்தி தமது கொள்கைகளை தமது மாணவர்களுக்குக் கற்பித்தும், சிறுவர்களைப் பரீக்ஷித்து ஆராய்ச்சிகள் செய்தும் வருகிறார். சில போதனா சாஸ்த்ரிகள் போதனா சாஸ்த்ரத்தைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்வதில் ப்ரயோஜனம் ஒன்றுமில்லையென்று சொல்லிவருகிறார்கள். ஆயினும் ம்யூமானோ போதனாசாஸ்த்ரமானது ஆராய்ச்சிகளால் ரொம்ப பலனடைந்திருக்கிறதென்றும், அதனால் உபாத்யாயர்களுக்கு ரொம்ப ப்ரயோஜன மேற்படுமென்றும் ஸாதிக்கிறார். உபாத்யாயர்கள் தாங்கள் கற்பிக்கும் போது உபயோகிக்கும் முறைகளின் தன்மையையும் அவைகளை உபயோகிக்க வேண்டியதின் அவச்யத்தையும் நன்றாய் அறிந்து கொள்வதோடு, வித்யா ஸம்பந்தமான கேள்விகளைப்பற்றிப் பரிசீலனை செய்யும்போது பிள்ளைகளின் ஸ்தானத்திலிருந்துகொண்டு, அவர்களுடைய தன்மையையும் மனப்போக்கையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஆராய்ச்சிகள் செய்யவேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார். இன்னும், கல்வி ஸம்பந்தமான சட்டங்களும், கல்விக்குறைகளை நிவர்த்திக்கஎடுத்துக் கொள்ளும் முறைகளும் சாஸ்த்ர ஆதாரமுள்ளனவாய் இருக்கவேண்டுமென்றும், அதாவது சாஸ்த்ர ரீதியாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கொள்கைகளை அநுஸரித்தனவாயிருக்க வேண்டுமென்றும், சொல்லுகிறார். முதலில் நாம் சாஸ்த்ர ரீதியான உண்மைகளை யறிய முயலவேண்டும். உதாரணமாக புத்திசாலித்தனம் என்பதைப்பற்றிப் பேசுவோம். கெட்டிக்காரப் பையன்களுக்கும் மந்தமான பையன்களுக்கும் உள்ள புத்திசாலித்தனங்கள் எந்த விஷயத்தில் வித்யாஸப்படுகின்றன. புத்திசாலித்தனம் என்பதென்ன? இந்த அறிவு பிறப்பைப் பற்றியதா? அல்லது நாமாக கஷ்டப்பட்டு உழைத்து அடையக்கூடியதா? பொதுவாய்ப் பிள்ளைகளுக்கு ஸ்வபாவமாக உள்ள புத்திசாலித்தனத்துக்கும் படிப்பாலும் பழக்கத்தாலும் அடையக்கூடிய புத்திசாலித்தனத்துக்கும் வித்யாஸமுண்டா? என்று சில கேள்விகள் உண்டாகின்றன. சிலர் பிள்ளைகள் இயற்கையாகவே கெட்ட குணமுள்ளவர்கள் என்கிறார்கள், சிலர் குழந்தைகள் இயற்கையில் நல்ல குணமுள்ளவர்களென்றும், சேர்க்கையால்தான்

கெட்டுப் போகிறார்களென்றும் சொல்லுகிறார்கள்.

வேறு சிலர் குழந்தைகள் கெட்டவைகளுமல்ல, நல்லவைகளுமல்ல; அவைகளுக்கு கெட்டதும் நல்லதுமில்லாத பொதுவானகுணங்களிருக்கின்றன; அவைகளை எந்த விதமாக வேண்டுமென்றாலும் திருப்பலாமென்று சொல்லுகிறார்கள்.

சிலர் குழந்தைகளுக்கு புத்திசாலித்தனம் பிறப்பிலேயே ஏற்பட்டிருக்கிறதென்கிறார்கள். சிலர் புத்திசாலித்தனமானது உழைத்து அடையவேண்டியது என்கிறார்கள். வேறு சிலரோ அது இயற்கையிலேயே ஏற்பட்டிருப்பதோடு உழைத்து அடையக்கூடியதாயும் இருக்கிறதென்கிறார்கள்.

உபாத்யாயர்கள் பிள்ளைகளின் புத்திசாலித்தனம் எப்படியிருக்கிறதென்று பார்க்கும்போது பிள்ளைகள் பள்ளிக்கூட வேலைகளைச் செய்து முடிக்கிறார்களா என்று பார்ப்பது மாத்ரம் போதாது. அந்த வேலைகளைச் செய்ய எவ்வளவு சக்தி (எனெர்ஜி) பிடிக்கிறது, அதாவது எவ்வளவு காலமும் எவ்வளவு உழைப்பும் வேண்டியிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். மூன்று பிள்ளைகள் ஒரு கணக்கைப் போட்டு ஒரே அளவாக மார்க்குகள் வாங்கியிருக்கலாம். அதனாலேயே மூன்று பிள்ளைகளும ஒரே புத்திசாலித்தனமுள்ளவர்களென று சொல்வதற்கில்லை. ஒரு பையன் அந்தக் கணக்கை 3-நிமிஷத்திலும், இன்னொரு பையன் 30-நிமிஷத்திலும், மூன்றாவதுபையன் 1 மணி நேரத்திலும் செய்திருந்ததாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் எந்தப் பையன் ரொம்ப புத்திசாலி? அல்லது அவர்கள் ஒரு செய்யுளை மனப்பாடம் செய்து எல்லாரும் ஒரு குறித்த மார்க்கையே அடைந்தார்களென்றும், மனப்பாடம் செய்வதற்கு ஒரு பையன் செய்யுளை மூன்று தடவையும் இன்னொரு பையன் 30 தடவையும், மூன்றாவது பையன் 60 தடவையும் வாசிக்கவேண்டியிருந்ததென்றும் வைத்துக்கொள்வோம். அப்படியானால் எல்லா பையன்களும் ஒரே புத்திசாலித்தனமுள்ளவர்களென்று சொல்லலாமா?

ப்ரொபஸர் ம்யூமான் பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளின் புத்திசாலித்தனத்தை நிதானிக்க பின்வரும் வழியைக் குறிப்பிடுகிறார். செய்த வேலைக்கு ஒரு மார்க்கு ஏற்படுத்திக்கொண்டு அதை வேலைசெய்வதற்கு வேண்டியிருந்த எனெர்ஜி அதாவது சக்தியின் அளவால் வகுத்தால் பிள்ளைகளின் புத்திசாலித்தனம் எவ்வளவு என்பது ஏற்படுமென்கிறார்.

அதைப் பின்வருமாறு விவரிப்போம். மூன்று பிள்ளைகள் ஒரு கணக்கைப்போட்டு ஒவ்வொருவரும் 100 மார்க்குகள் அடைகிறார்களென்று வைத்துக்கொள்வோம்; அந்தக் கணக்கைச் செய்ய முதல் பையனுக்கு 3-நிமிஷமும், இரண்டாவது பையனுக்கு 30-நிமிஷமும், மூன்றாவது பையனுக்கு 60 நிமிஷமும் பிடிக்கின்றன வென்றும் வைத்துக் கொள்வோம். ம்யூமான் சொல்லுகிறபடி

$$\text{புத்திசாலித்தனம்} = \frac{\text{செய்தவேலை}}{\text{வேலைக்குப பிடித்த சக்தி}}$$

முதல் பிள்ளையின் அறிவு $= 100 \div 3 = 33\ 1/3$ ஆகிறது. இரண்டாவது பிள்ளையின் அறிவு $100 \div 30 = 33$. மூன்றாவது பிள்ளையின் அறிவு $100 \div 60 = 1\ \ 2/3$. ஆகவே முதல் பிள்ளையே மிகவும் புத்திசாலித்தன முள்ளவனென்று ஏற்படுகிறது.

பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் எழுதுவதாலும், நடப்பதாலும், மெதுவாய்ப் பேசுவதாலும், பல காட்சிகள் கவனத்தைக் கவர்

ந்து விடுவதாலும், பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் வாசித்தால் சரியாய் மனப்பாடம் செய்ய முடியாதென்றும், அவர்கள் தனியாய் உட்கார்ந்து வாசித்தால் சீக்ரமாயும் நன்றாயும் மனப்பாடம் செய்ய முடியுமென்றும் பலர் நம்பி வருகிறார்கள். ஆனால் ப்ரொபஸர் ம்யூமான் அந்தக் கொள்கை தவறென்று சொல்லுகிறார். அவர் அநேகம் மாணவர்களைப்பரீக்ஷித்ததில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்கும் பிள்ளைகளின் வேலை ரொம்ப உயர்ந்ததாயும், தனிமையில் உட்கார்ந்து வாசிக்கும் பையன்களின் வேலை ரொம்பத் தாழ்ந்ததாயும் இருப்பதாய்த் தெரியவருகிறதாம். மேலும் மாணவன் ஒரு அறையில் தனிமையாய் கூட ஒருவருமில்லாமல் வாசிப்பதைவிட யாராவது அந்த அறையிலிருந்தால் அவன் படித்த பாடத்தின் அளவு அதிகமாயிருக்கிறதென்று தெரியவருகிறதாம்

இப்படியாக அவர் பல ஆராய்ச்சிகள் செய்து சாஸ்த்ரீயமான ஸித்தாந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார். பிள்ளைகளின் குணவித்யாஸங்களையும் அவர்களுக்குள்ள பொது இயல்புகளையும், உபாத்யாயர்கள் ஸுலபமாய்த் தெரிந்துகொள்ள வழிகள் கண்டுபிடித்து விட்டால், மாணவர்களை சாஸ்த்ரீயமாய் தாரதரம் பிரித்து மேல்வகுப்புகளுக்கு மாற்றலாம். தற்காலம் செய்வதுபோல பரீக்ஷைகளின் மார்க்குகள், வயஸு முதலியவைகளைக் கொண்டு மேல்வகுப்புகளுக்கு மாற்றுவதும் தாரதரம் பிரிப்பதும் வேண்டியதில்லை. இந்த நோக்கத்தைக்கொண்டே ப்ரொபஸர் ம்யூமானும் அவருடைய மாணவர்களும் அநேக ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள்.

THE LIGHTING OF SCHOOLS.

பள்ளிக்கூடங்களில் வெளிச்சம்.

இங்க்லண்டில் ஸமீபத்தில் வித்யாபிமானிகள் ஒரு கான்பரென்ஸ் கூடினபோது, பள்ளிக்கூடங்களிலுள்ள வெளிச்சத்தைப்பற்றிப் பேசினார்கள்.

வெளிச்சத்தின் ப்ரகாசத்தை அளவிடுவதற்கு 'காண்டில்' (Candle) அதாவது மெழுகுவர்த்தி வெளிச்சத்தை ஆதாரமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். அதைக்கொண்டு ஒரு வெளிச்சம் எத்தனை 'காண்டில் பவர்'(Candle power) அதாவது எத்தனை மெழுகுவர்த்தி ப்ரகாசம் இருக்கிறதென்பது அறிந்து கொள்ளப்படுகிறது. உபாத்யாயர்கள் பள்ளிக்கூடங்களின் அறைகளில் எந்த பாகத்தில் எவ்வளவு "காண்டில் பவர்" வெளிச்சம் இருக்க வேண்டுமோ அவ்வளவு இருக்கிறதா என்பதைக்கண்டு பிடிப்பதில் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஒரு கருவிகண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருவியால் பள்ளிக்கூட அறைகளின் எந்த பாகத்திலும் வெளிச்சம் சரியான அளவு இருக்கிறதா என்பதை நாம் ஸுலபமாய் அறிந்து கொள்ளலாம். அந்தக்கருவியை எல்லா பள்ளிக்கூடங்களும் வாங்கி உபயோகிக்க வேண்டுமென்று ஷை கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்கள் அபிப்ராயப்பட்டார்கள். ஜன்னல்கள் மேல்தளம் வரையிலும் உயர்ந்திருக்க வேண்டும். இதனால் நல்ல வெளிச்சம் ஏற்படுவதோடு காற்றோட்ட வஸதியும் வ்ருத்தியடைகிறது. கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்கள் பிள்ளைகளுக்கு வீட்டு அப்யாஸம் கொடுப்பதை ரொம்பவும் ஆக்ஷேபித்தார்கள். ஏனென்றால் பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட வெளிச்சமிருக்கவேண்டுமென்று ஒரு திட்டம் ஏற்படுத்தியிருப்பதில் பிள்ளைகள் அந்த வெளிச்சத்திலேயே வாசித்துப்பழகியிருப்பார்களாதலால், பிள்ளைகளுக்கு வீட்டு அப்யாஸம் கொடுத்தால் அவர்களுடைய வீடுகளில் பெரும்பாலும் வெளிச்சம்

ரொம்ப கேவலமாயிருப்பதனுல் பிள்ளைகளின் கண்பார்வை ரொம்ப கெடுதலடையக்கூடும் என்று சொல்லப்பட்டது.

எலிமெண்டரி ஸ்கூல்களில் சரிகை வேலை போன்ற ரொம்ப நுட்பமான தையல்வேலை கற்றுக்கொடுப்பது கூடாதென்றும் அதனுல் பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் ப்ரயோஜனம் இல்லை என்றும் ஒருவர் சொன்னுர். பள்ளிக் கூடங்களில் உபயோகிக்கப்படும் புஸ்தகங் களில் சிலவற்றில் ரொம்ப வழவழப்பான கடுதாசி உபயோகிக்கப்படுகிறது. இதனுல் கண்ணுக்கு ரொம்ப கெடுதல் ஏற்படுவதால் அப்படிப்பட்ட கடுதாசிகள் உள்ள புஸ்தகங் களை உபயோகிக்கக் கூடாதென்று சொல்லப் பட்டது.

A SCHOOL FOR VILLAGE WORKMEN.

க்ராமக் கைத்தொழிலாளிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம்.

மத்யமாகாணங்களைச் சேர்ந்த அநேக க்ரா மங்களில் நூதன விவஸாயக் கருவிகளையும் யந்த்ரங்களையும் ரிபேர் செய்யவும் அவைகளை பூட்டவும் தெரிந்த தொழிலாளிகள் இல் லாததால் விவஸாயிகளுக்கு அதிக ச்ரமம் ஏற் பட்டு வருகிறது. இந்தக் கஷ்டத்தை நீக்கும பொருட்டு மத்ய மாகாண கவர்னமெண்டார் நாக்பூரில் ஒரு பள்ளிக்கூடம் ஒன்று நடத்தி வருகிருர்கள். அதில் தச்சர்களின் சிறுவர் களுக்கும், கொல்லர்களின் சிறுவர்களுக்கும் விவஸாய வேலைகளுக்கு வேண்டிய தச்சுவேலை இரும்புவேலை ஆகிய இவைகளைக் கற்றுக்கொ டுத்து வருகிருர்கள். அதில் க்ராமத் தொழி லாளிகளின் சிறுவர்களைத்தான் சேர்த்துக் கொள்கிருர்கள். பையன்கள் தேசபாஷையில் 4-வது வகுப்புத் தேறியிருக்க வேண்டுமாம். அவர்களுடைய வயது 15-க்கு மேற்பட்டிருக் தக்கூடாதாம்.

MORAL INSTRUCTION TO JAIL CONVICTS.

ஜெயில் கைதிகளுக்கு ஸன்மார்க்க போதனை.

ஜெயிலில் உள்ள கைதிகளுக்கு மதவிஷயங் களையும் ஸன்மார்க்க விஷயங்களையுங் கற்பிப் பதைப்பற்றி கவர்ன்மெண்டார் சிலகாலமாக யோசித்து வந்திருப்பதோடு, யாராவது அப் படி ஸன்மார்க்க போதனை செய்ய முன் வந் தால் அவர்களுக்கு அனுமதி கொடுப்பதாக வும பலதடவைகளில தெரிவித்திருக்கிருர் கள். ஸமீபத்தில் சேலம் கலெக்டர் ஆபீஸில் அக்கௌண்டண்டாக இருந்த மிஸ்டர் முத்து ஸாமி அய்யர் சேலம் ஸெண்ட்ரல் ஜெயிலி லுள்ள ஹிந்து கைதிகளுக்கு ஞாயிற்றுக்கிழ மைகளிலும மற்ற விடுமுறை நாட்களிலும் மதவிஷயங்களையும் ஸன்மார்க்க விஷயங்களை யுங் கற்பிக்க முன் வந்ததை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டு, அவருக்கு அனுமதி கொடுத் திருக்கிருர்கள். அவரைப்போல வேறு யா ராவது கைதிகளுக்கு ஸன்மார்க்க போதனை செய்வதாக முன் வந்தாலும் அவர்களுடைய ப்ரோரணைகளைப்பற்றி கவனிப்பதாக கவர்ன் மெண்டார் தெரிவித்திருக்கிருர்கள்.

EXPEDITING DISBURSEMENT OF PAY TO TEACHERS.

உபாத்யாயர்களுக்கு தாமஸமின்றி சம்பளம் பட்வாடா செய்தல்.

போடு எலிமெண்டரி ஸ்கூல்களிலுள்ள உபாத்யாயர்களுக்கு சம்பளம் பட்வாடா செய்வதில் இப்போதுள்ள முறையால் தாம ஸம ஏற்படுவதால் சம்பளப்பணத்தைதாலுகா போர்டாபீஸிலிருந்து தாசில்தார் மூலமாய் அனுப்பாமல், நேரே மணியார்டர் மூலமாய் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவிட வேண்டு மென்று கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக் கிருர்கள்.

The Legal World.
வ்யவஹாரப் பகுதி.

ORAL AGREEMENT AND LEASE.
வாய்ப் பேச்சான ஒப்பந்தமும் குத்தகைக்கு விடுதலும்.

முதல் ப்ரதிவாதிக்கு கார்டியனாக கோர்ட்டால் நியமிக்கப்பட்ட இரண்டாம் ப்ரதிவாதி முதல் ப்ரதிவாதிக்கு ஸொந்தமான ஒரு நிலத்தை வாதிக்கு 5-வருஷத்துக்கு குத்தகைக்கு விடுவதாக ஸாதாரண கடுதாசியில் ரெஜிஸ்டர் செய்யாமல் ஒரு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார். அதன்மேல் சிறிது காலத்துக்குப்பிறகு வாதியானவர் ஒப்பந்தப்படிக்கு 2-ம் ப்ரதிவாதி நிலத்தைக் குத்தகைக்கு விடவேண்டுமென்று கோர்ட்டில் வ்யாஜ்யம் போட்டார். இதற்கு ஆதாரமாக மேற்சொன்ன ரெஜிஸ்டர்செய்யப் படாத ஒப்பந்த பத்ரம் எழுதப்படுமுன் இருவரும் வாய்ப்பேச்சாகச செய்திருந்த ஒரு ஒப்பந்தத்தை எடுத்துக்காட்டி அப்படி வாய்ப்பேச்சாக ஒப்பந்தம் செய்திருந்தார்களென்பதை ருசுப்படுத்த ரெஜிஸ்டர் செய்யாத ஒப்பந்தப் பத்ரத்தை ஸாக்ஷ்யமாகக் காட்டினார். இந்தக் கேஸை விசாரித்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் அந்த பத்ரம் ஸாக்ஷ்யமாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்லவென்று சொல்லி வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டார். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜின் முன்னால் இது அப்பீலுக்குப் போகவே, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், அந்த வ்யாஜ்யம் வாய்ப்பேச்சான ஒப்பந்தத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறதென்றும் வாய்ப்பேச்சான உடன்படிக்கையைருசுப்படுத்துவதற்கு, ரெஜிஸ்டர்செய்யாத உடன்படிக்கைப் பத்ரம் ரெஜிஸ்டர்செய்யாயலிருந்தாலுங் கூட ஸாக்ஷ்யமாக ஏற்றுக்கொள்ளத் தகுந்ததென்றும், சொல்லி வ்யாஜ்யத்தை மறுவிசாரணை செய்யும்படி உத்தரவிட்டார். அந்த உத்தரவின்மேல் ப்ரதிவாதிகள்ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

ஹைக்கோர்ட்டார் பின்வருமாறு அபிப்ராயப்பட்டார்கள். வ்யாஜ்யத்துக்கு ஆதாரம் முதலில் ஏற்பட்ட வாய்மொழியான உடன்படிக்கையே யொழிய ரெஜிஸ்டர் செய்யாத உடன்படிக்கைப் பத்ரமல்லவென்றும், வாதிக்குக் குத்தகைபெற பாத்யங் கிடைத்திருக்கிறதென்று காட்ட ரெஜிஸ்டராகாத உடன்படிக்கைப் பத்ரம் ஸாக்ஷ்யமாக ஏற்றுக்கொள்ளப் படாதென்றும் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் சொன்னது சரியே. ஆகவே, கேஸை மறுபடியும் விசாரிக்க வேண்டுமென்று ஜில்லா ஜட்ஜ் உத்தரவு போட்டதும் சரியே.

ஆனால், குத்தகைக்கு விடுவதாக வாய்ப்பேச்சாக உடன்படிக்கை செய்து கொண்டதை ருசுப்படுத்துவதற்கு ரெஜிஸ்டர்செய்யப்படாத குத்தகைப் பத்ரத்தை ஸாக்ஷ்யமாக ஏற்றுக் கொள்ளலாமென்று ஜில்லாஜட்ஜ் சொன்னது சரியல்ல. குத்தகைக்கு விடுவதாக உடன்படிக்கை செய்துகொள்வது ஸ்தாவரஸொத்தை பாதிக்கும் ஒரு நடவடிக்கையாகும். ரெஜிஸ்டர் செய்யப்பட வேண்டிய ஒரு பத்ரம் ரெஜிஸ்டர் செய்யப்படாமலிருந்தால், ஸ்தாவர ஸொத்துஸம்பந்தமான ஒரு நடவடிக்கையை ருசுப்படுத்துவதற்கு ஒரு ஸாக்ஷ்யமாக உபயோகிக்கக் கூடாது. ஆகையால் குத்தகைக்கு விடுவதாகச் செய்துகொள்ளும் ஒரு உடன்படிக்கையை ருசுப்படுத்துவதற்கு ரெஜிஸ்டர் செய்யாத குத்தகைப் பத்ரத்தை ஸாக்ஷ்யமாக உபயோகிக்கக்கூடாது. ஆகவே, ப்ரதிவாதிகளின் அப்பீலை தள்ளிவிடுகிறோம்.

1 லா வீக்லி 296.

APPOINTMENT OF GUARDIAN.

கார்டியன் நியமனம்.

தனக்குக் கொஞ்சம் பணம் தரவேண்டுமென்று வாதி ஒரு மைனர் மீது வழக்குக் கொண்டுவந்தார். மைனரின் கார்டியனைக் குறித்த நாளில் கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென அந்த மைனரின் தாயாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. தாயார் குறித்த தேதியில் ஆஜராகாததால் தன் குழந்தைக்குக் கார்டியனாக இருப்பதில் தாயாருக்கு ஆக்ஷேபமில்லையென்று, அவளையே கார்டியனாக நியமித்து மைனர் மீது எக்ஸ்பார்ட்டி டிக்ரி செய்யப்பட்டது. உடனே தாயாரானவள் தனக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லையென்றும் அதனால் டிக்ரியைத் தள்ளிவிட வேண்டுமென்றும் மனுசெய்து கொண்டாள்.

நோட்டீஸ் தனக்குக் கிடைக்கவில்லையென்று தாயார்சொன்னதை நம்பாமல் அவள் கொண்டு வந்த மனுவை பெஜவாடா டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் தள்ளிவிட்டார்.

தாயார் ஹைகோர்ட்டில் ரிவிஷன் பெட்டிஷன் தாக்கல் செய்தாள். அது மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர் முன்னால் வாதிக்கப்பட்டது.

தாயாருக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தபோதிலும் தான் கார்டியனாக இருக்க ஸம்மதமென்று தாயார் சொல்லிக் கொள்ளாததால் அவளை கார்டியனாக நியமித்தது சட்டவிரோதமென்றும், மைனர் கட்சிசொல்லிக் கொள்ளப்படவில்லையென்றும் ஜட்ஜியின் முன்வாதிக்கப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர் அந்த ஆக்ஷேபம் சரியல்லவென்று ரிவிஷன் பெட்டிஷனைத் தள்ளி விட்டார். அதன் பேரில் லெட்டர்ஸ் பேடண்ட் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டு மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங், ஜஸ்டிஸ் ஸர் சங்கரன் நாயர் ஆகிய இவர்கள் முன்பாக விசாரணைக்கு வந்தது.

ஸிவில் ப்ரொஸீஜர் கோடின்படி ஒருவருடைய ஸம்மதியில்லாமல் அவரை கார்டியனாக நியமிக்கக் கூடாதென்றும், விசாரணைத் தேதியில் கார்டியன் ஆஜராகததால் அவர் ஸம்மதப்பட்டாரென்று கொள்ளல் கூடாது என்றும், ஆதலால் மைனர்பக்கம் வாதிக்கப்படவில்லையென்றும், தாயார் கார்டியனாக நியமிக்கப்பட்டது சட்ட விரோதம் என்றும் அப்பீல் மனுதாருக்காக வாதிக்கப்பட்டது.

தாயாருடைய ஸம்மதம் வெளிப்படையாய்ச் சொல்லப்பட வேண்டியதில்லையென்றும், அவளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதும் ஆஜராகாததால் அவளுக்கு கார்டியனா யிருப்பதில் ஆட்சேபமில்லையென்பது ஊகித்தறியக் கூடியதென்றும் எதிர் மனுதாருக்காக வாதிக்கப்பட்டது.

ஜட்ஜிகள் அப்பீல் மனுதாரரின் வக்கீல் சொன்ன வாதத்தை ஒப்புக்கொண்டு, தாயார் கார்டியனா யிருக்கிறேன் என்பதை வெளியிட்டுச் சொல்லாததால் அவளைக் கார்டியனாக நியமிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை; ஆதலினால் மைனர் பக்கம் வாதிக்கப்படவில்லை; எனவே அவன்மீது ஏற்பட்ட டிகிரி சட்டவிரோதம் என்று தீர்மானித்தார்கள். முடிவில் ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர் செய்த தீர்ப்பை மாற்றிவிட்டு கேஸை விசாரித்து முடிவு செய்யவேண்டுமென்று கீழ்க்கோர்ட்டுக்கு உத்தரவிட்டார்கள்.

WOMEN AND PRIESTSHIP IN A TEMPLE.

ஸ்த்ரீகளும் கோவில் அர்ச்சக வேலையும்.

திருச்சினாப்பள்ளி மலைக்கோட்டைக் கோவிலில் த்யாகராஜ குருக்கள் என்று ஒரு அர்ச்சகர் இருந்தார். கோவில் பூஜை செய்ய தனக்கிருந்தபாத்யத்தைத் தன் மனைவி ஸௌந்தராம்பாளுக்கும் தன்னுடைய மாப்பிள்ளை யோகவன குருக்களுக்கும் உயில் பத்ரம் மூலமாகக் கொடுத்துவிட்டு அவர் இறந்துபோய் விட்டார்.

உடனே மாப்பிள்ளை பூஜையை ஒப்புக்கொண்டு செய்து வந்த போதிலும் ஸுந்தராம்பாளுக்கு வரும்படியில் வீதம் கொடுக்கவில்லை. ஆகையால் ஸுந்தராம்பாள் வ்யாஜ்ஜியம் செய்தாள். முன்ஸிப் கோர்ட்டிலும், டிஸ்டிரிக்ட் கோர்ட்டிலும் ஸுந்தராம்பாளுக்கு விரோதமாக முடிவு செய்யப்பட, ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டாள். அப்பீல் விசாரணைக்கு வருமுன் யோகவன குருக்களுடன் ராஜிசெய்துகொண்டு ராஜிநாமாப்படி டிக்ரி செய்யவேண்டு மென்று ஹைகோர்ட்டைக் கேட்டுக்கொண்டாள். ராஜிநாமாப்படி ஏன் டிக்ரி செய்யக்கூடாது என்றுகாரணமிருந்தால் அறிவிக்கும்படி ஹைகோர்ட்டார் யோகவன குருக்களுக்கு நோட்டீஸ் கொடுத்தார்கள். அவருக்காக மிஸ்டர் எஸ். டி. ஸ்ரீநிவாஸ கோபாலாச்சாரியார் ஆஜராகி வாதித்தார். பூஜாதி கைங்கர்யங்களைத் தானே செய்யக்கூடாத ஒரு ஆஸாமிக்குத் தன்னுடைய பாத்யதையை விட்டுக்கொடுப்பதா யிருப்பதால் ராஜிநாமா செல்லத்தக்க தல்லவென்று அவர் வாதித்தார். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யரும், மிஸ்டர் ஜஸ்டிஸ டயாப்ஜியும் அப்பீலை முடிவு செய்தார்கள். கோவில் அர்ச்சகர் வேலையைச் செய்ய ஸ்திரீகள் தகுதி யற்றவர்க ளென்றும், சட்டப்படி ராஜிநாமா செல்லத்தக்க தல்லவென்றும், அர்ச்சகருக்கு ஏற்பட்ட வேலைகள் சரியாய்செய்யப்படுகின்றவா என்று கவனிக்க பொது ஜனங்களுக்கு சிரத்தை இருக்கிற தென்றும், ஆகையால் அர்ச்சகரா யிருத்தல் நம்பிக்கையான ஒரு ஸ்தானத்தை வகிப்பதாகு மென்றும், ஜட்ஜ்கள் அபிப்ராயப்பட்டு ராஜிநாமாவை அங்கீகரிக்காமல் அப்பீல் மனுவைத் தள்ளி விட்டார்கள்.

WITHDRAWAL OF APPEAL.

அப்பீலை வாபஸ் வாங்கிக்கோள்வது.

ஒரு ஹிந்து விதவை பலான ஸொத்து தனது புருஷனுடைய ப்ரத்யேகமான ஸொத்தென்றுசொல்லி தன் மைத்துனருடைய மகன் மேல் வியாஜ்யம் போட்டாள். கோர்ட்டார் அந்த ஸொத்து அவிபக்தகுடும்ப ஸொத்தென்றும், ஆனால் அவளுக்கு கிடைக்க வேண்டிய ஜீவனாம்சத்திற்காக அந்த ஸொத்தை அவளே வைத்திருக்கட்டும் என்றும் தீர்ப்புச்செய்தார்கள்.

விதவை அந்தத் தீர்ப்புக்குமேல் அப்பீல் செய்தாள். ஆனால் சிறிது காலத்துக்கெல்லாம் அந்த அப்பீலை வாபஸ் வாங்கிக்கொண்டாள். விதவை இறந்துபோன பிறகு அந்த ஸொத்தானது விதவையினுடைய பெண்ணின் வசம் வந்துவிட்டது. அந்தப்பெண் தன்னுடைய தகப்பனுக்கு வார்ஸ் என்றும், ஆகையால் அந்த ஸொத்து தன்னுடைய தென்றும் சொல்லிவந்தாள். விதவையினுடைய மைத்துனன்மகன் அந்த ஸொத்து தனக்குச் சேர வேண்டுமென்று ஒரு வ்யாஜ்யம் போட்டார். விதவையின் மகள், அந்தஸொத்து தனது தகப்பனாருடைய ஸொந்த ஸொத்தானதால் அது அவருடைய வார்ஸாகிய அவளுக்குக் கிடைத்திருக்கிற தென்றும், முதல் வ்யாஜ்யத்தில் செய்த தீர்ப்பானது அவளைக்கட்டுப்படுத்தா தென்றும் வாதித்தாள்.

தீர்ப்பு:—முதல் வ்யாஜ்யத்தில் செய்த தீர்ப்பானதுஸொத்து தன் புருஷனுடைய ஸ்வயார்ஜிதமென்று சொல்லிவந்த விதவைக்கு விரோதமாகப் போனதால், அந்தத் தீர்ப்பு அவளுடைய பெண்ணாகிய ப்ரதிவாதியையுங் கட்டுப்படுத்தும். முதல்வ்யாஜ்யம்ஸம்பந்தப்பட்ட மட்டில்அந்தவ்யாஜ்யம் நன்றாகவே வாதிக்கப்பட்டது. விதவைதான் போட்டிருந்த அப்பீலை வாபஸ் வாங்கிக் கொண்டதாலேயே முதல் வ்யாஜ்யத்தில்செய்த தீர்ப்பை நிறைவேற்றக் கூடாதென்றுசொல்வதற்கில்லை.

37-பம்பாய் 172.

EXAMINING GOODS BEFORE DELIVERY.

ஸாமான்களை டெலிவரி செய்வதற்கு முன் சோதித்தல்.

வாதி பம்பாயிலிருந்து அல்லகபாத்துக்கு வைன் சாராயம் சில பெட்டிகளில் வைத்து ரெயில் மூலமாய் அனுப்பினர். பெட்டிகள் நன்ருய்ப் பாக் செய்யப்பட்டிருந்தன. பெட்டிகளின் ஓரத்தில் உலோகத்தால் செய்யப்பட்ட பட்டங்களும் அடிக்கப்பட்டிருந்தன. பெட்டிகளுக்கு கம்பி போட்டு சுற்றியிருந்ததோடு ஸீல்களும் போடப்பட்டிருந்தன. கம்பியை யறுக்காமலும் ஸீல்களை யுடைக்காமலும் பெட்டிகளைத் திறப்பது முடியாத கார்யம். வாதி ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய், ஸாமான்களை எடுத்துக்கொள்வதற்காக அவைகளை நிறுத்துப்பார்த்தார். கம்பெனியார் கொடுத்த ரசீதில் குறிக்கப்பட்டிருந்த நிறைக்குக் குறைந்திருந்தது. மேலும் இரண்டு பெட்டிகளில் போட்டிருந்த பட்டங்கள் தளர்ந்திருந்தன. அதன்மேல் வாதி தாம் பெட்டிகளை யெடுத்துக்கொண்டு போகுமுன் ரெயில்வே கம்பெனியார் பெட்டிகளைத்திறந்து காட்டவேண்டு மென்று சொன்னர். ரெயில்வே கம்பெனியார் திறந்து காட்ட மறுத்துவிட்டார்கள். வாதியும் பெட்டிகளை எடுத்துக்கொண்டு போக மறுத்து நஷ்டத்துக்கு வ்யாஜ்யம் போட்டார்.

பெட்டிகளை கோர்ட்டுக்குக் கொண்டுவந்து திறந்து பார்த்ததில், வாஸ்தவத்தில் ஸாமான் குறைவுபடவில்லை யென்றும், ரெயில்வே ரசீதில் குறிக்கப்பட்டிருந்த நிறை தவறென்றும் தெரியவந்தது. பெட்டிகள் முதலில் அனுப்பின போது எப்படி யிருந்தனவோ அப்படியே யிருந்ததோடு பெட்டிகளில் உள்ளவற்றை எடுப்பதற்கு முயற்சி செய்திருந்ததாகவும் ஒரு அடையாளமில்லை. இந்த வ்யாஜ்யத்தில் கோர்ட்டார் பின் வருமாறு தீர்ப்புச்செய்தார்கள். பெட்டிகளை வாதியினிடம் கொடுக்கு முன் அவைகளைத் திறந்து சோதித்துக்கொடுக்க ரெயில்வே கம்பெனியார் கடமைப்பட்டவர்களல்ல. அப்படித்திறந்து சோதித்துக்காட்ட ரெயில்வே கம்பெனி மறுத்தது சட்டவிரோதமானதல்ல. ரெயில்வே கம்பெனியார் வாதிக்கு நஷ்ட ஈடு கொடுக்கவும் கடமைப்பட்டவர்களல்ல.

11-அல்லகபாத் லா ஜர்னல் 772.

REUNION AFTER PARTITION.

பாகம் செய்த பிறகு ஒன்றுசேருதல்.

மிதாக்ஷரச் சட்டத்தின்படி அனுஷ்டான முள்ள ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தின் பாகஸ்தர்களாகிய தகப்பனுரும் அவருடைய புத்ரர்களும் அவிபக்த குடும்ப ஸொத்தை பாகம் செய்து கொண்டார்கள். அதன்மேல் கொஞ்ச காலத்துக்குப் பிறகு புத்ரர்களில் ஒருவர் தகப்பனுருடன் மறுபடியும் ஒன்று சேர்ந்து கொண்டார். அப்படியாஞல் தகப்பனுர் இறந்துபோன பிறகு தகப்பனுருக்கு பாகமாகக்கிடைத்த ஸொத்து அவருடன் ஒன்றுசேர்ந்த புத்ரருக்குக் கிடைக்குமே யொழிய மற்ற புத்ரர்களுக்கு அந்த ஸொத்தில் பாத்யம் கிடையாது.

9-நாக்பூர் லா ரிபோர்ட் 150.

CUSTODY OF MINOR.

மைனர் யார் வசமிருப்பது என்பது.

ஆறுவயஸுள்ள ஒரு மைனர் பையனை அநேகமாய் பிறந்தது முதல் கொண்டே அவனது தாயைப் பெற்றப்பாட்டியும் அவளுடைய புத்ரனும் பராமரித்து வந்தார்கள். அந்தக்காலத்தில் மைனருடைய பாட்டனுர் அந்த மைனருடைய பராமரிப்புக்காக கொஞ்சமும் பண உதவி செய்யவில்லை. அவனுக்காக வேறு விதமாக ஒரு உதவியும் செய்யவில்லை. அப்படியாஞல் மைனருடைய பாட்டியும் அவளுடைய மகனும் மைனருடைய க்ஷேமத்துக்காகத் த்ருப்திகரமான ஏற்பாடுகள் செய்து வரும் வரையில் மைனருடைய பாட்டனுருககு எதிரிடையாக மைனருடைய பாட்டியே மைனரை தன்வசம் வைத்திருக்க பாத்ய முள்ளவளாவாள்.

8 பஞ்சாப் வீக்லி ரிபோர்ட் 144.

The Sanitary World.

ஸுகாதாரப் பகுதி

CURES FOR SLEEPLESSNESS.

தூக்கமின்மைக்கு சிகித்ஸைகள்.

தேகம் ஸௌக்யமாயிருப்பதற்கு புருஷர்கள் ஆறுமணியும், ஸ்திரீகள் 7-மணியும், குழந்தைகள் 8மணியும் தூங்க வேண்டுமென்று சொல்வதுண்டு. ஸாதாரண ஜனங்களுக்கு இவ்வளவு தூக்கம் போதாதென்று தற்காலத்து வைத்யர்கள் சொல்லுகிறார்கள். இந்த நேரத்துக்கும் குறைவாய்த் தூங்குகிறவர்கள் ஸுகதேகிகளாக இருப்பார்களென்று சொல்ல முடியாது.

தூக்கமின்மைக்குப் பல காரணங்களிருக்கின்றன. மனக்கவலை, துக்கம், அஜீர்ணம், பாதங்கள் குளிர்ந்திருப்பது, படுக்கும் அறைகளில் சுத்தமான காற்று உலாவாமலிருப்பது, தேகப்பயிற்சி யில்லாமை, தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாத ஆகாரம் சாப்பிடுதல், நரம்புகள் நல்ல நிலைமையிலில்லாமை ஆகிய இவைகளால் தூக்கத்துக்குத் தடை ஏற்படும்.

நூற்றில் தொண்ணூறுபேருக்கு தூக்கம் வாராததற்கு காரணம் நரம்புகள் நல்ல ஸ்திதியிலில்லாமலிருப்பதே. நரம்புவ்யாதி வைத்யர்கள் இதற்கு ஒரு ஸுலபமான சிகித்ஸை சொல்லுகிறார்கள். அதாவது, தூக்கம் வாராமல் கஷ்டப்படுகிறவர்கள் படுக்கையில் படுத்துக்கொண்ட பிறகு ஒருபிஸ்கோத்தும் கொஞ்சம் ஸ்டௌட் என்னும் சாராயமும் சாப்பிடவேண்டுமாம். இது ரொம்ப கைகண்ட வைத்யமாம். படுத்துக்கொள்ளுமுன் இரண்டு மூன்று ஈரவெங்காயத்தைப் பச்சையாகத் தின்றால் சிலருக்கு தூக்கம் வந்துவிடுகிறதாம்.

ஸாயந்த்ரம் 7 - மணிக்கே சாப்பிட்டுவிட்டு ராத்ரி 11 மணி அல்லது 12-மணி வரையில் விழித்திருந்து, பிறகு ஒன்றும் சாப்பிடாமல் படுத்துக்கொள்ளுகிறவர்கள் தூக்கம் வாராமல் கஷ்டப்படுவதுண்டு. அவர்கள் மேலே சொன்ன ஸ்டௌட் சாராயமும், பிஸ்கோத்தும் சாப்பிடுவது நல்லது. ஏனென்றால் பசியாயிருந்தால் தூக்கம் வருவது கஷ்டம். ஸாயந்த்ரம் 7 மணிக்குச் சாப்பிட்டால் இரவில் 11 அல்லது 12-மணிக்கு வயிற்றில் ஒன்றுமிராது. ஆகையால் ஏதாவது ஸ்வல்ப ஆகாரம் எடுத்துக்கொள்வது நல்லது. ஸ்டௌட் எடுத்துக்கொள்ள ஆக்ஷேபமிருந்தால் ஒரு க்ளாஸ்பாலாவது கெட்டியான ஸூப்பாவது சாப்பிடலாம்

ஸாயந்த்ரம் உஷ்ணமான இடத்திலிருந்துவிட்டு இரவில் ரொம்ப குளிர்ச்சியான அறையில் படுத்துக்கொள்வது நல்லதல்ல. குளிர்காலத்தில் படுத்துக்கொள்ளும்போது மெல்லிய உடைகள் தரித்துக்கொள்வதும் குளிர்ச்சியான போர்வைகள் போர்த்துக்கொள்வதும் கெடுதல்தான். ஏனென்றால் குளிர்ச்சியால் அஜீர்ணம் உண்டாகி தூக்கம் வாராமல் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆகையால் படுக்கும்போது தேகத்தையும், அறையையும், போர்வைகளையும் கதகதப்பாய் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பாதங்கள் ஈரமாயிருப்பதாலும் தூக்கம் வாராமலிருப்பதுண்டு.

அப்படிப்பட்ட ஸமயங்களில் காலுக்கு பிடிப்பான ஸாக்ஸ் போட்டுக்கொண்டு, படுத்துக்கொள்ளுமுன் வேகமாய் நடப்பது நல்லது. ரத்தோட்டம் குறைவாயிருப்பவர்கள் ஸாதாரணமாய்ப் பின்வருமாறு செய்வதால் பாதங்கள் உஷ்ணமடைந்துவிடும். படுக்கப்போகுமுன் ஒருபாத்ரத்தில் குளிர்ந்தஜலத்தைவிட்டு அதில்

பாதங்களை இரண்டு நிமிஷநேரமாவது, அதற்குக் கொஞ்சம் குறைவாகவாவது, வைத்திருக்கவேண்டும். பிறகு பாதங்களை வெளியிலெடுத்து முரட்டுத்துணியால் தேய்த்து துடைக்கவும். இதனால் பாதங்கள்ரொம்ப சூடாகிவிடும்.

அநேகம்பேருக்கு படுத்துக்கொள்ளு முன் ஒருடம்ளர் குளிர்ந்த ஜலம் குடித்தால் தூக்கம் வந்துவிடுவதுண்டு. ஜலமானது ரத்தத்தை சுத்திசெய்து, குடலில் எரிச்சலுண்டுபண்ணிக்கொண்டிருக்கும் ஆகாரத்தை அப்புறப்படுத்தி, மனஸுக்கு ஸமாதானம் உண்டாக்குகிறது. இவைகளால் தூக்கம் ஸுலபமாய் வந்துவிடும்.

தூக்கம் உண்டுபண்ணும் மருந்துகள் சாப்பிட்டுப் பழக்குவது கூடாது. அவைகளைச் சாப்பிட்டுப் பழகிவிட்டால் பிற்பாடு ஆயுஸு முழுவதும் இந்த மருந்துகள் சாப்பிட்டால் தான் தூக்கம் வரும். அப்புறம் அது கெட்ட வழக்கமாக ஏற்பட்டு சாகும்வரையில் மருந்துகளுக்கு அடிமையாகவே இருக்கவேண்டியிருக்கும்.

தூக்கம் வராமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு படுக்கை ரொம்ப மெதுவாக இருப்பதைவிட கொஞ்சம் முரட்டுப் படுக்கையாக இருப்பது தான் நல்லது. ஸ்ப்ரிங்வைத்த மெத்தைகள் தேகத்துக்கு ரொம்ப நல்லவை. படுத்துக்கொள்ளும் இடம் கொஞ்சங்கூட சத்தமில்லாமல் அமைதியாயிருப்பது நல்லதல்ல. படுத்துக்கொள்ளும் அறையில் கடியாரம் "டிக் டிக்" என்று அடித்துக்கொண்டிருப்பது சிலருக்கு தூக்கம் வருவதற்கு ஸாதகமாயிருக்கிறதாம். தூக்கம்வராமல் கஷ்டப்படுகிறவர்கள் சில ஸமயம் மூளைபலவிஷயங்களைப் பற்றி யோசித்துக்கொண்டு கவலைப்படுவதைத் தடுப்பதற்காக படுத்துக்கொண்டே வாசிப்பதுண்டு. அது அவ்வளவு நல்லதல்ல, அதைவிட, அப்படிப் பட்ட ஸமயங்களில்படுக்கையைவிட்டெழுந்து ஒரு மேஜையின் கிட்ட உட்கார்ந்து, உட்கார முடியாமல் களைத்தும்போகும்வரையில் வாசிப்பது நல்லது.

RICE AS A MUSCLE BUILDER.

அரிசியின்போஷணை.

அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு பலக்குறைவும், தைர்யக்குறைவுமுண்டென்று சொல்வதுண்டு. ஆனால் ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தில், அரிசி சாப்பிடுபவர்களாகிய ஜப்பானியர் காட்டிய தைரியமும் கஷ்டங்களைப் பொறுத்திருக்கும் வல்லமையும் உலகம் முழுமைக்கும் ஒரு ப்ரமிப்பை யுண்டுபண்ணின. நெல் அரிசியில் ஓர்வித பசை பதார்த்தமே யதிகமாயிருப்பதால் அதை அற்பமான உணவாக எண்ணினார்கள். அப்படியானால் ஜப்பான் ஜாதியாருக்கு கோதுமை உணவுகளை அதிகமாய்ச் சாப்பிடும் ஜாதியாரை வெல்லக்கூடிய பலம் எங்கிருந்து வந்தது? அரிசியிலிருந்து ஜப்பானியர் பலமடைந்த வகையைப் பரிசோதனை பண்ணினவர்கள் ஒரு ரகஸ்யம் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதென்னவென்றால் அரிசியின் தவிட்டை நீக்காமல் சாப்பிடுவதுதான். இத்தேசத்திலுள்ளவர்கள் பிறதேசங்களுக்கு அனுப்பும் அரிசியை நன்றாய்த் தீட்டியே ஏற்றுமதிசெய்கிறார்கள். ஜப்பானியரோ அரிசியை இப்படி தீட்டி தவிட்டைப் போக்குவதில்லை. ரஸாயன பரிசோதனையினால் தவிட்டில் நூற்றுக்கு $12\frac{2}{3}$ விதமாய் "ஆல்புமினு"ம், நூற்றுக்கு $4\frac{3}{5}$ விதமாய் "பாஸ்பரஸ்ஸு" மிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு அருமையான உணவு பாகத்தை நீக்கியல்லவா நம்தேசத்தவர்கள் சாப்பிடுகிறார்கள்? நெல் விளையும் தேசங்களிலிருந்து தவிடு ஏராளமான மூட்டைக் கணக்காய் இங்கிலாந்து முதலிய மேற்குதேசங்களுக் கனுப்பப்பட்டு அங்கே மாடு, குதிரை முதலிய மிருகங்களை, அதனால்

கொழுக்கச் செய்கிறார்கள். தவிடு ஸாரம் நீங்கிய சோற்றைத் தின்பவர் பல மற்றவர்களாகவும், கஷ்டமனுபவிக்க இயலாதவர்களாகவும், தைரியங்குறைந்தவர்களாகவும், நீரிழிவு முதலிய வியாதியையுடையவர்களாயு மிருக்கிறார்கள். தவிடு, கஞ்சி என்பனவற்றையுண்டு ஜீவிக்கும் வேலைக்காரர்களும் தரித்ரர்களும் நோயற்றவர்களாகவும் பலமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நெல்லை அவித்துப் புழுங்கலாக்கிப் பின் அரிசியாக்குவதினாலும் அரிசியின் ஸாரம் கெட்டுப்போகிறது. பச்சையரிசி புழுங்கலரிசியைவிட பலமுள்ளதென்பது நன்றாய்த் தெரிந்த விஷயமே. பச்சையரிசியை மாவாக்கிமாப் பண்டங்கள் செய்துண்பது அதிலும் நலமாயிருக்கும். முன்காலத்திலுள்ளவர்கள் அரிசியைத்தீட்டி யெடுக்குந் தவிட்டையும் தின்று வந்தார்கள். தவிட்டிலுள்ள "ஆல்புமின்", "பாஸ்பரஸ்" என்னும் பதார்த்தங்கள் பலத்தையும் தைர்யத்தையும் கொடுக்கும் குணமுள்ளவஸ்துக்களேயாம். இக்காலத்திலுள்ளவர்கள் மேற்சொன்ன உணவை அசட்டைபண்ணி அதை ம்ருகங்களுக்கு உணவாக்கிக்கொண்டது பெரிய தவறுதலாகும். தவிட்டை நீக்கி அரிசியை யுண்பதினால் கீழை தேசங்களிலே ஆனைக்கால் நோய் உண்டாகிறதென்பது சில சாஸ்த்ர ஆராய்ச்சிசெய்தவர்களின் கொள்கை. ஆகவே புழுங்கலரிசியைக் காட்டிலும் பச்சையரிசியும், தவிடு நீங்கிய அரிசியைக்காட்டிலும் தவிடு நீங்காத அரிசியும் பலவிதத்திலும் நோய்கள் கிட்ட அணுகாமல் காக்குந் தன்மையுடையவை யென்று ருஜுவாகிறது.

ANTIDOTES FOR POISONS.

விஷங்களுக்கு முறிவுகள்.

'வைத்தியகலாநிதியின்' ஸமீபத்து ஸஞ்சிகை யொன்றில் மிஸ்டர் வி. எம். ருத்ரமூர்த்தி ஆசாரி சிலவிஷங்களுக்கு முறிவுகள் தெரிவித்திருக்கிறார்.

'சீதமண்டலத்தால்' கடியுண்ட பெயர்கள் உடனே முதிர்ந்த தேங்காயை உடைத்து ஒரு மூடியிலடங்கிய தேங்காயை யெல்லாம் கீறியெடுத்துச் சாப்பிடவேண்டும். இதை உடனே உபயோகித்தால் விஷவேகம் குணமாவதுண்டு.

நல்ல பாம்பு கடித்தவர்கள் உடனே எருக்கிலைக்கொழுந்தும், அதனுடன் அதில் நாலில் ஒருபங்கு புகையிலையும் சேர்த்து அரைத்து, பெரிய நெல்லிக்காயளவு சாப்பிடவேண்டும். ஸர்ப்ப விஷம் தலையில் ஏறி, கண்பஞ்சடைந்து, பற்கள் கட்டிக்கொண்டு இருந்தபோதிலும், கட்டிய பற்களை மெதுவாக நீக்கி, மேற்படி ஔஷதத்தை உள்ளுக்குச் செலுத்தினால் குணமுண்டாகிறது. வேறுவிதமான பாம்பு விஷங்களிலும் இதை உபயோகிக்கலாம்.

தேள்கொட்டின தக்ஷணமே விஷம் மேலுக்கு ஏறாமல் அவ்விடத்திற்குமேல் ஒரு கட்டுப்போட்டு, புதிய சுண்ணாம்பையும் உப்பையும் கலந்து நன்றாக அரைத்து, கொட்டியவாயில் சூடுண்டாகும்படி பத்துநிமிஷம் தேய்த்து சுண்ணாம்பையே கனமாகத் தடவிவிட்டு குளிர்ந்த காற்று வீசுமிடத்தில் உலாவிக்கொண்டிருந்தால், ஈரம் காயக்காய விஷம் இறங்க ஆரம்பிக்கும்.

ஸாதாரண பூச்சிக்கடிகளுக்கு பின் வருமாறு செய்யவேண்டும். நதிகளிலாவது குளங்களிலாவது அலைகளால் அரிக்கப்பட்டு ஓரங்களில் ஒதுங்கியிருக்கும் மெல்லிய பூமணலைக் கொண்டுவந்து, கட்டித் தயிரைவிட்டு மைபோல் அரைத்து, ஒரு பீங்கானில் வைத்துக்கொண்டு 4-அல்லது 5-நாள் வரையில் கடிகளின்மேல் நன்றாக தேய்த்து வருவதால் துர் நீர்கள் க்ரமமாக வெளிவந்துவிடும்; பிறகுகொஞ்சம் சுயவெள்ளையும் கற்பூரமும்கலந்து, தேங்காயெண்ணெயையும் போதுமான அளவு சேர்த்து,

நன்றாகக் குழைத்து மேற்படி கடிகளுள்ள இடங்களில் காலையும் மாலையும் தேய்த்து சுத்தமாகக் கழுவி வரவேண்டும்.

வெறிநாய் விஷத்துக்கு: மணத்தக்காளிச் செடியை இடித்து ரஸம் பிழிந்து, வெள்ளைத்துணியில் ஏழுதடவை வடிகட்டி, ஒரு நாளைக்கு அரைக்கால்படி ரஸம்வீதம் மூன்று நாள் உட்கொள்ளவேண்டும். ஆறுநாள் வரையில் உப்பில்லாமல் கஞ்சியையே சாப்பிட்டு வரவேண்டும். ஏழாவதுநாள் ஓமம் அரைத்து தேய்த்து வெந்நீரில் ஸ்நானம்செய்துகொண்டு, ஆறுவாரம் வரையில் நல்லெண்ணெய் சேர்க்காமல் மற்ற ஸாதாரண உணவுகளைப் புசித்து வந்தால் வெறிநாய் விஷத்தினால் உண்டாகும் விகாரங்கள் குணமாய்விடும்.

MALARIA GERMS.

மலேரியா க்ருமிகள்.

மலேரியாக்காய்ச்சலைப் பரவச்செய்யும் கொசுக்கள் மனிதரைக் கடித்ததும் அந்தக் கொசுக்களின் வாயிலுள்ள உமிழ்நீர் வழியாக மலேரியாவின் க்ருமிகள் ரத்தத்தில் சேருகின்றன. சேர்ந்ததும் க்ருமிகள் ரத்தத்திலுள்ள 'ரெட் கார்பஸில்' என்னும் சிவந்த பாகத்திற்குள் நுழைந்து அதை தின்கின்றன. பிறகு சிறிது நேரம் சும்மாவிருந்து ஒவ்வொரு க்ருமியும் 16-பாகமாய்ப் பிரிகிறது. உடனே 'ரெட்கார்ப்பஸில் வெடித்து பதினாறு புதிய க்ருமிகளை வெளிப்படுத்துகிறது. இந்தப் பதினாறு புதிய க்ருமிகளும் ரத்தத்தில் வ்யாபித்து ஒவ்வொரு க்ருமியும் ஒருபுதிய 'ரெட்கார்பஸிலைத்தேடி' முன்மாதிரியே தின்கிறது.

ஸாதாரண மலேரியாக்காய்ச்சலில் க்ருமிகள் இந்தமாதிரி பரவுவதற்கு 48 மணிநேரம் செல்லுகிறது. க்ருமிகள் 'ரெட்கார்ப்பஸிலைத்' தின்னும்போது தேகத்தில் உஷ்ணம் அதிகரித்து ஜ்வரம் உண்டாகிறது. க்ருமிகள் 16-பாகமாகப்பிரிந்து பிரிந்த பாகங்கள் ரத்தத்தில் கலக்கும்போது தேகமெல்லாம் குளிரும் நடுக்கமும் உண்டாகின்றன. இந்தக் குளிரும் நடுக்கமும் ஒருநாள் விட்டொருநாள் வருகின்றன. இதைத்தான் முறைக்காய்ச்சலென்று சொல்லுகிறோம்.

KAISER HEWS WOOD.

கெய்ஸர் விறகு வெட்டுகிறாராம்.

ஜெர்மனிதேசத்து சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் தமது தேகம் ரொம்ப பருத்துவருவதை தடுப்பதற்காக ஒவ்வொருநாளும் விறகுவெட்டி தேகப்பயிற்சிசெய்து வருகிறாராம். அவர் ஒவ்வொருநாள் காலையிலும் அவர் வேட்டையாடப்போகும்போது போட்டுக் கொள்ளும் உடை தரித்துக்கொண்டு மரங்களின் அடிக்கட்டைகளையும் கிளைகளையும் ரம்பத்தால் அறுக்கிறாராம். கட்டைகளை கோடாரியால் அடுப்பெரிக்கத் தகுந்த அளவுள்ள விறகுதுண்டுகளாக வெட்டுகிறாராம். இவருக்கு உதவியாக ஒரு காட்டிலாகா உத்யோகஸ்தர் அவருடன்கூட இருப்பாராம். கெய்ஸரின் மனைவி அடிக்கடி கெய்ஸர் விறகு வெட்டுமிடத்துக்கு வந்து அவர் தினம்வெட்டவேண்டிய அளவு விறகுவெட்டியிருக்கிறாரவென்று பார்ப்பதுண்டாம்.

DISEASE.

வ்யாதி.

ஜ்வரம் முதலியவ்யாதிகள் உண்டாகாதிருக்க நான்கு மார்க்கங்கள் உண்டு:—

(1) ஸுலகமான பேதி மருந்துகளை யுபயோகித்தல்.

(2) அதிகாலையில் எழுந்து அரைமைல் தூரம் நடந்து ஸ்நானம் செய்து ஸூர்யோதயத்துக்கு முன் வீடு வந்து சேர்ந்து ஆகாரமுண்ணுதல்.

(3) அதிகாலையில் குளிர்ந்த ஜலம் சாப்பிடுதல்.

(4) காலைத் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதற்கு முன் ச்வாஸத்தை 5 நிமிஷம் உள்ளுக்கு வாங்கி மறுபடியும் மெதுவாய் வெளிவிடவேண்டும். ச்வாஸ பந்தம் செய்வதால் சரீர பலமும் ஆயுள் வ்ருத்தியும் உண்டாகும்.

The Boys' World.

பையன்கள் பகுதி.

THE MORAL CODE OF ANIMALS.

ம்ருகங்களின் ஸன்மார்க்க விதிகள்.

மனிதர்களுக்குள் ஸன்மார்க்க ஸம்பந்தமான சட்ட திட்டங் களிருப்பதுபோலவே ம்ருகங்களுக்குள்ளும் சட்டதிட்டங்கள் இருந்து வருகின்றன. ஆனால் மனிதர்களுக்குள் வழங்கிவரும் ஸன்மார்க்க விதிகளும் சட்டங்களும் பெரும்பாலும் மனிதர்களாலேயே செய்யப்பட்டு அநுஷ்டானத்திலிருந்து வருகின்றன. ம்ருகங்களுக்குள் ஸ்ம்ருதி கர்த்தாக்களும் சட்ட நிரூபண ஸபைகளும் கிடையா. ம்ருகங்கள் மனிதர்களைப்போல் காரண கார்யங்களின் தன்மைகளை பகுத்தறிந்து அவைகளுக் கேற்றபடி யாதொரு விதியும் ஏற்படுத்திக்கொள்வதில்லை. அவைகள் அநுஷ்டித்துவரும் விதிகளெல்லாம் அவைகளின் இயற்கை யுணர்ச்சியால் ஏற்பட்டவைகளே யாகும்.

ம்ருகங்களின் ஸன்மார்க்க விதிகளில் முதலாவது ந்யாயமாய் எதற்குக் கீழ்ப்படிய வேண்டுமோ அதற்குக் கீழ்ப்படிவது. இந்த விதியை அநேக ப்ராணிகள் நடந்துகொள்வதில் பார்க்கலாம். கோழிகள் தங்கள் குஞ்சுகளுக்கு ஏதாவது தீங்கு நேரிடும் போலிருந்தால் உடனே தங்கள் குஞ்சுகளை அருகே வரும்படி கூவுவதும், அவைகள் தங்களுடைய தாயின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதும யாவருக்கும் தெரிந்தவை. அமெரிக்காவில் பூனை வர்க்கத்தைச் சேர்ந்ததாய் பூமாவென்று ஒரு ம்ருகமிருக்கிறது. அதற்கு சிங்கத்தின் நிறமும் சிறுத்தைப் புலியின் உருவமும் உண்டு. அது தன் குட்டிகள் தனக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவைகளை மிகக் கொடுமையாகக் கண்டிக்குமாம். மான்குட்டிகளுக்குக் கீழ்ப்படியுந் தன்மை அதிகமுண்டு. ஓநாயைக் கண்டுவிட்டால் மான் தன் குட்டிகளைக் கீழே படுத்துக்கொள்ளும்படி ஜாடை செய்யும். உடனே குட்டிகள் கீழே படுத்துக் கொள்ளுமாம்.

ம்ருகங்களின் இரண்டாவது ஸன்மார்க்க விதி ஸ்வஜாதியில் கொலை செய்யாமை. ஸ்வஜாதி ப்ராணிகளைக் கொலைசெய்யும் ம்ருகங்கள் மிகவும் அபூர்வம். ஓநாய் மாத்ரம் காயமடைந்த அல்லது இறந்துபோன ஓநாய்களைத் தின்பதுண்டு. சாரைப்பாம்புகள் சிலவற்றை ஒரு கூட்டில் விட்டுப் பிறகு அவைகளோடு வேறு ஒரு சாரைப்பாம்பை விட்டால் அவைகள் இந்தப் பாம்பை ஒன்றும் செய்வதில்லை. ஆனால் வேறு ஜாதிப்பாம்பு ஒன்றை அவைகளோடு விட்டால் அவைகள் உடனே இந்த வேறு பாம்பைக் கடிக்கின்றனவாம்.

ஜீவராசிகள் தங்களுடைய ஸ்வஜாதிகளைத் தின்பதென்றிருந்தால் அவைகள் வெகு சீக்ரம பூமியில் இல்லாமல் நசித்துப்போகும். ஆகையினால் தான் இயற்கையிலேயே ஸ்வஜாதியைக் கொல்லுங்குணம் அவைகளுக் கேற்படாமலிருக்கிறது.

மூன்றாவது, ம்ருகங்களுக்குள் ஒரு ஆண் பல பெண்களோடு சேர்ந்து வாழும் ஜாதிகள் ஒரு ஆண் ஒரே பெண்ணோடு மாத்ரம் வஸிக்கும் ஜாதிகளோடு சண்டைசெய்யும்படி நேர்ந்தால், பின் சொன்ன ஜாதி அதாவது ஏகதாரமுள்ள ம்ருகங்கள் தான் ஜயிக்கின்றன. இந்த நிலைமைக்குக் காரணம் ஏனென்றால், ஏகதாரவ்ருதமுள்ளஜாதிகளில் ஆணும் பெண்

னுமாகச் சேர்ந்து தங்கள் குட்டிகளைப் பாது காத்து ரொம்ப ஜாக்ரதையாய் வளர்க்கின்றன. பல தார ம்ருகங்களிலோ குட்டிகளைத் தாய்மாத்ரம் பாதுகாத்து வருகிறது. இதனால் ஏகதார வ்ருதமுள்ளவற்றின் குட்டிகள் சரியாய் வளர்க்கப்படுவது முடிகிறது.

ஓநாய், குள்ளநரி முதலிய உயர்ந்த ம்ருகங்கள் ஏகதார வ்ருதமுள்ளவை. இவைகள் தங்கள் குட்டிகளை மறந்து, குட்டிகளும் தங்கள் பெற்றோர்களை மறந்துவிட்டாலுங்கூட ஆணும் பெண்ணும் மாத்ரம் ஒன்றை ஒன்று மறப்பதேயில்லை. ரொம்ப உயர்ந்த ஜாதி ம்ருகங்களிலும், பறவைகளிலும் ஆணும் பெண்ணும் ஒரு தடவை கூடி வஸிக்கத் தொடங்கினால் மறுபடியும் பிரிந்துபோவதே யில்லை. அமெரிக்காவிலுள்ள ஒருவகைக் காட்டு வாத்து தனது கூட்டுப்பறவை இறந்து போனால் மறுபடியும் வேறு பறவையைத் தேடுவதே யில்லையாம். புறுக்கள் ஏகதார வ்ருதத்தை ரொம்பவும் கண்டிப்பாய் அநுஷ்டிப்பவை.

நான்காவது, ம்ருகங்கள் தங்களுடைய உடைமைகளைக் காப்பாற்றிக் கொள்வதில் அதிக கவலை எடுத்துக் கொள்வது. முக்யமாய் உணவு விஷயத்தில் தான் ம்ருகங்கள் வெகு ஜாக்ரதையாயிருக்கின்றன. இதற்கு உதாரணமாக ஒரு இங்க்லீஷ் கனவான் பின்வரும் விஷயத்தைச் சொல்லுகிறார்.

அவர் வட அமெரிக்காவில் அலாஸ்கா என்னும் மாகாணத்தில் இருந்தபோது அவரிடத்தில் சில நாய்கள் இருந்தனவாம். அவைகளில் ஒன்று மிகப்பெரியதாயும் உருவத்தில் பெரும்பாலும் ஓநாயைப் போலவும் சிறு பான்மை எஸ்கிமோ நாயைப்போலவும் இருந்தது. அது மற்ற நாய்களை மிகவும் தொந்தரை செய்வது வழக்கமாம். ஒருநாள் அவர் ஒரு சிறிய நாய்க்கு வேண்டியமட்டும் தீனிபோட்டு அது வயிறு நிறையத் தின்றபிறகு அதற்கு இன்னம் ஒரு எலும்பைப்போட்டார். அது எலும்பைத் தின்ன முடியாமலிருந்ததால் அதைக்கௌவிக் கொண்டுபோய் ஒரு தோட்டத்தில் மண்ணில் புதைத்துவைத்தது. பெரியநாய் அந்த எலும்பு புதைத்திருந்தவிடத்தை மோப்பத்தாலறிந்து அதை வெளியிலெடுக்கப் போயிற்று. சிறிய நாய் இதை யறிந்த உடனே அவ்விடத்துக்குப்போய் எலும்பு புதைத்திருந்த இடத்தின்மேல் நின்றுகொண்டு பெரிய நாயை வெகு உக்ரமாய் எதிர்த்தது. தனது உடைமை என்பதை யறிந்திராவிட்டால் அந்த நாய் அவ்வளவு உக்ரமாய் எதிர்த்திருக்காது. பெரியநாய் பிறர் ஸொத்தை விரும்புவது கூடாதென்று எண்ணிப்போலும் போய் விட்டது என்று அவர் சொன்னார். எல்லா ம்ருகங்களும் தங்கள் உடைமைகளுக்கு அடையாளம் போடுவது வழக்கமாம். பொதுவாய் அவைகள் தங்களுடைய தேகத்துவாஸனையை தங்களுடைய ஆகாரம் முதலிய உடைமைகளில் சேர்த்து விடுமாம். ஒரு ஓநாய் தனது ஆகாரத்தில் தனது அடையாளத்தைப் போட்டு விட்டால் மற்ற ஓநாய்கள் அந்த ஆகாரத்தைத் தொடுவதில்லையாம். குள்ளநரிகளினிடத்திலும் இந்த ஏற்பாடு உண்டாம். ஆனால் நரி ஓநாயின் ஆகாரத்தையும், ஓநாய் நரியின் ஆகாரத்தையும் தொடும் விஷயத்தில் இந்த நிபந்தனை கிடையாது.

ஐந்தாவது, பொய் சொல்லுகிற அல்லது ஏமாற்றுகிற ம்ருகங்களை அவைகளின் கூட்டாளிகள் லக்ஷ்யம் செய்வதில்லையாம். ஒரு ஓநாய் அல்லது வேட்டை நாய் தான் வேட்டையாடிச் செல்லும் ம்ருகம் இருக்குமிடத்தைச் சரியாய் மோப்பத்தால் கண்டுபிடிக்காமல் ஒரு தடவை ஏமாந்து போனால் அதன் பிறகு மற்ற ஓநாய்கள் அல்லது நாய்கள் ஏமாந்த ஓநாய் அல்லது நாயின் 'வார்த்தைக்கு' மதிப்பு வைப்பதேயில்லையாம். அதாவது, ஏமா

ந்த நாய் அல்லது ஒநாய் மறுபடியும் இன்ன விடத்தில் தாங்கள் வேட்டையாடும் ப்ராணி யிருக்கிறதென்று மோசம்பத்தால் ஊகித்துச் சொன்னாலும் அதை அவைகள் நம்புவதில்லை.

NECESSITY OF PHYSICAL EXERCISE.

சரீர அப்யாஸத்தின் அவச்யம்.

போதுமான சரீர முயற்சி இல்லாவிட்டால், தேகத்திலுள்ள அநேகவித யந்த்ரங்கள் தத்தம் வேலைகளைச் சரிவர நடத்தாமல் சக்தி யற்றுப்போகும். உண்ணும் உணவு சரியாய் ஜீர்ணமாக மாட்டாது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் மிதமான சரீரப் பயிற்சி அவச்யமாக வேண்டியது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்; உழைப்பில்லாத உடல் உரங் கொள்ள மாட்டாது. ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வயதிற்கும் தேகத்தின அமைப்புக்கும் சாப்பிடும் போஜனத்திற்கும் தக்கபடி கஸரத் செய்தல், சிலம்பப் பயிற்சி, நீந்துதல், ஓடுதல், வேகமாய் நடத்தல், பயிரிடுதல் முதலியவைகளில் எதையாவது தினந்தோறும் இரண்டு மூன்று நாழிகை நேரம் செய்வது அத்யாவச்யம். தேகமுயற்சிக்கு காலைப் பொழுதே உத்தமம். தேகமுயற்சி செய்து உடம்பில் வியர்வை உண்டாயிருக்கையில் குளிர்ந்த காற்றாவது குளிர்ந்த ஜலமாவது படும்படி விடக்கூடாது. அந்த ஸமயத்தில் தேகமெங்கும் ஒரு வஸ்த்ரத்தால் அழுத்தித் தேய்க்கவேண்டும்.

ஆரம்பத்தில் சரீராப்யாஸம் சிறிது வருத்தமாய்த் தோன்றுமென்றாலும், கல்வியைப் போல் தொடங்குங்கால் துன்பமாயிருந்து அப்புறம் இன்பத்தை கொடுக்கும்.

HOW MANY MOONS ARE THERE.

எத்தனை சந்த்ரன்கள் உண்டு.

உலகத்தில் ஒரே ஒரு சந்த்ரன்தான் உண்டென்று பலர் நினைக்கக்கூடும். வானத்தில் அநேக சந்த்ரன்கள் இருக்கின்றன. ஆனால் எத்தனை சந்த்ரன்கள் இருக்கின்றன என்பது இதுவரையில் திட்டமாய்த் தெரியவில்லை. சந்த்ரனென்பது ஒரு க்ரகத்தைச் சுற்றிப் போய்க்கொண்டிருக்கும் ஒரு சிறிய உபக்ரகமாகும். இதுவரையில் வானசாஸ்த்ரிகள் 25 சந்த்ரன்கள் கண்ணுக்குத் தெரிவதாகச் சொல்லுகிறார்கள். இவைகளில் இரண்டொன்றைத் தவிர மற்றவைகள் ரொம்ப பலமான தூரத்ருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால்தான் தெரியும்.

ஸூர்யமண்டலத்திலுள்ள பெரிய க்ரகங்களில் புதன் சுக்ரன் ஆகிய இரண்டையுந் தவிர மற்றவைகளுக்கெல்லாம் உபக்ரகங்கள் அதாவது சந்த்ரன்கள் உண்டு. சிலவானசாஸ்த்ரிகள் சுக்ரனுக்கும் ஒரு சந்த்ரன் உண்டென்றும் அதை சீக்ரம் கண்டு பிடித்துவிடலாமென்றும் சொல்லுகிறார்கள். பூமிக்கு ஒரே ஒரு சந்த்ரன்தான் உண்டு. செவ்வாய்க்கு இரண்டு சந்த்ரன்கள் உண்டு. வியாழன் அல்லது ப்ருகஸ்பதிக்கு 8-சந்த்ரன்களும், சனிக்கு 9-சந்த்ரன்களும், யுரேன்ஸ் என்னும் க்ருகத்துக்கு 4-சந்த்ரன்களும், நெப்டியூன் என்னும் க்ருகத்துக்கு ஒரு சந்த்ரனும் இருக்கின்றன. இந்த சந்த்ரன்களில் அநேகம் நாம் பார்க்கும் சந்த்ரனைவிட மிகவும் பெரியவை. வியாழனைச் சுற்றியோடும் சந்த்ரன்களில் ஒன்றாகிய கானிமீட் என்னும் சந்த்ரன் நமது சந்த்ரனைவிட 5 மடங்கு பெரியது. மிகவும் தீக்ஷண்யமான கண் பார்வை உள்ளவர்களில் அநேகருக்கு தூரத்ருஷ்டிக் கண்ணாடியின் உதவியில்லாமலே வியாழனுடைய சந்த்ரன்களைப் பார்க்க முடியுமாம்.

WRONG INFERENCES.

தப்பு அனுமானங்கள்.

ஒரு தேசத்து அரசர் இன்னொரு தேசத்து அரசருக்கு ஒரு ஸமாசாரம் சொல்லியனுப்பினார். தூதன் அரசனிடம் சென்று தனது அர

சன் சொன்னதைச் சொன்னான். அதாவது "கருப்பு வாலுள்ளதாய் ஒரு நீலப்பன்றி அனுப்பவும்; இல்லாவிட்டால்—" இதை தூதன் சொல்லி முடிக்குமுன் இரண்டாவது அரசன் அதற்கு பதிலாக "அது என்னிடம் இல்லை; இருந்தால்—" என்றுசொல்லி நிறுத்தி விட்டான். தூதன் தனது அரசனிடம்போய் பதிலைச் சொன்னான். இரண்டு அரசர்களும் ஒருவர் மற்றவரைத் தூஷித்ததாக எண்ணி யுத்தம்செய்ய ஆரம்பித்தார்கள். யுத்தத்தில் பல மனிதர்கள் இறந்துபோகவே அரசர்கள் ஸமாதானம் செய்துகொள்ள விரும்பி ஒருவர்க்கொருவர் ஸந்தித்துப் பேசலானார்கள்.

இரண்டாவது அரசன்:—"'கருப்புவாலுள்ள தாய் ஒரு நீல நிறமுள்ள பன்றி யனுப்பவும்; இல்லாவிட்டால்—' என்றுசொல்லி யனுப்பினீரே, அதன் தாத்பர்யமென்ன?"

முதல் அரசன்:—"ஏன், அந்தப் பன்றியில் லாவிட்டால் வேறு வர்ணமுள்ள பன்றி யனுப்பும்படி கேட்கச் சொன்னேன்; அதிருக்கட்டும்; நீர், 'அது என்னிடம் இல்லை; அது இருந்தால்—' என்று சொன்னீரே, அதன் தாத்பர்யமென்ன?"

இரண்டாவது அரசன்:—"'அதுஇருந்தால் கொடுத்தனுப்பியிருப்பேன்' என்று சொல்ல வெண்ணியிருந்தேன்."

அதன்மேல் இருவரும் ஸந்தோஷமடைந்து ஸமாதானமாய்ப் போனார்கள். இப்படித்தான் பேசும்போது பேச்சை முழுவதுங்கேட்காமல் ஒன்றுக்கொன்று எண்ணிக்கொண்டு அநேக ஜனங்கள் சண்டை போடுகிறார்கள்.

WISE SAYINGS.

நீதி வாக்யங்கள்.

ஸ்நேகிதர்களை மிகவும் ஜாக்ரதையாய் தேர்ந்தெடுத்தல் வேண்டும்; ஸ்நேகிதர்களே வாழ்க்கைக்குச் சிறந்த ஆஸ்தியாவார்கள்.

நீ செய்யவேண்டியவற்றை நிச்சயித்துக் கொள்; நிச்சயித்ததைத் தடையின்றி செய்.

எவனொருவன் ம்ருகத்தையும், பக்ஷியையும், மனிதனையும் ஒன்றாக நினைத்து அன்பு பாராட்டுகிறானோ, அவன் கடவுளை த்ரிகரண சுத்தியுடன் ஸ்துதிக்கிறவனாவான்.

ஒவ்வொருநாளும் நாம் வ்ருத்தியாகி வருகிறோம். அது இருவகைப்படும். நன்மையிலோ அல்லது தீமையிலோ வ்ருத்தியடைகிறோம். ஆகவே நாம் இரவில் படுத்துக்கொள்ளும் போது எந்த விஷயத்தில் வ்ருத்தியடைந்தோம் என்று நினைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நீயே உனக்குத் தீமையைத் தேடிக்கொள்ளாதே. உனக்குத் தீமை நேர்ந்தால் அதை எவ்விதமாக அநுபவித்து நன்மையடையலாமோ அவ்விதமாகச் செய்துகொள்.

திடமும் ஆரோக்யமுமுள்ள சரீரத்தைவிட மேலான செல்வமில்லை. மனத்தின் இன்பத்தை விட மேலான இன்பமில்லை

பிறர் கஷ்டப்பட்டால், இரக்கங்கொள்; பிறர் இன்பமடைந்தால், அவர்களுடன் ஸந்தோஷங்கொள்.

BRITH PLACE OF KALIDASA.

காளிதாஸர் பிறந்த விடம்.

ஸம்ஸ்க்ருதத்தில் மிகவும் ச்ரேஷ்ட கவியாகிய காளிதாஸர் இன்ன ஊரில் பிறந்தாரென்பதைப்பற்றி சிலர் சிலகாலமாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். வங்காளத்திலுள்ள பண்டிதர் மன்மதநாத பட்டாசார்யர் என்பவர் காளிதாஸரின் பிறப்பிடத்தைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து பார்த்து காளிதாஸர் வங்காளத்திலுள்ள நவத்வீபம் என்னும் ஊரில் பிறந்தாரென்று தெரிவித்திருக்கிறார். நவத்வீபம் என்னும் ஊர் ஸம்ஸ்க்ருதக் கல்விக்குப் பேர்போனது. இப்போதும் அவ்வூரில் பல வித்வான்கள் இருக்கிறார்கள். காளிதாஸர் அவ்வூரில் பிறந்தவரென்பதைக் குறிப்பதற்காக அவ்வூரில் அவர் பேரால் ஒரு புஸ்தகசாலையும் (லைப்ரரி), ரீடிங் ரூமும் ஸ்தாபிப்பதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

The Ladies' World.
ஸ்த்ரீகள் பகுதி.

MARRIAGE AFTER PUBERTY.
ருதுவானபின் கல்யாணம்.

வங்காளத்தில் ஸ்நேஹலதாதேவி யென்னும் பெண் தனது தகப்பனரை வரதக்ஷிணையின் கொடுமைக்கு ஆளாக்காமல் தப்புவிப்பதற்காக தனது உயிரைப் போக்கிக் கொண்டாள் என்று சென்றமாஸத்து ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அதன்மேல் வங்காளத்தில் அனேகம்பேர் வரதக்ஷிணையின் கொடுமையைப் போக்குவதற்கு என்ன செய்வதென்று யோசித்து வருகிறார்கள். மாணவர்களும் மற்றுமுள்ள வாலிபர்களும் தங்களுடைய கல்யாணத்துக்கு வரதக்ஷிணைப்பணம் கேட்பதில்லை' யென்று ப்ரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலும் ஜனங்கள் இவ்விஷயத்தைப்பற்றி கவனித்து வருகிறார்கள். வரதக்ஷிணையின் கொடுமையைப்போக்கப் பெண்கள் ருதுவானபின் அவர்களுக்கு விவாகம் செய்வது நல்லது என்று பலர் சொல்லி வருகிறார்கள். அது எம்மட்டில் சாஸ்த்ர ஸம்மதமானது என்பதைப்பற்றியும், முற்காலத்தில் கல்யாண ஏற்பாடு எப்படியிருந்தது என்பதைப்பற்றியும, தற்காலம்ருதுவாகுமுன் கல்யாணம் செய்யும் வழக்கம் எப்படி ஏற்பட்டதென்பதைப் பற்றியும் ஸமீபத்தில் காஞ்சியிலுள்ள ஒரு ப்ரமுகர் சொல்லிய விஷயங்களை கீழே சுருக்கமாய் தெரிவிக்கிறோம்.

ஆண்களில் ஒவ்வொருவரும் குறைந்தது 25-வயஸு வரையில் ப்ரும்மசாரி ஆச்ரமத்தில் இருக்க வேண்டுமென்று எல்லா சாஸ்த்ரங்களும் சொல்லுகின்றன. அதற்குப் பிறகு ப்ரும்மசாரியானவன் கல்யாணம் செய்துகொண்டு க்ருஹஸ்தாச்ரமத்தில் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. க்ருஹஸ்தாச்ரமத்திலிருப்பவருடைய கடமைகளில் ஒன்று தினப்படி அக்னிஹோத்ரம் செய்யவேண்டுமென்பது. இதைச் செய்வதற்கு மனைவி ஸதா கூட இருக்கவேண்டியது அவச்யம். எவரும் தமது மனைவியில்லாமல் ஒரு கர்மமும் செய்வதற்கில்லை. ஆகையினால் தான் கல்யாணமானபின் உடனே அக்னியை புருஷன் வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டுமென்றும், அங்கே தம்பதிகள் அக்னியை எப்போதும் வளர்த்து வர வேண்டுமென்றும் விதித்திருக்கிறது. அப்படியானால் இந்தவழக்கம் ஏற்பட்ட காலத்தில் இளம் வயஸுள்ள பெண்களை, அதாவது ஸ்த்ரீகளின் கடமையைச் செய்வதற்கு முடியாத சிறு பெண்களைப் புருஷன் வீட்டுக்குஅனுப்பியிருப்பார்கள் என்று சொல்லமுடியுமா? கல்யாணகாலத்தில் சொல்லும் மந்த்ரங்கள் எல்லாம் வதூவரர்கள் தக்க பருவமடைந்து விட்டார்கள் என்பதை யாதொரு ஸந்தேகமும் இல்லாமல் குறிக்கின்றன. மேலும் அக்னிஹோத்ரத்துக்கு சமையல் செய்ய ஒரு சிறு பெண் தகுதியானவளல்ல, நமது வீடுகளில் ருதுவாகாத பெண்கள் சமையல்செய்தால் பெரியவர்கள் சாப்பிடுவதில்லை. அப்படியிருக்க தேவதைகளுக்கு அந்த சாதம் ஏற்றதாகுமா?

கல்யாண காலத்தில் சொல்லும் மந்த்ரங்களை கவனிப்போம். புருஷன் தன்மனைவியைப் பார்த்துச் சொல்லும் மந்த்ரங்களில் இரண்டு பின்வருமாறு:—

“நீ எனது வீட்டுக்குப்போய் அங்கு அதன் யஜமானியாயிரு. அங்குள்ளவர்களை யடக்கியாண்டு யக்ஞங்களுக்கு வேண்டிய கட்டளைகள் இடு”

"முதலில் நீ ஸோமனிடமிருந்தாய். பிறகு கந்தர்வன் உன்னைத்தன்வசம் வைத்திருந்தான். அதன் பிறகு அக்னி உனது மூன்றுவது காதனுயிருந்தான். மனுஷ்ய ஜன்மமாகிய நான் உனது நான்காவது காதன்; ஸோமன் உன்னை கந்தவர்னிடம் கொடுத்தான். கந்தர்வன் அக்னியினிடம் கொடுத்தான். அக்னி உன்னை என்னிடம் கொடுத்திருக்கிறான்."

ஸோமன், கந்தர்வன், அக்னி ஆகிய மூவர்கள் இங்கு ஏன் ப்ரஸ்தாபிக்கப் படுகிறார்கள் என்றால், பெண்ணின் தேகத்தில் ரோமம் தோன்றினவுடன் ஸோமன் அவளைப்பாதுகாப்பவனாகிறார். மார்பு வளர்ச்சி யடையும்போது கந்தர்வன் அவளைக் காப்பாற்றுபவனாகிறார். பெண் ருதுவானதும் அக்னி யவளைக் காப்பாற்றத் தொடங்குகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் தாத்பர்யம் பின்வருமாறு:-ஒரு பெண்ணுக்குக் கல்யாணமாகுமுன் அவளை மூன்று தேவதைகள் ஸம்ரக்ஷிக்கிறார்கள். அவளுடைய தேகம், ரோமம், அறிவு ஆகிய இவைகளின் வளர்ச்சியைப்பற்றி ஸோமன் என்னும் தேவதை கவனித்து வருகிறார். அதற்குப் பிறகு கந்தர்வன் அந்தப்பெண்ணினுடைய மார்பின் வளர்ச்சியைப்பற்றியும், அழகைப்பற்றியும் கவனிப்பதோடு காதலைப் பற்றிய எண்ணங்கள் அவளுடைய மனதில் உண்டாவதற்கும் உதவியாயிருக்கிறார். பிறகு அக்னியின் ஆதீனத்தில் பெண் பெரியவளாகிறாள்; அதாவது ருதுவாகிறாள். ஆகவே மனுஷ்ய ஜன்மமாகிய புருஷன் பெண் ருதுவான பிறகே, அவளுக்கு நாதனாகிறான் என்று ஏற்படுகிறது. இதனாலும் இன்னம் இது போன்ற வேறு சில மந்த்ரங்களாலும் ருதுவானபிறகே பெண்களுக்குக் கல்யாணம் செய்யப்பட்டதென்று தெளிவாய் விளங்குகிறது.

'16-வயஸுக்குள்பட்ட பெண்ணை 25-வயஸுக்குள்பட்ட புருஷன் கல்யாணம் செய்து கொண்டால் கர்ப்பமே தரிக்காமல் போகும்; கர்ப்பம் தரித்தாலும் சீக்ரம் அழிந்துபோகும்; அழியாமல் குழந்தை பிறந்தாலும் அது சீக்ரம் இறந்து போகும்; அப்படி சீக்ரம் இறக்காவிட்டால் அது மிகவும் பலஹீனமாயிருந்து வரும்.' என்று பெரிய வைத்ய க்ரந்தமாகிய 'சுச்ருத'த்தில்சொல்லப்பட்டிருக்கிறது. பால்ய, விவாகமானது நமது ஜனஸமூகத்தின் கேட்டுக்கு ஆதாரமாக இருந்துவந்திருக்கிறது. அதனால் ஜனங்களின் தேகபலமும், அறிவும், ஸன்மார்க்கமும், ஆத்மஞானமும் குறைந்து கொண்டே வந்திருக்கின்றன. நாம் மேன்மையடையவேண்டுமானால் வேதத்தில் சொல்லியிருக்கிறபடி நமது கல்யாண ஏற்பாட்டை மாற்றவேண்டியது மிகவும் அவச்யம்.

வேதகாலத்தில் சொல்லியிருக்கும் கல்யாண வயஸானது கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைக்கப்பட்டுவந்திருக்கிறது. போதாயனர் தகப்பன் பெண்ணை ருதுவாகு முன்னும் ருதுவானபின் 3-வருஷத்துக்குள்ளும் கல்யாணம் செய்து கொடுக்கலா மென்றும், அதற்குப் பிறகு பெண் தானே வரனைத்தேடிக்கொள்ளலாமென்றும் சொல்லுகிறார். கௌதமர் ருதுவாகுமுன்னும் ருதுவானபினனும் கல்யாணம் செய்து கொடுக்கலாமென்றும், 3-ருதுக்களான பிறகு பெண்தானே புருஷனை வரித்துக் கொள்ளலாமென்றும் சொல்லுகிறார். மனுஸ்ம்ருதியில், 12-வயஸு அல்லது ருதுவாகுங் காலம் கல்யாண வயஸாகுமென்றும், அதற்குப் பிறகு மூன்று வர்ஷம் வரையில் கல்யாணம்செய்து கொடுக்கலாமென்றும், அதற்குப் பிறகு பெண் தானே புருஷனைவரித்துக்கொள்ளலாமென்றும் சொல்லியிருக்கிறது. போதாயனரும் மனுவும் காலாகாலத்தில் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்காத தகப்பனார் பாபம் அடைகிறார் என்று சொல்லியிருக்கிறார்கள்,

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாய் கல்யாண வயஸு மாற்றப்பட்டு ருதுவாகுமுன் கல்யாணம் செய்யவேண்டுமென்று ஏற்பட்டதற்குக் காரணம் ஜனஸமூகத்தின் மாறுபாடுகளே. கடைசியாக மகமதியர்கள் இந்தியாவுக்கு வந்ததில் இது ஊர்ஜிதப்பட்டுப்போய்விட்டது. மகமதியர்கள் ஹிந்து ஸ்த்ரீகளை பலாத்காரம் செய்து கொண்டுபோவது வழக்கமாயிருந்தது. அவர்கள் கல்யாணமான ஸ்த்ரீகளை பிடித்துக் கொண்டு போகக் கூடாது என்று கோரானில் சொல்லப்பட்டிருப்பதால், அதற்கிணங்கபெண்களுக்குச் சிறுவயதில் கல்யாணம் செய்துவிட்டால் பெண்கள் பத்ரமாயிருக்கலா மென்று எண்ணி ப்ராமணர்கள் பெண்களுக்கு கல்யாணம் பால்யத்திலேயே நடக்கவேண்டுமென்று விதித்து விட்டார்கள். ஆனால் தற்காலம் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தில் ஜனங்களுக்கு யாதொரு பயமும் இல்லையாதலால் அவச்யத்தை உத்தேசித்து உண்டாக்கின ஏற்பாடு இன்னம் இருப்பதற்குக் காரணமில்லை. நமது நாட்டிலுள்ளோர்கள் முன்னுக்கு வரவேண்டுமானால் வேதஸம்மதமான கல்யாண ஏற்பாட்டை அனுஸரிக்க வேண்டியது அவச்யமாகும்.

FIRST IMPRESSIONS OF MANGALORE.

BY

A TAMIL BRAHMIN LADY.

மங்களூருக்கு முதல்தடவை போனதும் தோன்றியவை.

தமிழ்நாட்டிலிருந்த ஒரு ப்ராமணப்பெண் மங்களூருக்குப் போனபோது அவளெழுதிய முதல் கடிதத்திலிருந்து அடியில்கண்ட பாகத்தை ப்ரகுரிக்கிறோம். புதிதாய் தூரதேசங்களுக்குப் போகும் பெண்களுக்கு இந்தமாதிரியேதான் முதலில் கஷ்டமாய்த்தோன்றும். மங்களூரிலுள்ள பழக்கவழக்கங்கள் தமிழ் நாட்டார்களுக்கு விநோதமாகத் தோன்றுமாதலால் அவைகளைப் பற்றிச் சொல்லும் பாகத்தைக் கீழே ப்ரகுரிக்கிறோம்.

மங்களூர்.

க்ஷேமம். 3-2-14.

என் ப்ரியமுள்ள அப்பா அவர்களுக்கு...... அநேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விடத்தில் வீடு அகப்படுவது ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. ருத்ரச்சி கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. கிணறுகளோசொல்ல வேண்டியதில்லை; காலடியெல்லாம் கூழாங்கல்லும், மண்ணால் தலையிடும் நம்மாத்துக்கிணற்றைவிட 10-மடங்கு சுற்றளவு பெரியதாயும் ஜலம் பாதாளத்திலும் இருக்கின்றன. இவ்விடத்தில் அடுப்புப்போட மண்கிடைக்காதாம். மிஷன் அடுப்பு என்று சொல்லி மங்களூர் ஓடு செய்யும் மண்ணால் கடையிலேயே செய்து விற்கிறார்களாம்; அது 2 ரூபாய்க்குக் குறைந்து கிடையாதாம். ஊர் ஸௌக்யமாய்த்தான் இருக்கிறது. யாரைப்பார்த்தாலும் பெண் பிள்ளைகள் தலையில் ஒரு கட்டுமயிர் இருக்கிறது. பறைச்சிமுதல் காட்டாமணிப்பூவானாலும் ஒரு கட்டுவைத்துக் கொண்டிருக்கிறார்கள். பறைச்சிக்கு அடையாளம் என்னவென்றால், பாக்குப்பட்டையை தொன்னை மாதிரி தைத்து தலையில் பூவுக்குமேல் குல்லாமாதிரி வைத்துக் கொண்டிருக்கிறாள். புல்லுக்கட்டு கொண்டுவரும்போது எங்காகிலும் தண்ணீர் கிடைத்தால் தலைக்குல்லாவினால் அள்ளி ஊற்றி விட்டு மறுபடியும் தலையில் வைத்து கொள்கிறாள். அம்பட்டனை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. அவனும் ஒரு பெரிய மனுஷன்போல் இருக்கிறான். மனுஷர்கள் ஒருவராகிலும் கருப்புக் கிடையாது. முக்கால் வாசியும் சிவப்புதான். பாஷைதெரியவில்லை; காசுக்கணக்குத் தெரியவில்லை. எல்லாம் கன்னடம், துளுவம், மலையாளம், கொங்கணி, இங்கிலீஷ், இவைகளில் ஒன்றாகிலும் எனக்குத்தெரியாது ஒன்று இரண்டுஇங்கிலீஷில்உளறிவைக்கிறது,

கன்னடமாகிலும் கொஞ்சம்ஸுலபமாய்இருக்கிறது. மற்ற மூன்றும் ரொம்ப புரியவில்லை ஆனால் இந்த மூன்றும்தான் ஜாஸ்தி.கன்னடம் தான் கொஞ்சம். சூத்ரச்சிகளுக்கு 3 ரூபாயும் ஒரு வேளை சாப்பாடும் போடவேண்டுமாம். கொடுத்தால் வீட்டுவேலை செய்து குழந்தையும் வைத்துக் கொள்வார்களாம். அவர்களை நீ, அவள், என்று சொல்லக்கூடாது. நீங்கள் அம்மா என்று சொல்லவேண்டுமாம். இந்த ஊரில் அம்மி கிடையாது. கல்உரல்தான். இடிக்கும் உரல் இல்லை. இரும்பினால் சிறியதாய் உரல் மாதிரி விற்கிறதாம். உட்கார்ந்துகொண்டே இரும்பு உலக்கையால் இடிக்கிறதாம். அரிசி முதல் அதில்தான் இடிக்கிறதாம். காப்பிக் கொட்டை விசை $1\frac{1}{4}$-ரூபாய்; கஞ்சிமா $1\frac{3}{4}$-ரூபாய்; பச்சைமிளகு பட்டணம் படி $\frac{1}{4}$-ரூபாய்! காய்ந்த மிளகும் அதேவிலைதான்;......மங்களூர் வலையென்று சொல்லும் மிளகுவலை எத்தனை பவுனுக்குச் செய்தாலும் 10 ரூபாய் கூலி கொடுக்கவேண்டும்,.....குழந்தை மனுஷர்களைக்காணாமல் ஏங்கி இருக்கிறது. நான் வேலைசெய்யும்பொழுது உள்ளில் விட்டு கதவையெல்லாம் சாற்றிவிட்டு 2 சொப்பைப்போட்டு விட்டு நான் கதவைச் சாத்திகொண்டு போய்விடுகிறது. என்வேலை ஆனபிறகு எடுத்துக் கொள்கிறது. அழுகிறபோது அழும். தானே ஓயும். கேட்போர் யாருமில்லை. 4-ரூபா கொடுத்து சூத்திரச்சி வைத்தது. அவள் இவ்வளவு ரூபா கொடுத்தும் இன்னும் வருவதற்கு யோசிக்கிறாள். ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. அக்கம் பக்கத்தில் ஜனங்கள் இல்லை. ஏதோ ஒருமாதிரி இருக்கிறது. டவுன் பக்கங்களில் நல்ல ப்ராமணவாஸமும் வீட்டிற்குள் எல்லா ஸௌகர்யங்களும் $\frac{1}{2}$-ரூபாய்க்கு சூத்ரச்சியும் கிடைக்கின்றன. போவோமென்றால் ப்ளேக் ஜாஸ்தி. தினம் சட்டிதூக்கவேண்டுமாம். என்னசெய்கிறது! ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது.......

PREPARATION OF CURRIES.

காய்கிழங்குகளைக் கறிசெய்தல்.

வேகவைத்து எடுத்துக்கொண்ட காய்கிழங்கு முதலியவைகளை கறி செய்வதில் சிலர் தறண்டியிலேயே தாளித்துக் கொட்டிக்கலந்து விடுகிறார்கள். அது உசிதமல்ல. இப்படிச்செய்வதில் காய்கிழங்குகளிலுள்ள ஜலம் நன்றாய் சுண்டாமலிருப்பதோடு, கறியும் அவ்வளவு ருசியாயிருப்பதில்லை. இரும்புச்சட்டி அல்லது கல்சட்டியில் நெய் அல்லது எண்ணெய் வார்த்து அது காய்ந்த உடனே கடுகும், உளுத்தம்பருப்பும் சேர்த்து தாளித்து உளுத்தம் பருப்பு சிவந்ததும், அதில்முன்வெந்து எடுத்த காயையும் பருப்பையும்கொட்டி புரட்டி வேறு பாத்ரத்தில் எடுத்து வைக்கவேண்டும். கடுகு உளுத்தம்பருப்பு முதலியவைகள் கருகிப்போனால் விஷத்துக்கு ஒப்பாகும். இந்தக்காய்கிழங்குகளைப் புரட்டும் போது தேங்காய் சேர்ப்பது முண்டு. பதார்த்தங்களில் சேர்க்கும் தேங்காய் நன்றாகத் துவண்டிருக்கவேண்டும். தேங்காயை பச்சையாக சமையலில் சேர்ப்பதனால் புசிப்பவர்களுக்கு வயிற்றில்பூச்சியுண்டாவதுடன் வயிற்று வலியு முண்டாகும். தேங்காய்ப்பாலை சமையலில் உபயோகிப்பது நலமாகும்.

A COLLEGE FOR WOMEN.

ஸ்த்ரீகளுக்கு ஒரு காலேஜ்.

சென்னையிலுள்ள ஸ்தரீகள் ப்ரெஸிடென்ஸி ட்ரெய்னிங் ஸ்கூலை ஒரு காலேஜாக உயர்த்து வதாக சென்னை கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்கு மதராஸ் ஸ்த்ரீகள் காலேஜ் என்று பெயர் கொடுக்கப்படும். இந்த வருஷம அதில் ஜூனியர் இண்டர்மீடியேட் வகுப்பும் அடுத்த வருஷம் ஸீனியர் இண்டர் மீடியேட் வகுப்பும ஏற்படுத்துவார்கள். அந்தக் காலேஜுக்காக இங்கிலண்டிலிருந்து இரண்டு ஸ்த்ரீ உபாத்யாயர்களை வரவழைக்கப் போகிறார்கள்.

Biography.
ஜீவ்ய சரித்ரம்.

DINSHAW EDULJI WACHA.
டின்ஷா எடல்ஜி வாச்சா.

பல வர்ஷங்களாக இந்தியன் நாஷனல் காங்க்ரெஸின் ஸெக்ரெடரியாக இருந்து தேச நன்மைக்காக மிகவும் பாடுபட்டு வந்த பார்ஸி தேசாபிமானியாகிய டின்ஷா எடல்ஜி வாச்சா சென்ற வர்ஷம் முதல்காங்க்ரெஸ் ஸெக்ரெடரி வேலையிலிருந்து விலகிக் கொண்டது யாவருக்கும் மனவருத்தத்தை யுண்டாக்கி யிருக்கும். வயஸு அதிகமாகி, கண் பார்வை குறைந்து போய், தேகச்ரமம் மேலிட்டு சோர்வடைந்து போய் விட்டதால், அப்படி அவர் விலகிக் கொண்டாரே யன்றி, நாஷனல் காங்க்ரெஸ் விஷயத்திலாவது, இந்திய ராஜாங்க கார்யங்களிலாவது, அல்லது தேசாபிமான விஷயங்களிலாவது, அவருக்கு ஊக்கங்குறைவடைந்து அதனால் விலகிக் கொள்ளவேயில்லை. பல வர்ஷங்களாக அவர் நமது தேசத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வந்திருப்பதை யுத்தேசித்து அவர் ஸெக்ரெடரி வேலையிலிருந்து விலகிக்கொண்டதைப்பற்றி அநுதாபங்காட்டி காங்க்ரெஸில் ஒரு தீர்மானஞ்செய்தார்கள். அவர் தேகச்ரமத்தால் காங்க்ரெஸில் அதிகம் பாடுபட்டு உழைப்பதற்கு முடியாவிட்டாலும் காங்க்ரெஸாகட்டும், மற்றும் தேசாபிமான முயற்சி எதுவாகட்டும், அதில் அதிக ஊக்கங் கொண்டு அதன் நன்மையைக் கோரினவராய் அதற்கு எப்போதும் உதவியாக இருந்து வருவாரென்பதற்கு சிறிதும் ஸந்தேகமில்லை.

டின்ஷா எடல்ஜி வாச்சா 1844-ம் வர்ஷத்தில் ஜனனமானார். அவர் சிறியவராயிருந்த போது பம்பாயிலுள்ள எல்பின்ஸ்டன் இன்ஸ்டிட்யூஷன் என்னும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்தார். அங்கே 4-வர்ஷம் வாசித்த பிறகு எல்பின்ஸ்டன் காலேஜில் சேர்ந்து ப்ரஸித்திபெற்ற ஆசிரியர்களிடம் கல்விபயின்று வந்தார், ஆயினும் அங்கே வெகு காலம் இருந்து வாசித்து வர முடியாமற் போயிற்று. ஏனெனில் அவருடைய தகப்பனார் தமது வ்யாபாரத்துக்குத் துணையாக இருக்க வேண்டுமென்று சொல்லி, பையனுடைய படிப்பை நிறுத்தி வ்யாபாரத்தில் சேர்த்துக் கொண்டார். அங்கிருந்தபோது தான் வாச்சா பணவிஷயங்களைப்பற்றிய முக்ய விஷயங்களை யறிந்து கொள்ளலானார். பிறகு அவர் பம்பாய் பாங்கியில் வேலைக்கமர்ந்து அந்த பாங்கியின் ஒரு பிரிவு முழுவதையும் கவனித்து வருவதற்காக வேலை பழகி வந்தார். ஆயினும் அவ்வேலையில் பூராப்பழக்கம் ஏற்படுவதற்கு முன் பம்பாயில் ப்ரபல அக்கௌண்டெண்டு கம்பெனியாகிய ப்ராடி அண்ட் வில்ஸன் கம்பெனியில் சேர்ந்து கொண்டார். அங்கிருந்த போது அமெரிக்காவில் யுத்தம் நேர்ந்ததின் காரணமாக சில பாங்கிகள் முறிந்து போயின, சில பூஸ்திதிகளும் ரொம்பக்கடன்பட்டுப்போயின. அவைகளின் கணக்குகளைத் தீர்த்துக் கட்டுவதில் ரொம்பவும் உதவியாயிருந்தார், 1874-ம் வர்ஷத்தில் அவர் பருத்தித்தொழிலில் இறங்கி, நாளது வரையில் அந்தத் தொழிலிலேயே உழைத்து வருகிறார். சிலகாலஞ்சென்ற பிறகு மிஸ்டர் வாச்சா ராஜாங்க விஷயங்களை பற்றி கவனித்துவர ஆரம்பித்தார். அக்காலத்தில் ராஜாங்க விஷயங்களைப்பற்றிப் பேசுவதென்பது அப்போது தான் ஆரம்பமாகியிருந்தது. அப்போது இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் ஸ்தாபிக்கப்படவில்லை. இந்தியர்கள் வெகு

வாய் ராஜாங்க கார்யங்களில் உழைத்து வரவில்லை. அவர்களுக்கு பதிலாக ஆங்க்லோ இந்தியர் பத்ரிகைகள் அதாவது இந்தியாவில் இங்க்லீஷ் காரர்களால் நடத்தப்படும் பத்ரிகைகள் தான் ராஜாங்க விஷயங்களில் அதிக கவனம் செலுத்தி கவர்ன்மெண்டாரின் கார்யங்களைப்பற்றி வேண்டியபோது கண்டித்து வந்தன. அவைகளைப்படித்து வந்ததின் மேல்தான் மிஸ்டர் வாச்சாவுக்கு தேசாபிமான மென்பது ஏற்படலாயிற்று.

சில ராஜ தந்த்ரிகள் தாங்கள் இருக்கும் ப்ரதேசத்து ராஜாங்க விஷயங்களைப்பற்றி கவனிப்பது கௌரவக் குறைவென்றெண்ணி அவைகளை கவனிக்காமல் விட்டுவிடுவது வழக்கம். மிஸ்டர் வாச்சா அவர்களைப் போலல்லாமல் தாமிருக்கும ஊராகிய பம்பாயின் முனிஸிபல் ஆட்சி விஷயமாய் கவனம் செலுத்தி வரலானார். பம்பாய் முனிஸிபல் கார்ப்பொரேஷனில் இவரும் ஸர் பிரோஸஷா மேட்டாவும் இன்னும் சிலருமாக கார்ப்பொரேஷனுக்காக மிகவும் பாடுபட்டுவந்திருக்கிறார்கள். பம்பாய்க்கார்ப்பொரேஷனுக்கு 1888-ம் வருஷம் முதல் ஒரு சரித்ரம் எழுதுவதென்றால் மேலே சொன்னவர்களின் சரித்ரங்களை யெழுதவேண்டியது தான். வாச்சாமுனிஸிபல் கார்ப்பொரேஷனில் இருந்த போது ஸமயம் நேர்ந்த போதெல்லாம் முனிஸிபல் நிர்வாகத்தைப்பற்றி மிகவும் கண்டித்து, அதை ரொம்பவும் சீர்திருத்த முயன்றிருக்கிறார்.

1885-ம் வர்ஷத்தில் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் ஸ்தாபித்தது முதல் அதில் சேர்ந்து உழைத்துவருகிறார். அதை முதலில் ஸ்தாபித்த எழுபத்துச் சொச்சம் பேர்களில் இவர் ஒருவராவர். இவருடைய வருஷாந்தர ப்ரஸங்கங்களை ஜனங்கள் எப்போதும் அதிக ஆவலுடன் கவனித்துக் கேட்பார்கள். அதே வர்ஷத்தில் பம்பாய் ப்ரெஸிடென்ஸி ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கும் இவர் ஒரு ஸெக்ரெடரியாக இருந்து வருகிறார். 1897-ம் வர்ஷத்தில் இங்க்லண்டில் வெல்பி கமிஷன் விசாரணை நடத்தி வந்தபோது, அதில் போய் ஸாக்ஷ்யம் சொல்லும்படி பம்பாய் ப்ரெஸிடென்ஸி ஸங்கத்தார் இவரை தெரிந்தெடுத்தார்கள். அங்கே அவர் வரவு செலவு திட்டங்கள் தயார் செய்வதில் உள்ள குறைகளைப் பற்றியும், இந்திய நாணய விஷயங்களைப்பற்றியும், விவரித்துச் சொன்னதோடு, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களுக்கு அதிக ஸ்வாதீனம் ஏற்பட வேண்டுமென்றும், ஸைன்யச் செலவைக்குறைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

1901-ம் வர்ஷத்தில் கல்கத்தாவில் கூடிய காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் அந்த ஸமயம் செய்த ப்ரஸங்கத்தைப்பற்றி ஆங்கிலோ இந்தியப்பத்ரிகைகளும் ச்லாகித்துப் பேசின வென்றால், அதைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டிய தனுவச்பம். அதே வர்ஷத்தில் பம்பாய் முனிஸிபல் கார்ப்பரேஷனுக்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மிஸ்டர் வாச்சா பணவரவு செலவு விஷயத்தில் மிகவும் நிபுணர். பணவரவு செலவு விஷயமாய் அவருக்குத் தெரியாதது ஒன்றும் கிடையாது. நிலவரி ஏற்பாடு, உப்புவரி, எக்ஸைஸ் வரி, உள்நாட்டு வ்யாபாரம், வெளிநாட்டு வ்யாபாரம், பருத்தித்தொழில் முதலிய பலவிஷயங்களில் ரொம்ப பரிச்சியமுள்ளவர். இவைகளில் மாத்ரம் இவருக்குப் பழக்கம் உண்டென்பதில்லை. அமெரிக்கா முதல் சீனு ஜப்பான் வரையிலுமுள்ள எல்லா தேசத்து ராஜாங்க விஷயங்களிலும் தேர்ச்சியுண்டு.

மிஸ்டர் வாச்சா எவ்வளவு சுறுசுறுப்பாயிருக்கிறார் என்பதை யறிந்தால் தற்காலத்தில் உள்ளவர்கள் தாங்கள் ரொம்ப சோம்பலாயி

ருப்பதாக எண்ணி வெட்கமடையக்கூடும். தினம் எத்தனை கடிதங்கள் வந்தாலும் அவைகளெல்லாவற்றையும் அன்றையதினமே கவனித்து அவைகளுக்கு பதில் எழுதிவிடுவார். அவருக்கு வரும் பத்ரிகைகள் கணக்கில் அடங்கா

மிஸ்டர் வாச்சா மற்றெல்லாரையும் விட அதிகமாக பொது விஷயங்களைப்பற்றிப் பேசியும் எழுதியும் வருபவர். அவர் எழுதும் வ்யாஸங்களுக்கு பெரும்பாலும் தமதுபெயரிடாமல் அநேகமாய் மறைவாகவே எழுதுவார். ஏனென்றால் தாம் எழுதுவதைப் படித்துத் தம்மை பிறர் மெச்சவேணுமென்ற ஆசை அவருக்குக கிடையாது. வ்யாஸங்களுக்கு ப்ரதிப்ரயோஜனமாகப் பணம் வாங்கிக் கொள்வதும் கிடையாது.

அவர் ஒரு பருத்திமில்லுக்கு மானேஜிங் ஏஜெண்டு; பம்பாயக கார்ப்பொரேஷனில் ஒரு மெம்பராயிருக்கிறார். பம்பாய் இம்ப்ருவ்மெண்ட் ட்ரஸ்ட் என்று சொல்லப்படும் பம்பாய் அபிவ்ருத்தி ஸபையிலும் ஒரு மெம்பர். பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் ஒரு டிரஸ்ட்டி. 'கெய்ஸரி ஹிந்து' என்னும் பத்ரிகையின் இங்க்லீஷ் பாகத்து பத்ராதிபர். இப்படிப்பல காரியங்களையும் கவனித்து வருகிறாரென்றால், மிஸ்டர் வாச்சா எவ்வளவு ஸாமர்த்யசாலியாக இருக்க வேண்டுமென்பதைநாம் சொல்ல வேண்டியதில்லை. இவ்வளவுபெருமை வாய்ந்திருந்தும் மிஸ்டர் வாச்சா நிறைகுடம நீர்தளும்பாதென்கிறபடி, கர்வம், படாடோபம் முதலிய அற்பகுணங்கள் யாதொன்றுமில்லாதவர். அவர் பெரியவர்கள், ஸாதாரண மனிதர்கள் என்று வித்யாஸம்பாராட்டி சிலரை ஒரு விதமாயும் வேறு சிலரை வேறு விதமாயும நடத்துவதில்லை. யார்போனாலும் அவருடன் தாராளமாய்ப் பேசலாம். சில பொது ஜனப்ரமுகர்கள் பொது ஜனக்காரியங்களில் ஒருவர்க்கொருவர் விவாதம உண்டாகி மனஸ்தாபம் ஏற்பட்டால், அந்த மனஸ்தாபத்தை எப்போதும் விடாமல் வைத்துக்கொண்டு ஸொந்த விஷயங்களில் கூட விரோதம் காட்டுவதுண்டு. மிஸ்டர் வாச்சாவினிடம் அந்தக் கெட்ட குணம் கிடையவே கிடையாது. மிஸ்டர் வாச்சாவுக்கு எவரிடமும் பகைத்துக் கொள்ளவே தெரியாது. இவ்வளவு நற்குணம் நற்செய்கைகள் பொருந்திய இந்த ப்ரமுகர் இன்னும் பல காலம் இந்தியாவின் நன்மைக்குப் பாடுபட்டு வரும்படி அவருக்குத் தேகஸௌகமும் தீர்க்காயுளும் கொடுக்கும்படி யாவரும் கடவுளை ப்ரார்த்திப்போமாக:

Short Stories.

சிறு கதைகள்.

EXISTENCE OF GOD.

கடவுள் உண்டென்பது.

ஒருவன் ஒரு பரதேசியிடத்தில் சென்று மூன்று கேள்விகள் கேட்டான், அவையாவன:—(1) கடவுள் எங்கும் நிறைந்தவர் என்கிறார்களே, நான் அவரை ஒரு விடத்திலும் காணக்கூடவில்லையே. எனக்கு சற்று தயவு செய்து தாங்கள் காண்பிக்க வேண்டும். (2) மனிதன் செய்யும் செய்கையெல்லாம் கடவுளின் ஏவுதலினாலேயே யொழிய வேறில்லையே. அப்படியிருக்க, மனிதன் செய்யும் குற்றத்திற்கு ஏன் மனிதனை தண்டிக்கிறார்கள்? இவன் ஸ்வய இச்சையில்தான் ஒன்றுமில்லையே, அப்படி இவனுக்கு ஸ்வயாதீன மிருந்தால் அநேக நன்மைகளைத் தேடிக்கொண்டிருப்பானே? (3) அக்னிகுலத்தில் உற்பத்தியான சயித்தானை அக்னிநிறைந்த நரகத்தில் போடுவதால் கடவுளுக்கு யாது ப்ரயோசனமாயிற்று? நெருப்பினால் நெருப்புக்கு இடையூறுண்டா?

இதைக்கேட்ட பரதேசியார் ஒரு மண்ணாங்கட்டியை எடுத்து அவன் தலைமேல் எறிந்தார். அது அவன் தலையில் தாக்கி வலி உண்டாக்கிற்று. அவன் வலிபொறுக்க முடியாமல் அவ்வூர் ந்யாயாதிபதியினிடம் போய் பர

தேசியின் கொடுமையைத் தெரிவித்தான். உடனே ந்யாயாதிபதி பரதேசியை வரவழைத்து உண்மையை விசாரிக்க பரதேசியார், "நான் அவன் கேள்விகளுக்கு விடை கொடுத்தேனே ஒழிய வேறொன்று மில்லை" யென்றார். அதெப்படி யென்று ந்யாயாதிபதி கேட்க, "அம்மண்ணுருண்டையே என் பதில்" எப்படி என்றால், அவன் வலியிருப்பதாகச் சொல்லுகிறானே, அவ்வலியை அவன் காண்பித்தால் நான் கடவுளை காண்பிப்பேன், நான் செய்ததெல்லாம் கடவுளின் ஏவுதலின் பேரில் தானே. இவன் ஏன் தங்கள் முனனிலையில் என்பேரில குற்ற மிருப்பதாக முறையிட்டுக் கொள்ளுகிறான். நான் கடவுளின் ஸம்மதமின்றி யடிக்கவில்லையே; எனக்குச்செய்ய என்ன சக்தி இருக்கிறது. இவன் மண்ணில் உற்பத்தியானவன் தானே; இவனை மண் எப்படி தொந்திரவு செய்யும். என்றார். ப்ரியாது கொடுத்தவன் இதைக்கேட்டு மயங்கி நின்றான். ந்யாயாதிபதியாரும் மேற்சொன்ன ஜவாபுகளைக்கேட்டு வியப்படைந்து பரதேசியை மெச்சிக்கொண்டார்.

GOT HIS LIFE FOR A PIE.

ஒரு தம்படிக்கு தலைதப்பியது.

ஒரு வாலிபன் ஒரு கிழவனுக்கு ஒரு ஸமயம ஒரு தம்படி இனாம் அளித்தான. அதைக் கொண்டு அந்தக் கிழவன் அடைந்த த்ருப்தி கணக்கில்லை. சில நாள் கழிந்தபின் வாலிபன் செய்த ஏதோ குற்றத்திற்காக தூக்குக்கு போகும்படி நேர்ந்தது. அவனைக் கொலையாளிகள் தூக்குமரத்திற்கு இழுத்துக்கொண்டு போகும பொழுது, தெருக்களில் சத்தமும் கூக்குரலும் அதிகரித்தது. ஜனங்களில் சிலர் இங்குமங்கும் ஓடவும், சிலர் வீட்டிலும் சிலர் வீதியிலும், சிலர் வீட்டின் கூரையிலும், நின்று பார்த்து பரிதபித்து அழவும், சிப்பாய்கள் இங்குமங்கும் திசைதெரியாமல் ஓடிவரவும், பட்டணம் கீழ்மேலாய் ஒரேசததமாயிருந்தது. இந்தக்கூட்டத்தின் நடுவே கைதியாகப் போகும் தனப்ரபுவான வாலிபனைப் பார்த்த கிழவன், "இவன் ஒருஸமயம் எனக்கு ஒரு தம்படி அளித்தானல்லவா? இந்தஸமயம் இவனை எப்படியாகிலும் மீட்கும் வகையைத் தேட வேண்டும் என்று கருதி திடீரென்று, "ஐயோ அரசன் இறந்துவிட்டானே, அவனுடன் அவனுடைய நற்செய்கைகள் போகின்றனவே, மற்றொருவரும் போகக்காணேன்" என்று உறத்தக் கத்தினன். இந்தக்கிழவன் கூவியதைக் கேட்டு, உருவிய கத்தியுடன கூடிய போர்ச் சேவகர்கள் ஓகோ, உண்மையிலே அரசன் இறந்து விட்டான், இல்லாவிட்டால் கிழவன் இப்படிக் கதறுவானா, என்று மதிமயங்கி, எல்லாரும் திரண்டு, கைதியைவிட்டுவிட்டு, அரண்மனைக்குப் போய்ப்பார்க்கவே, அரசன் உல்லாஸமாக ஸிம்மாஸனத்தின் மேல் வீற்றிருப்பதைப் பார்த்து, வாலிபன் ஓடிவிட்டபடியால் கிழவனைப் பிடித்து அரசன் ஸமூகம் சேர்த்து கிழவன் செய்த குற்றத்தை வெளியிட்டார்கள். அப்பொழுது அரசன் கிழவனைபபார்த்து "கிழவா, ஏன் உனக்கு இந்தக்ரோத சிந்தனை? நீ ஏன் என் மரணத்தை விரும்பினாய்? என்னிடம் என்ன கெடுதலைக் கண்டாய்? நான் இறந்தினால் உனக்கு என்னபயன்? முடிவாக, என் ப்ரஜைகளுக்கு ஏன் கெடுதியைத் தேடினாய்? உண்மையைச் சொல், இல்லாவிட்டால் உன்னை சித்ரவதை செய்ய ஆக்ஞாபித்து விடுவேன்" என்று சொன்னான். ஒன்றுக்கும் அஞ்சாத அக்கிழவன் "ஐயா, நிருபாதிபனே! உலகமெல்லாம் உம்முள்ளடங்கியதே நானும் அவர்களில் ஒருவன்தான். தாங்கள் இறந்தீர்களென்று ஒரு பொய் நான் சொல்லவதில் தாங்களிறக்க வில்லை, ஆனால் ஒரு வாலிபன் உயிர் பிழைத்தான். இரண்டுவிதமான க்ஷேமமுண்டாயிறது" என்று தைரியமாய் பதில் சொன்னான். இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து கிழவன் தைரியத்திற்கு அவனை மெச்சி அவனுக்கு பொருளுதவி செய்து ஒன்றுஞ் சொல்லாமல் அனுப்பிவிட்டான். தூக்குமரத்திற்குத் தயாரான வாலிபனோ, பிழைத்தேன், பிழைத்தேன், என்று சொல்லிக்கொண்டு ஓடவே, அவனைக்கண்ட ஒரு வழிப்போக்கன், "என்ன செய்து உன் குற்றத்தினின்று உன்னை விடுவித்துக் கொண்டாய்" என்றான. "ஒரு ஆத்மாவின் தைர்யத்தினாலும் ஒரு தம்படியின் ஈகையினாலும்" என்று பதில் சொன்னான் வாலிபன்.

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

A SUM IN ARITHMETIC.

கணக்கில் ஒரு கேள்வி.

உபாத்யாயர்:—ராமா உன்னிடத்தில் ஆறு ரூபாய்கள் இருக்கின்றன. கோபாலனிடத்தில் 4-ரூபாய்கள் இருக்கின்றன. கோபாலனிடத்திலிருந்தவைகளை யெடுத்து உன்னுடையவைகளோடு போட்டுக்கொண்டால் என்ன வாகும்.

ராமன்:—அனர்த்தந்தானாகும். (சண்டைதானாகும்).

NON TESTABLE STUFF.

பரீக்ஷிக்க முடியாத சரக்கு.

முதல் வ்யாபாரி:—நன்ருய்ப் பரீக்ஷிக்க முடியாத சரக்கை நாங்கள் விற்பதில்லை. பண்டகசாலையிலிருந்து வெளியே அனுப்பும் ஒவ்வொரு சரக்கையும் ஸம்பூர்ணமாய் பரீக்ஷித்தே நாங்கள் அனுப்புகிறோம்.

இரண்டாம் வ்யாபாரி:—பரீக்ஷியாமலே நாங்கள் எங்கள் சரக்கை விற்கிறோம்.

மு. வ்யாபாரி:—விநோதமாயிருக்கிறது. தங்களுடைய சரக்கு என்ன சரக்கோ!

இ. வ்யாபாரி:-வெடிமருந்து (டைனமைட்).

A PLEADER AND A CLIENT.

ஒரு வக்கீலும் கட்சிக்காரனும்.

ஒரு வக்கில் தன் கட்சிக்காரனைப் பார்த்து "உன் கணக்கை ப்ரதிவாதியிடத்திற் காட்டினுயா" என்றான். அதற்குக் கட்சிக்காரன் "ஆம் காட்டினேன்" என்றான். மீண்டும் வக்கில் அக்கட்சிக் காரனைப்பார்த்துப் "ப்ரதிவாதி என்ன சொன்னான்" என்றான். "குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ளச் சொன்னான்" என்றான். "அதற்கு நீ என்ன செய்தாய்" என்று மீண்டும் வக்கில் கேட்டபோது "நான் தான் தங்களிடத்தில் வந்திருக்கிறேனே" என்றான்.

IF MY HUSBAND WERE ALIVE.

என்புருஷன் இருந்தால்.

ஒரு ஊரில் ஒரு ப்ராமண விதவை தன் தலைமயிர் வளர்ந்தது கண்டு க்ஷவரம் பண்ணிக்கொள்ளும பொருட்டு அம்பட்டனுக்காக வெகுநேரம் காத்திருந்தும் வராமையால் பின்வருமாறு துக்கிக்கலானாள்:—

"ஐயோ, என் அருமை ப்ராணநாதன் இருந்தால் ஒரு நொடியில் அம்பட்டனை அழைத்துக் கொண்டு வந்துவிடுவாரே"

புருஷன் இருந்தால் இவள் தலையைச் சிரைப்பானேன்?

TO REACH THE WATER.

தண்ணீயை எட்ட.

நான்கு ப்ரயாணிகள் ஒரு ஊருக்கு ப்ரயாணமாகிப் போகிறபொழுது ஸூர்யன உச்சியை அடைந்தான். அவர்களுக்கு தாகம் அதிகரித்து சாந்தி செய்துகொள்ள மார்க்கமில்லாமல் தளர்ந்தநடையோடு சென்றார்கள். செல்லுகையில் ஸ்வல்பதூரத்தில் ஒரு கிணறு தென்பட்டது. அதிக ஆவலுடன் அங்கு சென்று பார்க்கையில தண்ணீர் மொள்ள கயிறும ஏனமும் கிடைக்கவில்லை. என்ன செய்கிறதென்று தெரியாமல் பின்வருமாறு செய்தார்கள்:—

ஒருவன் குறுக்கே போட்டிருந்த கல்லைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். மற்றவர்கள் ஒருவன் காலை ஒருவர் பிடித்துக்கொண்டு தொங்கினார்கள். அப்படியும் ஜலம் எட்டாதது கண்டு, கடைசியவன் முதல்வனுக்கு அறிவித்தான். உடனே முதல்வன் இந்த உபாயத்தைச் செய்தான். அவன் "பயப்படாதே நான் உன் காலை யாநத பிடித்துக்கொள்ளுகிறேன்" என்று கையை நழுவ விட்டான். எல்லாரும் பொத்தென்று கிணற்றில் விழுந்தார்கள்.

CURIOSITIES.
விநோதங்கள்.

EXTRA FINGERS.
அதிகப்படியான விரல்கள்.

ஸ்பெய்ன் தேசத்திலுள்ள பில்பேயோ என்னும் ஊரில் ஒரு விநோதக் குடும்பமிருக்கிறது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 7-பேர். அவர்களுடைய விரல்களெல்லாஞ் சேர்ந்து மொத்தம் 154-இருக்கின்றனவாம். ஒருவருக்கு கால்களிலும் கைகளிலும் மொத்தம் 23-விரல்கள் இருக்கின்றன. இன்னொருவருக்கு 21-விரல்களிருக்கின்றனவாம். பாக்கி ஐந்து பேர்களில் ஒவ்வொருவருக்கும் கைகளில் 12-விரல்களிருக்கின்றனவாம்.

ரஷ்யாவிலுள்ள கோஷிவோ என்னும் ஊரில் இதே மாதிரி அதிக விரல்களுள்ள குடும்பம் ஒன்று இருக்கிறதாம். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 50-பேருக்கு மேலிருக்கிறார்கள். அவர்களெல்லாருக்கும் கைகளில் ஒன்று முதல் 5-வரையில் அதிகப்படியாக விரல்களிருக்கின்றன.

RECORD EGG LAYING.
ஏராளமாய் முட்டையிடுதல்.

ஸாதாரணமாய் ஒரு பெட்டைக்கோழி ஒரு வர்ஷத்தில் 70 அல்லது 75 முட்டைகள் இட்டால் அது அதிக முட்டையிட்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஆனால் அமெரிக்காவிலுள்ள கனடாவில் சில காலத்துக்கு முன்னால் ஒரு பெட்டைக்கோழி ஒரு வர்ஷத்தில் 282 - முட்டையிட்டது. தற்போது இங்க்லண்டில் ஒருவரிடமிருக்கிற ஒரு பெட்டைக்கோழி ஒரு வருஷத்தில் 291-முட்டை வீதம் இட்டு வருகிறதாம். இன்னொருவரிடமிருக்கும் ஒரு கோழி சென்ற 1912-ம் வர்ஷம் அக்டோபர் மாஸம் 24-ம்தேதி முதல் 1913-ம் வருஷம் அக்டோபர் மாஸம் 24-தேதி வரையில் 320-முட்டைகள் இட்டதாம். அந்தப்பெட்டை நல்ல தேக ஸௌகத்தோடு இருக்கிறதாம்.

WANTED A WIFE.
ஒரு மனைவி தேவை.

நெட்டையாயிருந்த ஒரு ப்ரம்மசாரி, தனது கார்யங்களுக்கு முக்ய உதவியாக இருக்க தன்னைப்போல் நெட்டையான ஒரு ஸ்த்ரீ தனக்கு வேண்டுமென்று எண்ணி, ந்யூ யார்க் பட்டணத்து பத்ரிகை ஒன்றில் அடியில் வருமாறு ப்ரசுரம் செய்தார்:—"ஒருமனைவி தேவை;பால்யம் அழகு, ஐசவர்யம் முதலியவை யமைந்திருக்க வேண்டு மென்பது அவச்யமில்லை; ஆனால் குறைந்தது 6 அடி 7 அங்குலம் உயரமுள்ளவளாயிருக்க வேண்டும்."
தேவை நிறைவேறிற்றோ இல்லையோ வென்பது மாத்ரம் வெளிப்படவில்லை.

ROUND THE WORLD IN AEROPLANE.
விமானத்தில் உலகத்தைச் சுற்றி வருதல்.

ஆகாய விமானத்தில் ஏறி உலகத்தைச் சுற்றி வர அமெரிக்கா ஏரோக்ளப் என்ற ஸங்கம் ஒரு பந்தயம்போட ஏற்பாடு செய்திருக்கிறது. மேமாதம் 15 ம் தேதி ஸான்ப்ரான்ஸிஸ்கோ நகரத்திலிருந்து பந்தயம் ஆரம்பிக்கும். பத்தொன்பது தினங்களில் உலகத்தைச் சுற்றிக்கொண்டு திரும்பி வந்து விட வேண்டும். ஜயம் அடைந்தவருக்கு முதல் வெகுமானம் மூன்று லக்ஷத்து அறுபதினாயிரம் (3,60,000) ரூபாய் என்று இட்டமாயிருக்கிறது.

CHAIR BUILT OF HORNS.

அமெரிக்கா தேசத்து தென் கலிபோர்னியாவிலுள்ள லாங்க பீச் என்னும் ஊரில் முழுமையும் கொம்புகளாலேயே செய்யப்பட்ட ஒரு நாற்காலி யிருக்கிறது. அதில் 8 முதல் 16 அங்குலம் வரையிலுள்ள 38 அழகான கொம்புகள் உபயோகப்படுத்தப்பட் டிருக்கின்றன. கண்ணாடி போல் பிம்பங்கள் தெரியும்படியாய் அவ்வளவு செம்மையாய் அந்தக் கொம்புகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. இழைப்புக்கு மட்டும் 275 ரூபா ஆகியிருக்கிறது. நாற்காலி இரண்டடி அகலமும மூன்றரை யடி உயரமும் உள்ளது. அதற்குப் பிடித்த மொத்தச் செலவு ஸுமார் 400 ரூபாயாம்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

CLEANING BRASS ARTICLES.
பித்தளை ஸாமான்களை சுத்தம் செய்தல்.

திரைகளின் கொக்கிகள், வளையங்கள், படங்களின் வளையங்கள் இன்னும் மற்ற பித்தளை ஸாமான்கள் கருத்துப்போனால் அவைகளை காடியில் போட்டுக் காய்ச்சினால் வெகு சீக்ரம் சுத்தப்பட்டுப் போகும். பிறகு அவைகளைக் கழுவி யெடுத்து மிருதுவான துணியால் தேய்த்துப் பாலிஷ் செய்யவும்.

BANANA SKINS.
வாழைப்பழத் தோல்.

வாழைப்பழத் தோல் தோல் ஸாமான்களைத் துடைக்க மிகவும் உபயோகமானது. தோல் பைகள், பூட்ஸுகள், முதலிய தோல் ஸாமான்களை தூசிகளைத் துடைத்துவிட்டு, வாழைப் பழத் தோலின் உள்புறத்தால் அவைகளின் மேல் நன்றாய்த் தேய்க்கவும். பிறகு பழம் பட்டுத் துணியால் அவைகளைத் தேய்த்துப் பாலீஷ் செய்யவும்.

PAPER BASKETS.
காகிதக் கூடைகள்.

கிழிந்தகாகிதம் இதுவரையிலும் அதிக ப்ரயோஜனப்பட்டதில்லை. காகிதம் செய்யுமிடங்களில் இதை வாங்கி நனைத்து கூழ் செய்து கரடாக்காகிதம் செய்வதுண்டு. பொட்டலம் கட்டுவதற்கு சிறிதுபாகம் உபயோகப்படுவதுண்டு. சில கிழடுகள் வெந்தயப் பசைபால் கூடைகள் செய்வதுண்டு.

காகிதக் கிழிசலால் சாஸ்த்ரப்படி கூடைகள் தட்டுகள் முதலியவைகளைச் செய்தால், அவைகளை பார்க்க அழகாயும், நெருப்பில் எரியாத வண்ணமாயும் ஜலத்தில் நனையாத வண்ணமாயும், செய்யலாம்.

உ ஓரேகிறமுள்ள காகிதங்களைப் பொறுக்கி 24 மணி நேரம் நனைத்து ஒரு கல் உருளையில் அரைத்து கூழாக்கவேண்டும். கொஞ்சம் பிசினியைப் சேர்ப்பது ஒட்டுவதற்குப் பக்குவமாயிருக்கும்.

USES FOR LEMONS.
எலுமிச்சம்பழத்தின் ப்ரயோஜனங்கள்.

எலுமிச்சம்பழம் பலவகைகளில் ப்ரயோஜனமுள்ளது. அது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியது அவச்யமாகும். பித்தாசயம் ஸம்பந்தமான கோளாறுகளுக்கு, வெந்நீரில் ஒரு எலுமிச்சம்பழ ரஸத்தைவிட்டுக் குடித்தால் குணம் ஏற்படும். ரொம்ப ஸ்தூலித்த ஸ்த்ரீகளுக்கு ஸ்தூலத்தைக் குறைக்க இதைவிட மேலான மருந்து ஒன்றும் கிடையாது. காய்ச்சல் வந்துள்ளவர்களுக்கு நாக்கு வரண்டுபோயிருந்தால் எலுமிச்சம்பழ ரஸமும் க்ளிஸரினும் சரிஸமமாகச் சேர்த்து பஞ்சினால் எடுத்து உதடுகளிலும் நாக்கிலும் தடவினால் வரட்சி நீங்கிப்போகும். ஸாதாரண ஜலத்தில் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரஸத்தைக் கலந்துகொண்டு பல்லைக் கழுவினால் பல்லில் படிந்துள்ள பாசி விட்டுப் போவதோடு வாயிலும் கெட்ட நாற்றம் உண்டாகாது.

பித்தஸம்பந்தமான தலைவலிக்கு பால் கலக்காத காபி கஷாயத்தில் ஒரு டீஸ்பூன் அளவு எலுமிச்சம்பழ ரஸம் சேர்த்துக் குடித்தால் தலைவலி போய்விடும். கொசுக்கள் ஈக்கள் கடித்ததால் உண்டாகும் எரிச்சலுக்கு எலுமிச்சம்பழ ரஸத்தைத் தடவினால் எரிச்சல் நின்றுவிடும்.

எலுமிச்சம்பழத் தோல், ஆரஞ்ச் பழத் தோல், ஆகிய இவைகள் அடுப்புப் பற்றவிட உதவும். ஆகையால் அவைகளைத் தூர எறிந்துவிடாமல் சேர்த்து வைத்திருப்பது நல்லது.

TAMIL LITERATURE.
தமிழ்க் கல்வி.

SANKARA SUNDARI.
சங்கர ஸுந்தரி.

இந்தக் கதைப் புஸ்தகம் கும்பகோணம் இந்தியன் பத்ரிகையின் அதிபராகிய டி. வி. அய்யாஸாமி அய்யா எழுதியதாகும். கல்யாணத்தில் வரதக்ஷிணை வாங்கும் ஏற்பாட்டைப்பற்றியும், கல்யாண தாரகர்களைப் பற்றியும், இதில் விவரித்திருக்கிறது, இதன் விலை அணா 12.

LEENA.
லீனு

லீனு அல்லது அருளாநந்தரின் ஆச்சரிய அனுபவங்கள் என்னும் இக்கதைப் புஸ்தகம் டி. எஸ். வேணுநாதம் வெளியிட்டதாகும். அருளாநந்த போஸ் என்பவரின் ஸ்வயசரிதையாக எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய ஆச்சரிய அனுபவங்கள் இதில் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 4. வேண்டுவோர் டி. எஸ். வேணுநாதம் 22, ராட்டன் பஜார், பார்க் டவுன், சென்னை, யென்றெழுதித் பெற்றுக்கொள்ளவும்.

KANAKANGI, THE GOLDEN RIVER.
கனகாங்கி அல்லது பொன்னுறு.

ஒரு சிறு தமிழ்க் கதை இரண்டு பாகங் கொண்டது. விலை அணா 4.

SARASWATI.
ஸரஸ்வதி.

இந்தக்கதைப் புஸ்தகத்தோடு பணக்காரன் பட்டபாடு என்று ஒரு சிறு கதையும் சேர்க்கப்டிருக்கிறது. இதன் விலை அணா 2.

SULOCHANA.
ஸுலோசனு.

இது இந்த்ரஜித்தின் மனைவியாகிய ஸுலோசனையைப் பற்றிய ஒரு கதை. விலை அணா 2.

AS YOU SOW, SO YOU REAP.
இட்டார்க்கு இட்டபயன்.

நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும் என்பதை விளக்கும் கதைகளடங்கியது. விலை அணா 1½.

MEENAKSHI.
மீனுக்ஷி.

எந்தக் கார்யத்தையும் அலங்கோலமாகச் செய்யும் பெண் ஒழுங்காக வேலை செய்யத் தெரிந்துகொண்டதைப் பற்றிய ஒரு கதை. விலை அணா 1-

THF USE OF EYES.
கண்ணின் பயன்.

ஒரு சிறு கதை. விலை அணா. 1.

மேலே சொல்லிய கனகாங்கி முதலிய ஆறு சிறு கதைப் புஸ்தகங்களும் சென்னை என். வெங்கட்டராயலு அண்ட் ஸன் வெளியிட்டவையாகும். இவைகள் சிறுவர், சிறுமிகளுக்கு பொழுது போக்குக்குப் படிப்பதற்கேற்றவை. இந்தப் புஸ்தகங்கள் வேண்டுவோர் என். வெங்கட்டராயலு அண்ட் ஸன். 87, ராமஸாமி தெரு, முத்தியாலு பேட்டை, சென்னை யென்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

CALENDAR OF THE KUMBAKONAM MUTT
கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கம்.

கும்பகோணம் மடத்து ஆநந்த வர்ஷத்துப் பஞ்சாங்கம் ஒன்று வரப்பெற்றோம். இது திருக்காட்டுப்பள்ளி ஸப்ரெஜிஸ்ட்ராராகிய டி. விச்வநாதச்ரௌதிகள், பி. எ. கணித்ததாகும். இதன் விலை 1 அணா. இது அநேகமாய் எல்லா ஊர்களிலும் விலைக்குக் கிடைக்கும்.

VISVAKARMA KULOPAKARI.
விச்வகர்ம குலோபகாரி.

இது சென்னையில் ப்ரசுரமாகும் ஒரு மாதப் பத்ரிகை. இது விச்வகர்ம குலத்தார்களாகிய தட்டாரர்கள், கொல்லர்கள், தச்சர்கள் முதலியவர்களுடைய நன்மையை யுத்தேசித்து ப்ரசுரிக்கப்படும் பத்ரிகையாகும். இதன் வர்ஷ சந்தா 3-ரூ. வேண்டுவோர், மானேஜர், விச்வகர்ம குலோபகாரி, சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை யென்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

மார்ச்சு 16-தேதி.

தேவாலய ஸொத்துக்கள்.—தேவாலய ஸொத்துக்களின் நிர்வாகத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக நியமிக்கப்பட்ட கான்பரென்ஸ் இன்று டெல்லியில் கூடிற்று. ஆனரபிள் ஸர் ரெஜினல்ட் க்ராடாக்ஸ் கான்பரென்ஸைத் திறந்து வைத்துப்பேசினர்.

17-*தேதி.*

ஸ்த்ரீ வைத்ய காலேஜ்:—இன்றையதினம் லேடி ஹார்டிஞ்ஜ் டெல்லியில் ஸ்தாபிக்கப் போகும் ஸ்த்ரீவைத்ய காலேஜின் அஸ்திவாரக் கல்லை நாட்டினர்.

வைத்யர்கள் ரெஜிஸ்ட்ரேஷன்:—இன்றைய தினம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது ஆனரபிள் டாக்டர் நாயரின் வைத்யர்களுடைய ரெஜிஸ்ட்ரேஷன் மசோதா சட்டமாக பாஸ செய்யப்பட்டது.

மிஸ்டர் வி. பி. மாதவராவ்:—பரோடா திவானாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் வி. பி. மாதவராவ் இன்று தமது வேலையை ஒப்புக் கொண்டார்.

குழந்தையை உயிருடன் புதைத்தது:—ஐக்ய மாகாணத்திலுள்ள ஒரு ஊரில் ஒரு ஸ்த்ரீக்கு ஸுமார் ஒருமாஸத்துக்கு முன்னல் ஒருபெண் குழந்தை ஒரு பல்லுடன் பிறந்தது. பிறக்கும்போதே பல்லுடன் பிறந்த அக்குழந்தையால் குடும்பத்துக்குக் கெடுதி நேரிடுமென்று பலர் சொன்னதினலும், அவ்வூரில் பற்பல அசுபக் குறிகள் நேர்ந்ததாலும், அந்தக் குழந்தைக்குப் பிசாசு பிடித்திருக்கிறதென்று மாந்த்ரீகர் ஒருவர் சொன்னதாலும், குழந்தையின் தகப்பனர் பயமடைந்து அக்குழந்தையையுயிருடன் புதைத்து விட்டார். புதைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு போலீஸ்காரர் குழந்தைபுதைத்திருந்த விடத்துக்குப்போக நேரிட்டபோது குழந்தையின் அழுகைக்குரல் பூமியிலிருந்து வருவதைக் கேட்டு கல்லறையைத் திறந்து பார்க்கக் குழந்தை குற்றுயிராய்க் கிடந்தது. ஆயினும் அது சிறிது நேரத்துக்கெல்லாம் இறந்து போய்விட்டது.

19-*தேதி.*

பம்பாய் வ்யாபாரக் காலேஜ்:—பம்பாய் வ்யாபாரக் காலேஜுக்கு ப்ரின்ஸ்பலாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் பி. எல். ஆன்ஸ்டே பம்பாய்க்கு வந்து சேர்ந்து ப்ரின்ஸ்பல் உத்யோகத்தை ஏற்றுக் கொண்டார்.

20-*தேதி.*

பம்பாயில் வைஸ்ராய்: — இன்றையதினம் வைஸ்ராய் பம்பாய்க்குப் போய் பம்பாய் முனிஸிபாலிடியார் வாசித்துக் கொடுத்த ஒரு அட்ரெஸை ஏற்றுக்கொண்டார். அந்த அட்ரெஸ் ஒரு அழகிய சித்ரிக்கப்பட்ட சிறு பெட்டியில் வைத்துக் கொடுக்கப்பட்டது.

21-*தேதி.*

பம்பாயில் வைஸ்ராய்:—:—இன்று பம்பாய் சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸங்கத்தாரும் இந்திய வ்யாபாரிகள் சேம்பர் அண்ட் பீரோ என்னும் ஸங்கத்தாரும் வைஸ்ராயிக்கு அட்ரெஸுகள் வாசித்துக் கொடுத்தார்கள். அந்த அட்ரெஸுகளுக்கு வைஸ்ராய் தக்க விதமாய் பதிலளித்தார். இன்று காலையில் பம்பாயில் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கும் கப்பல் கட்டுமிடமாகிய அலெக்ஸாண்ட்ரா டாக்ஸுகளைத் திறந்து வைத்தார்.

லேடி ஹார்டிஞ்ஜ்:—இன்றையதினம் லேடி ஹார்டிஞ்ஜ் பம்பாயிலிருந்து இங்கிலண்டுக்குப் போனர்.

லார்ட் கிச்சனர்:—இன்று வங்காளத்து கவர்

னர் லார்ட் கார்மிகேல் முன் இந்திய ஸேனாதிபதியாயிருந்த லார்ட் கிச்சனரின் உருவச்சிலையை கல்கத்தா மைதானத்தில் திறந்துவைத்தார்.

கோதாவரி ஜில்லா கான்பரேன்ஸ்:—கோதாவரி ஜில்லா கான்பரென்ஸ் இன்று ராஜமகேந்த்ரவரத்தில் கூடிற்று. ஆனரபிள் ராவ்பகதூர் எம். ராமச்சந்த்ர ராவ் ப்ரெஸிடெண்டாக இருந்து, பாசன விஷயங்கள், லோகல் போர்டுகள் குளங்களின் சீர்திருத்தம், ஆந்த்ரக் கிளர்ச்சி முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசினார்.

23-தேதி.

பம்பாயில் தீவிபத்து:—பம்பாயைச் சேர்ந்த கொலாபாவில் பருத்திக்கிடங்கு ஒன்றில் நெருப்புப் பிடித்து வெகு சேதம் உண்டாகிவிட்டது. லக்ஷம் பஞ்சுமூட்டைகள் எரிந்து போயின. 125-லக்ஷம் ரூபாய் நஷ்ட மென்று மதிப்பிடப்படுகிறது.

24-தேதி.

வரதக்ஷிணை:—இன்று ஸாயந்திரம் கல்கத்தாவில் கூடின ஒரு மீட்டிங்கில் பல ஜனங்கள் வரதக்ஷிணை வாங்கிக் கல்யாணம் செய்யும் ஜனங்களுடன் சேருவதில்லை யென்று தீர்மானித்தார்கள்.

26-தேதி.

பம்பாயில் தீவிபத்துகள்:—சென்ற சில நாள்களாக பம்பாயில் சிறு தீவிபத்துகள் நேர்ந்து கொண்டிருக்கின்றன. இன்று மூன்று இடங்களில் நெருப்புப் பிடித்து கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

இந்திய பர்மா ஸங்கம்:—சென்னை மகாஜன ஸபை, பம்பாய் ப்ரெஸிடென்ஸி அஸோஸியேஷன், கல்கத்தா இந்தியன் அஸோஸியேஷன் ஆகிய இந்த ஸபைகளைப்போன்ற அமைப்புள்ளதாக இந்திய- பர்மா அஸோஸியேஷன் என்று ரங்கூனில் ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பொது ஜன விஷயங்களில் ஊக்கம் பாராட்டி, ஜனங்களுடைய க்ஷேமாபிவ்ருத்திக்கு உழைப்பதே இந்த ஸபையின் நோக்கமாகும்.

27-தேதி

கல்கத்தா ஸயன்ஸ் காலேஜ்:—கல்கத்தா ஸயன்ஸ்காலேஜின் அஸ்திவாரக்கல் இன்று கல்கத்தா யூனிவர்ஸிட்டியின் வைஸ்சான்ஸலராகிய ஸர் அஷுதோஷ் முகர்ஜியால் நாட்டப்பட்டது.

28-தேதி.

ஸீடெட் டிஸ்ட்ரிக்டுகளுக்கு ஒருகாலேஜ்:—கர்நூல் டிஸ்ட்ரிக்ட் காங்க்ரெஸ் கமிட்டியார் இன்று கர்நூலில் ஒரு மீட்டிங்கூடி கடப்பை, கர்நூல், பல்லாரி, அநந்தபூர் ஆகிய இந்த ஜில்லாக்கள் சேர்ந்த ஸீடெட் டிஸ்ட்ரிக்ட்ஸ் ப்ரதேசத்துக்கு ஸ்தாபிப்பதாக உத்தேசித்திருக்கும் காலேஜை கர்நூலிலேயே ஸ்தாபித்துநடத்தவேண்டுமென கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

31-தேதி.

தக்ஷிணத்தில் வெள்ளாமைக் குறைவு:—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த பூனா, ஸட்டாரா, ஷோலாபூர் ஆகிய இந்த ஜில்லாக்களில் பயிர் நஷ்டமாய்ப் போய்விட்டதால் தான்யங்களின் விலைவாசி உயர்ந்து போகுமென்றும், ஏழை விவஸாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுவார்களென்றும் சொல்லப்படுகிறது. கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு கடன்கள் கொடுத்தும் கிஸ்தியைத் தள்ளிக் கொடுத்தும் கிஸ்தி வஸூல் செய்வதை நிறுத்திவைத்தும் உதவி வருகிறார்கள்.

ஏப்ரல்மீ 1-தேதி.

பச்சையப்பன்காலேஜ் ஹோஸ்டல்:—இன்று சென்னைகவர்னர் சென்னை பச்சையப்பன் காலேஜுக்குப் புதிதாய் சேத்துப்பட்டில் கட்டப்படும் ஹோஸ்டலுக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டினார்.

2-தேதி.

பம்பாய்தீவிபத்துகள்:—பம்பாயில் சிலநாட்களாய் தீவிபத்துகள் அதிகமாக நேருவதால் பருத்தி மில்லுகள் இன்ஷூர் செய்திருக்கும் இன்ஷூரென்ஸ் கம்பெனிகளுக்கு ரொம்ப நஷ்டம் ஏற்படக்கூடும். அதனால் பம்பாயிலுள்ள தீவிபத்து இன்ஷூரென்ஸ் ஸங்கத்தார் தீவிபத்துகளின் காரணத்தையறிய வேண்டி, நெருப்பு வைத்தவர்களைக் கண்டு பிடிக்க துப்புச் சொல்லுபவர்களுக்கு 10,000-ரூபாய் இனும் கொடுப்பதாக போலீஸ் கமிஷனர் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

4-தேதி.

பித்தாபுரம் குமாரராஜா:—காலஞ்சென்ற வெங்கிடகிரி ராஜாவின் இரண்டாவது புத்ரரும் காலஞ்சென்ற பித்தாபுரம் ராஜாவின் தத்து புத்திரருமாகிய பித்தாபுரம் குமாரராஜா இன்று வெங்கிடகிரியில் காலஞ் சென்றார்.

வங்காளத்துகவர்னரும்அராஜகமும்:—இன்று வங்காளத்து சட்டஸபையில் வங்காளத்துகவர்னர் லாட் கார்மிகேல் தமதுமுடிவுரை ப்ரஸங்கத்தில் அராஜகத்தை யடக்குவதைப் பற்றிப் பேசினார். வங்காளத்தில் அரசாட்சிக்கு விரோதமாக குற்றங்கள் செய்பவர்களும், குற்றங்கள் செய்பவர்களுக்கு அனுகூலமாயிருப்பவர்களுமாக சில ஜனங்கள் இருந்து வருகிறார்களென்றும், அவர்களுடைய வலையில் சிறுவர்களும் பையன்களும் அகப்பட்டுக் கொள்ளக்கூடும் என்றும், அதனால் தேசத்தில் சீர்திருத்தங்கள் சீக்ரம் நிறைவேறுவது தடைபடுமென்றும், ஆகையால் தேசத்தின் முன்னேற்றத்துக்குக் கெடுதியாக சிறுவர்கள் எதுவும் செய்யாமலிருக்கும்படி பொது ஜனங்கள் சிறுவர்களுக்கு புத்திமதி கூறி அவர்களை நல்வழியில் இருந்துகொண்டு வரும்படி செய்யவேண்டுமென்றும், சொன்னார்.

5-தேதி.

ஆந்த்ர கீர்வாண வித்யாலயா:—ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் எம். ஒ. பார்த்தஸாரதி அய்யங்கார் இன்றையதினம் கோவூரில் புதிதாய் ஸ்தாபிக்க போகிற ஆந்த்ர கீர்வாண வித்யாலயத்துக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டினார். அந்தப் பள்ளிக்கூடத்தில் சிறுவர்களுக்கு ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, இங்க்லீஷ் ஆகிய மூன்று பாஷைகளும் கற்பிக்கப்படும்.

6-தேதி.

பம்பாய்ப் பருத்திமில்லுகளில் இன்னும் தீவிபத்து:—இன்றிரவு பம்பாய்க் கருகிலுள்ள கொலாபாவில் இரண்டு பருத்திக்கிடங்குகளில் நெருப்புப் பிடித்தது. ஸுமார் 15-லக்ஷம் ரூபாய் நஷ்டமிருக்கும். ஸுமார் 12,000-பஞ்சுமூட்டைகள் எரிந்து போய்விட்டன.

7-தேதி.

ஸர் பெஞ்சமின் ராபர்ட்ஸன்:—தென்னாப்ரிக்கா விசாரணைக்கமிஷனை யொட்டி இந்தியா கவர்ன்மெண்டின் ப்ரதிநிதியாக தென்னாப்ரிக்காவுக்குப் போயிருந்த ஸர்பெஞ்சமின் ராபர்ட்ஸன் இன்று பம்பாய்க்கு வந்துசேர்ந்தார்.

விவஸாயக் காலேஜில் பரிசளிப்புக் கொண்டாட்டம்:—இன்றையதினம் கோயம்புத்தூர் விவஸாயக் காலேஜின் பரிசளிப்புக் கொண்டாட்டம் நடைபெற்றது. விவஸாய டிரெக்டர் மிஸ்டர் சாட்விக் ப்ரெஸிடெண்டாக இருந்து மாணவர்களுக்கு டிப்ளோமாக்களும் பரிசுகளும் எடுத்துக் கொடுத்தார்.

8-தேதி.

நிர்மல காந்தராய்:—கல்கத்தாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரைக் கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட நிர்மலகாந்தராயை இரண்டுதடவை விசாரித்ததில் ஜூரிகளில் மெஜாரிட்டியார் அவர் குற்றவாளி யல்லவென்று சொன்னதன்மேல் ஜட்ஜ் ஜூரிகளின் அபிப்ராயத்தை ஏற்காமலிருந்போதிலும் கவ

ர்ன்மெண்டார் ப்ராஸிக்யூஷனை அந்தமட்டோடு நிறுத்தி விடுவதாகத் தெரிவித்ததன்மேல் ஜட்ஜானவர் குற்றவாளியை விடுதலை செய்துவிட்டார்.

9-தேதி.

வரதக்ஷிணைக்கு இன்னொரு பலி:—வங்காளத்தைச் சேர்ந்த டினஜ்பூரிலுள்ள ஒரு வக்கீல் தமது பெண்ணின் கல்யாணத்துக்கு வரதக்ஷிணை கொடுக்க முடியாமல் கஷ்டப்படுவதைக் கண்டு அவர் பெண் மனவருத்த முற்று அபின் சாப்பிட்டு இறந்து போனாள்.

10-தேதி.

தஞ்சாவூரில்கான்பரென்ஸுகள்:—இன்றைய தினம் தஞ்சாவூரில்ஜில்லா கான்பரென்ஸும், ஆசார சீர்திருத்த கான்பரென்ஸும், ப்ரும்ம ஞான கான்பரென்ஸும் நடைபெற்றன. ஜில்லாகான்பரென்ஸுக்குஆனரபிள் மிஸ்டர் கே. ராமய்யங்கார் ப்ரெஸிடெண்டாக இருந்தார். ஆசாரசீர்திருத்த கான்பரென்ஸுக்கு ஆனரபிள் ஸர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் ப்ரெஸிடெண்டாக இருந்தார். ப்ரும்மஞான கான்பரென்ஸுக்கு மிஸ்ஸஸ் பெஸண்டு ப்ரெஸிடெண்டாக இருந்தார். ஆசாரசீர்திருத்த கான்பரென்ஸில் தற்போதுள்ள ஜாதி ஏற்பாட்டால் ஜனஸமூக முன்னேற்றம் தடைபடுகிறதென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

11-தேதி:

கல்கத்தாவில் ஒரு இங்க்லீஷ் தமிழ்ப்பள்ளிக்கூடம்:—சென்னை ராஜதானியிலிருந்து கல்கத்தாவிற்குப் போய் அங்கு தங்கியிருக்கும் தமிழர்களுடைய சிறுவர்களுக்காக அங்கே ஒரு இங்க்லீஷ் தமிழ்ப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகிறது. அதன் பரிசளிப்புக் கொண்டாட்டம் இன்று ஸாயங்கிரம் நடைபெற்றது. வங்காளத்து அஸிஸ்டெண்ட்டிரெக்டர் அப் பள்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனுகிய மிஸ்டர் வொர்ட்ஸ் வொர்த் சேர்மனுயிருந்தார். அவருடைய மனைவி பரிசுகளை எடுத்துக் கொடுத்தார்.

தஞ்சாவூர் ஜில்லாகான்பரன்ஸ்:—இன்றைய திம் ஷை கான்பரென்ஸ் கூடி கண்ணம்பாடித் தேக்கம், க்ராமநிர்வாகம், நிலரெவின்யூ, நிலஸெஸ், தர்மஸொத்துக்களின் நிர்வாகச் சீர்திருத்தம் முதலியவைகளைப் பற்றித் தீர்மானங்கள் செய்தது.

ஆந்த்ரா கான்பரென்ஸ்:—இரண்டாவது ஆந்த்ரா கான்பரென்ஸ் இன்றையதினம் பெஜவாடாவில்கூடிற்று. ராஜமகேந்த்ரவரம்என்.ஸுப்பராவ் பந்துலு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். ஸ்வதேசக் கைத்தொழில்களையும் சித்ரகலைகளையும் ஆதரிக்கவேண்டுமென்றும், தெலுங்கில் ச்ரேஷ்டகவிகளாயிருந்தவர்களுடைய ஞாபகம் ஜனங்கள் மனவில் சாச்வதமாக இருந்து வரும்படி செய்து வரும் முயற்சிகளை ச்லாகித்தும் தீமர்னங்கள் செய்யப்பட்டன.

வைதீக ஆந்த்ர கான்பரென்ஸ்:—வைதீக ஆந்த்ர கான்பரென்ஸ் இன்று பெஜவாடாவில் கூடி விதவாவிவாகம், ருதுமதியான பின் விவாகம், வெவ்வேறு ஜாதிகளுக்குள் கல்யாணம் செய்வது, வெவ்வேறு ஜாதிகள் சேர்ந்துசாப்பிடுவது, கடல் யாத்ரை, ஆகிய இவைகள் சாஸ்த்ர விரோதமானவை யென்று தீர்மானங்கள் செய்தது.

12-தேதி.

ஆந்த்ரா கான்பரென்ஸ்:—ஆந்த்ரா கான்பரென்ஸ் இன்று மறுபடியும் கூடி, நெல்லூரிலும், சித்தூரிலும் காலேஜுகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், தெலுங்கு ப்ரதேசத்தில் பெண்களுக்கு இரண்டு ஹைஸ்கூல்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஸ்கூல்பைனல் வகுப்புகளுக்கு தேச பாஷைகள் மூலமாய்ப்பாடங்கள் கற்பிக்க வேண்டுமென்றும், தெலுங்குப்ர

தேசத்தை தனிமாகாணமாக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்தது.

13-தேதி.

சக்கராப்பள்ளி உத்ஸவம்:—இந்தவருஷம் சக்கராப்பள்ளி ஸப்தஸ்தான உத்ஸவம் வெகு விமரிசையுடன் நடந்தேறிற்று. சென்றவர்ஷம் கலகம் நடந்ததுபோல் இந்த வர்ஷமும் நடக்காதபடிக்கு தக்க போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது.

15-தேதி.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்:—மிஸ்டர் சேஷகிரி அய்யருக்கு ஜட்ஜ உத்யோகம் ஆனதை யுத்தேசித்து சென்னை ஹைகோர்ட் வக்கீல் ஸங்கத்தார் இன்று அவருக்கு ஒரு விருந்துக் கச்சேரி வைத்து உபசரித்தார்கள்.

17-தேதி:

ரேவரண்ட் ஸி. எப். ஆண்ட்ருஸ்:—தென்னாப்ரிக்கா இந்தியர்களின் விவாத விஷயமாய் தென்னாப்ரிக்காவுக்குப் போய் பிறகு இங்லண்டுக்கு போயிருந்த ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் இன்றையதினம் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்.

18-தேதி.

கேய்க்வார்:—இன்றையதினம் கெய்க்வார் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுப் போனார். அவர் ஐரோப்பாவில் ஆறுமாஸம் இருப்பாராம்.

FOREIGN NEWS.

அந்யநாட்டு சமாச்சாரங்கள்.

13-தேதி.

லார்ட் க்ரூ:—இந்திய மந்த்ரியாகிய லார்ட் க்ரூ இன்று ஒரு விருந்துக்கச்சேரியில் திடீரென்று அஸௌக்ய மடைந்துவிட அவரை அவருடைய மாளிகைக்குக் கொண்டு போய் வைத்யம் செய்தார்கள். லார்ட் க்ரூ குணமடைந்து வருகிறார்.

பால்கன் நிலைமை:—பால்கன் நிலைமை த்ருப்தியாயில்லை யென்றும், திடீரென்று பால்கன் நாடுகளுக்குள் மனஸ்தாபங்கள் நேரிடலாமென்றும், ஆகையால் அதிகமாக புது ஸைன்யங்களுக்கு யுத்த வீரர்கள் சேர்க்க வேண்டுமென்றும், ஆஸ்ட்ரியா தேசத்து தேசபாது காப்புமந்த்ரி இன்று ஆஸ்ட்ரியாவின் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

14-தேதி.

பால்கன் நிலைமை:—துருக்கிக்கும் ஸெர்வியாவுக்கும் ஸமாதான உடன்படிக்கையாகி உடன்படிக்கைப் பத்ரம் கையெழுத்திடப்பட்டது.

17-தேதி.

லார்ட் க்ரூ:—லார்ட் க்ரூ முற்றிலும் குணமடைந்து விட்டார். இன்று வெளியில் உலாவப் போனார்.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்:—தென்னாப்ரிக்கா விசாரணைக்கமிஷன் இன்று தமது ரிபோர்ட்டை கவர்ன்மெண்டாரிடம் கொடுத்தார்கள். 3-பவுன் வரியைத் தள்ளிவிடுதலும், கல்யாண விஷயமான கஷ்டத்தை நிவர்த்திசெய்தலும், அந்த ரிபோர்ட்டின் முக்ய சிபார்சுகளாம்.

21-தேதி.

தக்ஷிண த்ருவ ஆராய்ச்சி:—தக்ஷிண த்ருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக 1915-ம் வருஷம் ஒரு கூட்டத்தார் புறப்படுவார்களென்றும் அவர்கள் 5-வருஷம் வரையில் திரும்பமாட்டார்களென்றும் தெரிகிறது.

24-தேதி.

தென்னாப்பிரிக்கா இந்தியர்கள்:—தென்னாப்பிரிக்கா விசாரணைக்கமிஷன் செய்திருக்கும் சிபார்சுகளை ஆதாரமாகக்கொண்டு சட்டம் ஏற்படுத்த அடுத்ததென்னாப்பிரிக்கா பார்லிமெண்டில் மசோதா கொண்டுவரப்போவதாக தென்னாப்பிரிக்கா மந்த்ரிகளில் ஒருவராகிய ஜெனரல் ஸ்மட்ஸ் தெரிவித்திருக்கிறார்.

27-தேதி.

ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதிகள்:—அமெரிக்காஐக்ய மாகாணங்களைச் சேர்ந்த மஸ்ஸாசுஸ் ஸட்ஸ் என்னும் மாகாணத்தில் ஸ்த்ரீகளுக்கு வோட்டுக்கொடுக்கும் பாத்யதை கொடுப்பதாக சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

28-தேதி.

ப்ரிட்டிஷ் கோலம்பியாவிலுள்ள இந்தியர் சள்:—கனடா தேசத்தைச் சேர்ந்த ப்ரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலுள்ள ஹிந்துக்கள் கனடாவுக்குள் ஹிந்து ஸ்த்ரீகள் குடியேறுவதைப்பற்றி இந்தியாவின் வைஸ்ராயினிடம் கண்டு பேச ஒரு டெபுட்டேஷன் அனுப்பியிருக்கிறார்கள்.

ஏப்ரல்மீ 2-தேதி.

ஒரு ரயில்வண்டி விபத்து:—அமெரிக்காவிலுள்ள படேவியாவில் ஒரு ரயில்வண்டித் தொடர் ஒரு எருமைமேல் மோதிக்கொண்டு தண்டவாளத்தைவிட்டு நகர்ந்துவிட்டது. 5 வண்டிகள் அருகிலிருந்த ஒரு ஆற்றில் விழுந்துவிட்டன. 20 பேர் இறந்துபோய்விட்டார்கள்.

3-தேதி.

கப்பல் விபத்து:—வடஅமெரிக்காவின் கிழக்கேயுள்ள ந்யூஸீலண்ட் தீவு ஓரமாய் ஸீல் என்னும் மீன்பிடித்துக்கொண்டிருந்த சில கப்பல்கள் பனி மழைக்காற்றில் அகப்பட்டுக்கொண்டதில் அநேகம்பேர்கள் இறந்தும், நோய்ப்பட்டும் போய்விட்டார்கள். இரண்டொரு கப்பல்கள் போனவிடம் தெரியவில்லையாம்.

6-தேதி.

மதுவிலக்கு:—அமெரிக்க ஐக்யமாகாணங்களைச் சேர்ந்த யுத்தக்கப்பல் துறைமுகங்களில் கப்பல்களிலுள்ளவர்கள் மதுபானம் செய்யக்கூடாதென்று அந்த தேசத்து கப்பல் படை மந்த்ரி உத்தரவு செய்திருக்கிறார்.

7-தேதி.

வாரத்துக்கு இரண்டு சீமைத் தபால்கள்:—இந்தியாவுக்கு வாரத்துக்கு இரண்டு தபால்கள் போக்குவரத்து ஏற்படுத்துவதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்து வருவதாக இன்று பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது.

9-தேதி.

ப்ரிட்டிஷ் கோலம்பியாவில் ஜப்பானியர்கள்:- ப்ரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள வாங்கூவர் பட்டணத்தின் விடி கௌன்ஸில் என்னும் ஸபையார் பள்ளிக்கூடங்களில் ஜப்பானியச் சிறுவர்களைத்தனியாக உட்காரவைத்து பாடங் கற்பித்து வரவேண்டுமென்று சட்டஞ்செய்யப் போகிறார்களாம். அங்குள்ள ஜப்பான் கான்ஸல் அந்தச்சட்டத்தால் கனடாவுக்கும் ஜப்பானுக்கும் மனஸ்தாபம் நேரிடுமென்றுசொல்லி ஆக்ஷேபித்திருக்கிறார்.

11-தேதி.

காலஞ்சென்ற ஜப்பான் சக்ரவர்த்தினி:—காலஞ்சென்ற ஜப்பான் சக்ரவர்த்தியின் மனைவியார் காலஞ்சென்றுவிட்டார். அதற்காக ஜப்பானில் ஒரு வருஷம் துக்கங்கொண்டாடும்படி உத்தரவாயிருக்கிறது.

13-தேதி.

சீனாவில் அமைதியின்மை: — சீனாவிலுள்ள நான்கின் பட்டணம் அமைதியாயில்லாததால் உத்யோகஸ்தர்கள் மிகவும் கவலையாயிருக்கிறார்கள். கலகக்காரர்களை கண்டுபிடிக்க ரொம்ப முயற்சிகள் செய்துவருகிறார்கள். அங்கே யுத்தச்சட்டம் வெகுகடுமையாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஒரு பைத்யங்கொண்ட சிப்பாய்:—வாவிரிஸ்டானைச் சேர்ந்த டாங்க் என்னும் ஊரில் ஒரு சிப்பாய் பைத்யங்கொண்டு இரண்டு ராணுவ உத்யோகஸ்தர்களையும் வேறு இரண்டு சிப்பாய்களையும் சுட்டுக்கொன்று வேறு சில

ரைக்காயப்படுத்திவிட்டான். அவனை ஒரு கான்ஸ்டபிள் சுட்டுக்கொன்ருன்.

15-தேதி.

ஆப்கானிஸ்தானம்: — ஆப்கானிஸ்தானத்தின் அரசராகிய அமீர் தமது சைன்யத்தை அதிகப்படுத்துவதற்காக தமக்குக் கீழ்ப்பட்டுள்ள ஜாதிகளில் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு சைன்யங்கள் அனுப்பப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிருர்.

16-தேதி.

துருக்கி நாஷனல் பாங்கி:—துருக்கியிலுள்ள நாஷனல் பாங்கியை ப்ரான்ஸின் தலைநகராகிய பாரிஸிலுள்ள சில பாங்கிக்காரர்கள் விலைக்கு வாங்கப்போகிருர்களாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அநேகமாய் முடிவடைந்துவிட்டன.

நூறுவருஷ ஸமாதானம்:—இங்கிலண்டுக்கும் அமெரிக்கா ஐக்ய மாகாணங்களுக்கும் நூறு வருஷம் ஸமாதானம் விட்டுப்போகாமல் இருந்ததற்கு ஞாபகார்த்தமாக அமெரிக்காவின் ப்ரெஸிடெண்டாக இருந்த லிங்கனுடைய உருவச்சிலை யொன்றை லண்டனிலும், விக்டோரியா ராணியின உருவச்சிலை யொன்றை ஐக்யமாகாணங்களின் தலைநகராகிய வாஷிங்டனிலும் வைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

17-தேதி.

·ட்ரிப்போலியில் சண்டை:—ஒரு பெரிய இத்தாலிய சைன்யத்தை ட்ரிப்பொலியிலுள்ள கலகக்காரர்களில் இரண்டாயிரம் பேர் எதிர்த்து சண்டை செய்தாகள். கலகக்காரர்களுக்கு ரொம்ப சேதமாம். இத்தாலியர்களில் ஆறு பேர் இறந்துபோனுர்கள்.

18-தேதி.

இந்தியர்களைத் தடுத்தல் :— கொலம்பியாவிலுள்ள வான்குவார் நகரைப்போய்ச் சேரும் உத்தேசத்துடன் 400 ஹிந்துக்கள் சைனுவிலுள்ள ஷாங்கே துறைமுகத்திலிருந்து புறப்பட்டு விட்டார்களென்பதைப்பற்றி, கனடா காமன்ஸ் ஸபையில் வான்குவார் நகர மெம்பர் ஒருவர் கேள்வி கேட்டார். ஹிநதுக்கள் இறங்குவதைத் தடுக்கும்படி இமிகிரேஷன் உத்யோகஸ்தருக்கு உத்தரவு செய்தாய்விட்டதென்று உள்நாட்டு மந்திரி பதில் அளித்தார்:

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1914ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஹு ஏப்ரல்மீ 27உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	2·95	0·73
வால்டேர்	1·99	0·78
காக்கிஞடா	ს·53	0·53
மசூலிப்பட்டணம்	0·90	0·60
நெல்லூர்	2·31	0·39
மதராஸ்	2·05	0·58
கடலூர்	1·54	0·68
நாகபட்டணம்	0·18	0·63
பாம்பன்	0·05	1·87
கொழும்பு	3·70	9·56
திருவநந்தபுரம்	2·27	4·03
கொச்சி	0·04	4·55
கள்ளிக்கோட்டை	...	3·46
மங்களூர்	...	1·29
மெர்க்காரா	0·03	2.24
ஐதராபாத்	0·14	0·93
பல்லாரி	0·47	0·75
கர்நூல்	0·20	0·62
கடப்பை	0·48	0·48
ஹாஸ்ஸான்	0·40	2·00
பெங்களூர்	3·84	1·13
கொடைக்கானல்	3·46	3·73
உதகமண்டலம்	1·79	1·90
கோயம்புத்தூர்	...	1·49
வேலூர்	3·06	0·73
சேலம்	0·65	1·72
திருச்சிஞப்பள்ளி	1·50	1·42
புதுக்கோட்டை	2·81	1·21
மதுரை	2·42	1·94
திருநெல்வேலி	0·23	2·70

Calendar—பஞ்சாங்கம்

அம்ருதாதி.	லக்ன பாக்கி	அகர் மாந	துலு	இங்	தமி	வா	48-ஆனந்த௵ சித்திரைமீ உத்தராயணம்-வசந்தருது { கொல்லம்-1089 பஸலி-1323 { இங்கிலீஷ் - 1914 மே-ஜூன்மீ } ஹிஜரி-1332 ஜமாதிலானி-ரஜ்ஜப்
யோகம்.	கா வி	கா வி	உ	உ	உ	ம்	[ய,அபதந்தம்-24-59,விஷ்ணுபதிபுண்யகால,குன்யார்க்கம்
சி	5 6	31 14	18	14	1	வி	பஞ்-22-6,பூரா-6-5,சுப48-16,கர-51-31,தி-26-2,ரிஷபரவி-7-4,ரிஷபகுன்யதிசாந்திரபஞ்சமீ ஷஷ்டிதிதித்வ
சிம	4 56	14	19	15	2	வெ	ஷஷ்-21-28,உரா-6-38,சுப-45-57,பத்-51-58,தி-16-56,ரிஷபகுன்யதி,சாந்திரஅதிதி,அபஆதி,18-44,சிரவண
சி	47	15	20	16 (ரிஷபம்)	3	ச	ஸப்-23-0,சிர-9-21,பிரா-45-17,பால-54-31,தி-20-0,ரிஷபஸப்தமீதி,காலாஷ்டமி [உபவாசரங்கூனில்சாந்திர [ஷஷ்டீதி
மசி	(ரிஷபம்) 47	16	21	17	4	ஞா	அஷ்-26-28,அவி-13-59,பா-46-1,தை-58-49,ரா-2-29
சி	27	17	22	18	5	தி	நவ-31-29,சத-20-13,வை-47-50,கர-31-29,ரா-6-49,வைசிரா
மஅ	17	18	23	19	6	செ	தச-37-32,பூட்-29-31,விஷ்-50-20,வணி-4-25,ரா-23-21
சிஉ	8	19	24	20	7	பு	ஏகா-44-0,உட்-35-21, பிரீ-53-5,பவ-10-45,ஸர்வஏகா,கரிநாள்
சிஅ	3 58	20	25	21	8	வி	த்வா-50-26,ரே-439,ஆயு-55-44,கவு-17-16,தி,9-17,மிதுநயன-55-19
அசி	48	21	26	22	9	வெ	த்ர-56-20,அசு-50-30,ஸவு-57-57,கர-23-29,ரா-7-59,ப்ரதோஷம் [ழற்சிக்கர்
சிஅ	38	22	27	23	10	ச	சசி-60-0,பர-57-6,சோ-59-34,பத்-28-59,தி-17-14,மாஸசிவரா,த்ரிதினஸ்பிருச்,க
சி	29	23	28	24	11	ஞா	சசி-1-24,கிரு-60-0,அதி-60-0,சது-33-35,தி-30-2,ஸர்வஅபா,கிருத்திகை
மஅ	19	23	29	25	12	தி	● 5-31,கிரு-2-45,அதி-0-26,கிம்-37-12,ரா-14-38,பிண்டபிதிரு,இஷ்டி,பிரதக்ஷிணம்,கரவீர
அசி	9	24	30	26	13	செ	ப்ர-8-38,ரோ-7-29,சுக-0-32,உப-59-19,பால-39-49,தி-22-27,ஜ்யேஷ்டசுத்த,சந்திரதர்சனம் [விருத,புஷ்கரா
சி	2 59	25	1	27	14	பு	த்வி-10-43,மிரு-11-12,குல-58-24,தை-41-24,ரா-1-54,ரம்பாவிருத,அக்னிநாள்முடிவு-58-47
மஅ	50	26	2	28	15	வி	த்ரி-11-51,திரு-13-59,கண்-55-11,வணி-42-3,ரா-13-36,சதுர்த்திவிரு,உமாவதாரம்,இராமா
சிஉ	40	27	3	29	16	வெ	சது-11-59,புன-15-47,விரு-53-11,பவ-41-40,ரா-4-45,சரிநாள,திவாமா,நமிநந்தி,சேக்கிழார்
சிம	30	28	4	30	17	ச	பஞ்-11-6,பூச-16-36,துரு-49-20,கவு-40-16,ரா-17-11,ஷஷ்டியுபவா,கரிநாள்,சோமாசிமாறர்
சிம	20	28 (ரஜப்)	5	31	18	ஞா	ஷஷ்-9-10,ஆயி-16-23,வியா-44-39,கர-37-47,ரா-14-25
மசி	11	29	6	1	19	தி	ஸப்-6-8,மக-15-4,ஹர்-39-2,பத்-34-12,ரா-2-56
சிஅ	1	29	7	2	20	செ	அஷ்-1-59,உப-54-45,பூர-12-38,வஜ்-32-32,பால-29-30,தி-29-41,அவம
அம	1 51	30	8	3	21	பு	தச-50-27,உத்-9-27,ஸித்-25-9,தை-23-42,தி-28-39,தசஹரா,ஆனந்தயோக
சிசிஅ	41	31	9	4 (ஜூன்)	22	வி	ஏகா-43-21,ஹஸ்-4-38,உப-54-44,விய-17-0,வணி-16-59,தி-22-57,வியசிரா,ஸர்வஜீவவாரசிர்ஜலஏகாதசி
சி	32	31	10	5	23	வெ	த்வா-35-39,சுவா-53-33,வரீ-8-15,உப-50-51,பவ-9-33,தி-12-2,ப்ரதோஷம்
சி	22	32	11	6	24	ச	த்ர-27-39,விசா-47-35,சிவ-49-52,கவு-1-39,கர-53-39,தி-6-8,ரா-25-5,த்ரயோதசி
ம	12	32	12	7	25	ஞா	சசி-19-44,அனு-41-52,சித்-40-51,பத்-45-56,சே-0-36,ரா-23-5,திதிதவய,வடசாவித்ரீவிரு
சி	2	33	13	8	26	தி	○ 12-19,கேட்-36-49,சாத்-32-22,பால-38-55,ரா-23-49,பிரதமாதி,மன்வாதி,இஷ்டி
அசி	0 53	33	14	9	27	செ	ப்ர-5-47,மூல-32-51,சுப-24-46,தை-32-59,தி-29-4,ரா-24-9,ஜ்யேஷ்டபகுள,திருஞானசம்பந்தர்,முருகர்,திருநீலநக்கர்,திருநீலகண்டயாழ்ப்பாணர்.
அ	43	33	15	10	28	பு	த்வி-0-34,உப-56-27,பூரா-30-25,சுப்-18-20,வணி-28-34,ரா-18-25,அவம,இராமா
சி	33	34	16	11	29	வி	சது-55-22,உரா-29-42,பிரா-13-20,பவ-25-57,ரா-8-14,சங்கடசதுர்த்தி,திவாமா,சிரவணஉப (ரங்கூன் அவம)
மசி	23	34	17	12	30	வெ	பஞ்-55-46,திரு-31-0,மா-9-56,கவு-25-19,ரா-9-51,ரிஷபபஞ்சமீதி,வைசிரா
சிஅ	0 14	31 34	18	13	31	ச	ஷஷ்-58-9,அவி-34-18,வை-8-8,கர-26-43,ரா-22-6,ரிஷபஷஷ்டீதி,(ரங்கூன் த்ரிதினஸ்பிருக்)

	பு	ர-சு சனி	
ரா	3-ரிஷ-பு 7-மிது-சு		செ
குரு	17-மிது-பு 31-சிம்-செ		கே